கோகுலம்

GOKULAM


ப்ரல் '92 ரூ. 3/-




அருமைக் குழந்தைகளே!
உங்களால் ஜானி ஜோக்கரை
ஆட வைக்க முடியுமா?
முடியும்!
கோரஸ் ப்ரிட்
பவர் கொண்டு!
இது எடுப்பானது!
இது சுத்தமானது!
கோரஸ் ப்ரிட் க்ளு ஸ்டிக் உதவியுடன் வேலை செய்யும் ஆனந்தமே தனி. இது எளிது, விரைவானது, சுத்தமானது. லிக்விட் கம் போன்று பிசுபிசுவென்று ஆகாது.
வண்ணக் காகிதம் மற்றும் கோரஸ் ப்ரிட் க்ளு ஸ்டிக் கொண்டு அழகிய பொருட்களை உருவாக்குங்கள். ஸ்கூல் ப்ராஜெக்டுகள், க்ராஃப்ட் வேலைகள், அப்பா அம்மா மற்றும் நண்பர்களுக்குப் பரிசுப் பொருட்கள் முதலியன தயாரியுங்கள். கைவினை பொருட்கள் செய்வதற்கும், கோரஸ் ப்ரிட் க்ளு ஸ்டிக்கிற்கு இணை ஏதும் இல்லை.
இரண்டு அளவுகளில் கிடைக்கிறது
18 கிராம் & 9 கிராம் நிகர எடை.
கோரஸ்
Pritt
SUPER
Glue Stick
Marketed by
Kores (India) Ltd.
Worli, Bombay 400018
Kores
இலவசம்! ஜானி ஜோக்கர் செய்யும் வழிகாட்டி : இன்றே 1 ரூபாய் தபால் கவரை சொந்த முகவரி எழுதி அனுப்பவும்
கோரஸ் (இந்தியா) லிட்., தபால் பெட்டி எண். 6558, வொர்லி, பம்பாய் 400 018

கோகுலம்

1992 - ஏப்ரல் மாத இதழ்
மலர் : 10 இதழ் : 3



அருமைச் சிறுவர் சிறுமியரே,

உங்கள் அனைவருக்கும் இனிமையான தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துகள். உலகத்தில் வன்முறையும், போர் அபாயமும் விலகி மனிதகுலம் அமைதியாக வாழ இந்தப் புத்தாண்டு உதவ வேண்டும் என இறைவனை வேண்டுவோம்.

முஸ்லீம் வாசகர்கள் அனைவருக்கும் கோகுலத்தின் மனமார்ந்த ஈத் பெருநாள் வாழ்த்துகள்.

இந்த இதழ் உங்கள் கைகளில் தவழும் போது பெரும்பாலானவர்களுக்கு ஆண்டுத் தேர்வு முடிந்திருக்கும். அல்லது நடந்து கொண்டிருக்கும். கோகுலம் வாசகர்கள் படிப்பில் புலிகளாயிற்றே என்று நீங்கள் கேட்பது தெரிகிறது. கோடை விடுமுறை நெருங்கிக் கொண்டிருக்கிறது. அடுத்த இதழில் உங்களுக்குப் பொழுது போக்க உதவக்கூடிய பல அம்சங்களைத் தர முயன்று வருகிறோம்.

இடமில்லாத காரணத்தால் போன இதழில் 'கேட்டால் சொல்லப்படும்' பகுதி இடம் பெறவில்லை. ஏ' அப்பா! இதைக் கண்டித்து எத்தனை கடிதங்கள்! சில ஆசிரியர்கள் கூட இதற்கு வருத்தம் தெரிவித்திருக்கிறார்கள். இனி இந்த மாதிரி நடைபெறாது. மகிழ்ச்சி தானே?

'என்னிடம் கதை இருக்கிறது. பாடல் இருக்கிறது அனுப்பட்டுமா? படங்களையும் நாங்களே போட்டு அனுப்ப வேண்டுமா?' என்று பலரும் எழுதிக் கேட்கிறார்கள். இதையெல்லாம் நீங்கள் கேட்கவே வேண்டாம். மற்றவர்கள் படித்து, சுவைக்கக்கூடிய நல்லது எதையும் நீங்கள் தயங்காது அனுப்பி வைக்கலாம். தகுதியுள்ளவை பிரசுரமாகும். படங்களை நீங்கள் போட வேண்டாம். அது எங்கள் பொறுப்பு. ஆனால் எல்லாம் உங்கள் சொந்தச் சரக்காக இருக்க வேண்டும் என்பது தான் முக்கியம். அறிவியல் செய்திகளைத் தருவோர், அதற்கான ஆதாரங்களைக் குறிப்பிட வேண்டும்.

அதிக அளவில் குழந்தைகள் பங்கு கொள்ளும் பத்திரிகையாக கோகுலம் மாறி வருவதை நீங்கள் கவனித்திருப்பீர்கள். அதனால் நீங்கள் எதையும் அனுப்பும்போது மறக்காது உங்கள் வயதைக் குறிப்பிடுங்கள்.

இதழுக்கு இதழ் விறுவிறுப்புடன் வெளிவந்து கொண்டிருக்கும் தொடர்கதை 'மலைக் கோட்டை மர்மம்' அடுத்த இதழில் முடியப் போகிறது. வெகு விரைவில் புதிய தொடர்கதையும் தொடங்கப் போகிறது. உங்கள் மனங்கவர்ந்த ஒரு எழுத்தாளர் எழுதப் போகிறார்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

அன்புடன்

(கௌரவ ஆசிரியர்)


உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் - பாரதியார்.





இந்த இதழில்...

நல்ல தோழன் - பக்கம் 11






தாவரங்களில் அதிசயங்கள் - பக்கம் 23




உடும்பு பிடித்தால் விடுமா? - பக்கம் 17



கோமதியும் குட்டி யானையும்! - பக்கம் 39



அப்பள ராஜா! - பக்கம் 71



ஏப்ரல் பிறக்கிறது ஏமாறாதீர்கள்! - பக்கம் 84



வலிமைக்கு வாலி! - பக்கம் 45

ரம்ஜான்



◆ மனதுக்கும் உடலுக்கும் புத்துணர்வு கிடைக்கிறது - ஷெய்தா ஷப்னம்

ஏழு வயது ஆன ஒவ்வொரு முஸ்லீமும் ரம்ஜான் நோன்பை மேற்கொள்ள வேண்டும். நோன்பு முடிந்தவுடன் ரம்ஜான் பண்டிகை.

ரம்ஜான் நோன்பை மேற்கொள்ளும் சில சிறுவர்கள் தங்களது அனுபவம், நோன்பைத் தாங்கள் புரிந்து கொண்ட விதம், ஆகியவற்றை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறார்கள்.

1. ஷெய்தா ஷப்னம்

(SHAISTHA SHABNUM) :

ரம்ஜான் நோன்பை நாங்கள் ரோஸா (ROZA) என்று அழைக்கிறோம். முப்பது நாட்கள் வானத்தில் சந்திரனுடைய தோற்றத்தைக் கணக்கிட்டு, இந்த ரம்ஜான் மாதத்தில் முதல் அமாவாசையன்று நோன்பைத் துவக்கி, அடுத்த அமாவாசை தினத்தில் நோன்பு முடிக்கப்படுகிறது. பகல் முழுவதும் உணவோ, தண்ணீரோ அருந்தாமல் விரதம் மேற்கொள்கிறோம். அ த ா வ து



◆ தினப்பட்டினி கிடக்கும் ஏழைகள்பால் ஒரு புதிய ஈடுபாட்டை ஏற்படுத்துகிறது - ஆர். ஜபீன்

சூரிய உதயம் துவங்கி அஸ்தமனம் வரை இவ்வாறு கண்டிப்பாக இருக்கிறோம். அஸ்தமனத்திற்கு மேல், மறுநாள் உதயத்துக்கு சுமார் ஒன்றரை மணி நேரம் முன்னால் வரை உணவு எடுத்துக் கொள்ளலாம். அதிகாலை சுமார் நாலரை மணிக்குப் பக்கத்து மசூதியிலிருந்து அஸான்

கொண்டாடுகிறேன்

(AZAN) ஒலிக்கும். அப்போதிலிருந்தே உண்ணா நோன்பை மேற்கொள்கிறோம். அதற்காக, முன்னாலேயே எழுந்திருந்து சாப்பாட்டை முடித்துக் கொண்டு விடு வோம். அஸான் ஒலித்த பிறகு பிரார்த் தனையில் ஈடுபடுவோம். நியத் (NIATH) என்று அழைக்கப்படும் இந்த பிரார்த்தனை முடிந்த பிறகு,வழக்கமான தினசரி அலுவல் களில் ஈடுபடுவோம். பெரும்பாலும் பள்ளி விடுமுறை சமயத்தில் (முழுப் பரீட்சை விடுமுறை) இந்த நோன்பு மேற்கொள்வ தால் ஒரு வசதி. எங்களுடைய பசியையும், உண்ணும் ஆவலையும் கட்டுப்படுத்திக் கொள்ள முடிகிறது. பள்ளி நாட்களிலேயே ரம்ஜான் நோன்பு வருமானால், வழக்கம் போல பள்ளிக்கும் சென்று வருவோம்; பாடத்திலும் க வ ன ம் செலுத்துவோம். நோன்பு காரணமாக எந்த ஒரு தினசரிப் பணியும் பாதிக்காது. மாலையில் ஆறரை மணிக்கு மேல் (சூரிய அஸ்தமனத்துக்குப் பிறகு) மீண்டும் (நியத்) பிராத்தனை செய்து விட்டுப் பிறகுதான் சாப்பிடு வோம். காலை செய்யும் பிரார்த்தனையில், அன்றைக்கு நா ங் க ள் மேற்கொள்ளும் நோன்பை வெற்றிகரமாக முடிக்க எங்களுக் குத் தேவையான மன, உடல் வலிமையைக் கொடுக்கும்படி வேண்டிக் கொள்வோம். அதே போல் மாலைப் பிரார்த்தனையில்,



☛ ஏழைகளும் இந்தக் கொண்டாட்டத்தில் பங்கு கொள்ள வேண்டும் என்பதுதான். - எம். எச். லபேர்.

அன்றைக்கு நோன்பை எவ்விதமான இடையூறும் இல்லாமல காத்ததற்கு நன்றி சொல்வோம்.

இவ்வாறு ஒரு மாதம் முழுவதும்



✤ உயரிய மனிதப் பண்புகளை வளர்த்துக் கொள்ள இந்த நோன்பு உதவுகிறது - ஆர். யாஸ்மின்

இருப்பதால் மனதுக்கும் உடலுக்கும் புத்துணர்வு கிடைக்கிறது. அமைதியாக இருக்க முடிகிறது. நம்மை அறியாது நமக்குள் ஒரு நம்பிக்கை உருவாகிறது. எதற்கும் எரிச்சல்படாது யாருக்கும் துன்பம் விளைவிக்காமல், பிறர் நமக்கு அளிக்கும் துன்பத்தையும் கூடப் பொறுத்துக் கொண்டு அவர்களை மன்னிக்கும் மனப்பக்குவமும் வந்து விடுகிறது.

2. ஆர். ஜபீன் :

(R. JABEEN) :

நோன்பின் காரணமாக பசியின் வலிமையைப் புரிந்து கொள்ள ஒரு வாய்ப்புக் கிடைக்கிறது. வறுமை காரணமாக தினப் பட்டினி கிடக்கும் ஏழைகள் பால் ஒரு புதிய ஈடுபாட்டை இந்த நோன்பு நமக்கு ஏற்படுத்தி வைக்கிறது. அன்பும் இரக்கமும் கொள்கிறோம்.

3. ஆர். யாஸ்மின்

R.YASMIN) :


ரம்ஜான் நோன்பு இருப்பதால் நாக்கு மனம் இரண்டையும் கட்டுப்படுத்த முடியும். அதிலும் நாக்கைக் கட்டுப்படுத்துவதால்தான் அதிகப் பலன் கிடைக்கிறது. உணவு எடுக்காமல், நாக்கைக் கட்டுப்படுத்துவதை மட்டும் நான் சொல்லவில்லை; பிறர் மனம் புண்படும்படி பேசாமல் நாக்கைக் கட்டுப்படுத்துவதையும் சேர்த்துச் சொல்கிறேன். ரம்ஜான் மாதத்தில் சண்டை பிடிக்கும் குணத்தையும், வலிய வரும் சண்டைகளைக்கூட தவிர்த்து விடும் குணத்தையும் நம்மால் மேற்கொள்ள முடியும். பணிவு, அடக்கம் ஆகிய உயரிய மனிதப் பண்புகளை நமக்குள் வளர்த்துக் கொள்ள இந்த நோன்பு பெரிதும் உதவுகிறது.

4. எம். எச். ஸுபேர்

(M. H. ZUBEIR) :

ரம்ஜான் நோன்பு முடித்துப் பண்டிகையைக் கொண்டாடும் முதல் நாள் ஏழைகளுக்கு உணவளித்து அவர்கள் பசியைப் போக்குவது ஒரு முக்கிய கடமையாகும். ஒவ்வொரு ஆண்டும் அருகாமையில் உள்ள மசூதியில், இன்னார் இன்ன அளவு செலவு செய்து ஏழைகளுக்கு உணவளிக்க வேண்டும் என்று தீர்மானிக்கிறார்கள். அதன்படி கோதுமை அல்லது அதே அளவு அரிசி அல்லது அந்த மதிப்புக்கு பணமாக அக்கம் பக்கத்தில் உள்ள ஏழைகளுக்கு அளிக்கிறோம். இதன் முக்கிய நோக்கம் - ரம்ஜான் பண்டிகையை நாம் கொண்டாடும் போது, நம் அக்கம் பக்கத்திலிருக்கக்கூடிய ஏழைகளும் அந்தக் கொண்டாட்டத்தில் பங்கு கொள்ள வேண்டும் என்பதுதான்.

பேட்டி, படங்கள் : பிரபு சங்கர்
அட்டை வண்ணப்படம் : ஆளூர் ஜலால்
அட்டையில் : முக்தசீர், ஷமீமா



★ உலக நாடுகளில் உள்ள எல்லா நாட்டுத் தேசியக் கொடிகளையும் ஆராய்ந்ததில் நட்சத்திர சின்னம்தான் மிக அதிகக் கொடிகளில் இடம் பெற்றுள்ளது என்பது தெரியவந்துள்ளது. 46 கொடிகளில் நட்சத்திரம் இடம் பெற்றுள்ளது. 9 கொடிகளில் வளர்பிறைச் சின்னம் இடம் பெற்றுள்ளதாம்!

- தா. ஷேக் உசேன், செஞ்சி.

குருடர்கள்!



அக்பர் ஓர் நாள் பீர்பலைப் பார்த்து, ''உலகத்தில் குருடர்களின் எண்ணிக்கை அதிகமா? கண் பார்வை உள்ளவர்களின் எண்ணிக்கை அதிகமா?'' என்று கேட்டார். 'குருடர்களின் எண்ணிக்கைதான் அதிகம்' என்றார் பீர்பல். தாம் கூறியதை ஆதாரபூர்வமாக நிரூபிக்க விரும்பிய பீர்பல், ஒரு துணியைக் கொண்டு வந்து தம் தலையில் சுற்றிக் கொண்டார். சிலரை வரவழைத்து அவர்களிடம் ''இது என்ன?'' என்று கேட்டார். ''தலைப்பாகை'' என்று அவர்கள் பதில் சொன்னார்கள். பீர்பல் அத் தலைப்பாகையை அவிழ்த்துத் தம் தோளில் போட்டுக் கொண்டார். பின் ''இது என்ன?'' என்று கேட்டார். ''அங்கவஸ்திரம்'' என்று பதில் வந்தது. மூன்றாவதாக பீர்பல் அதே துணியை இடுப்பில் கட்டிக் கொண்டு ''இது என்ன?'' என்று கேட்டார். ''வேட்டி'' என்று அவர்கள் கூறினார்கள். பீர்பல் அரசரை நோக்கி, ''இவர்கள் எல்லோருமே குருடர்கள். இது இவர்கள் கூறிய எதுவுமே இல்லை. வெறும் துணிதான். பெயர்களும் உருவங்களும் துணிக்குப் புதுப் பெயரைத் தருகின்றன'' என்றார்.

- அரக்கோணம் சங்கர பாண்டியன்.



உழைப்பே உயர்வு

வேலன் ஏழை விவசாயி: கடின மான உழைப்பாளி. பிறர் பொருளுக்கு ஆசைப்படாதவன். தெய்வ நம்பிக்கை உள்ளவன். அவன் மனைவியும் அப்படியே!

வேலன் வசித்த கிராமத்திலும், சுற்று வட்டாரத்திலும் மழை பொய்த் தது. மூன்று ஆண்டுகளாக மழை இல்லை என்றால் என்ன செய்வது? மக்கள் வறுமைப் பிடியில் சிக்கித் தவித்தார்கள். வேலனின் குடும்பமும் வறுமையில் சிக்கியது.

''இனிமேல் இந்த ஊரில் இருந் தால், பட்டினியால் சாக வேண்டும். ஏதாவது நகரத்திற்குப் போய் வேலை செய்து பிழைக்கலாம்'' என்றாள் வேலனின் மனைவி.

''அங்கே மட்டும் என்ன வாழுது? இராமம் வாழ்ந்தால்தான் நகரம் வாழும். தெரியுமா? அதோட எனக்கு இந்த விவசாயத்தை விட்டால் வேறு தொழில் எதுவும் தெரியாது. எனக்கு எவன் வேலை தருவான்?'' என்று கேட்டான் வேலன்.

கடைசியாக அவர்களிடம் இருந்த ஒரு பிடி அரிசிக் குருணையைப் பொடித்து,கஞ்சி வைத்தாள் வேலனின் மனைவி. இருவரும் சாமிக்கு அதைப் படைத்துவிட்டுக் குடிக்கப் போகை யில் தொட்டாலே ஒடிந்து விழுவது போல் 'குடுகுடு' கிழவர் ஒருவர் வந்தார். இருவரும் அவரை வர வேற்று, தங்களுக்காக வைத்திருந்த கஞ்சியைக் கொடுத்துக் குடிக்கச் செய்தனர்.

கஞ்சியைக் குடித்துப் பசியாறிய கிழவர், வேலனிடம் ஒரு ஓட்டாஞ் சில்லியைத் தந்து, ''வேலா, இந்த வறுமை நிலையிலும் நீ விருந்தோம்

பலை விடாது செய்து வருவதைப் பார்த்து மகிழ்ச்சி, உனக்கு ஒரு பரிசு தர எண்ணுகிறேன். இந்த ஒட்டாஞ்சில்லியைத் தலையில் வைத்துக் கொண்டு காட்டுக்குப் போ. இது கீழே விழும் இடத்தில் தோண்டிப்பார். உனக்கு ஒரு பெரிய புதையல் கிடைக்கும்'' என்றார்.

வேலன் அதை வாங்கிக் கொள்ளவில்லை! அவன் முகத்தில் மகிழ்ச்சியும் இல்லை! கிழவருக்கு ஒரே திகைப்பாக இருந்தது.

''வேலா! நான் கூறியது உனக்கு மகிழ்ச்சியளிக்கவில்லை?'' என்று கேட்டார்.

''என்னை மன்னிச்சுடுங்க ஐயா. எனக்கு இந்தச் சில்லும், புதையலும் வேண்டாம். ஆண்டவன் அளித்த கை கால்கள் இருக்கும்போது, அவற்றைக் கொண்டு உழைத்து வாழ்வதுதான் சிறந்தது. அதோடு, இந்தப் புதையல் கிடைத்தால் நான் மட்டுமே பயனடைவேன். ஊரில் பட்டினி கிடக்கும் மற்றவர்கள் கதி என்னவாகும்? இப்படி எல்லோருக்கும் ஒரு புதையல் கிடைக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். யார் பயிர்த் தொழில் செய்ய முன் வருவார்கள்? மக்கள் எதைத் தின்பார்கள்? அதனால், எந்த வகையில் பார்த்தாலும் சரி, உங்கள் புதையலை ஏற்பது என் மனதிற்கு நியாயமாகப் படவில்லை'' என்றான் வேலன்.


''உழைப்புக்கு மதிப்புத் தரும் உன் பண்பு உன்னதமானது! அதைப் பாராட்டுகிறேன். ஆனால், உனக்கு ஏதாவது கொடுக்க விரும்புகிறேன். என்ன வேண்டும் கேள்?'' என்றார் கிழவர்.

''புதையலைத் தரக்கூடிய அளவுக்கு சக்தி படைத்த தாங்கள், நாங்கள் வணங்கும் முருகப் பெருமானாகத் தான் இருக்க வேண்டும். எங்கள் கிராமத்திலும், சுற்று வட்டாரத்திலும் மழை பொழியச் செய்யுங்கள். நாங்கள் உழைத்துப் பிழைத்துக் கொள்வோம்'' என்று கைகூப்பினான் வேலன்.

மழை பொழிந்தது. ஊர் செழித்தது!

- பொ. சிவகுருநாதன்,
சென்னை - 600 014.

எத்தனை வித்தியாசங்கள்? - போட்டி



இங்கே ஒரே மாதிரியான இரண்டு படங்கள் உள்ளன. இவற்றை நன்றாகக் கவனித்துப் பாருங்கள். இவற்றில் மொத்தம் பதினைந்து வித்தியாசங்கள் உள்ளன. இவற்றைக் கண்டுபிடித்து எழுதி, கூப்பனோடு அனுப்புங்கள். பரிசு கண்டிப்பாக உண்டு.

எத்தனை வித்தியாசங்கள்? - போட்டி


பெயர் : ....


வயது : ....

முகவரி : ....

பின்கோடு : ....

முடிவு தேதி 15.4.1992





நல்ல தோழன்

பூனை குறுக்கே வந்தால் கெட்ட சகுனம். பூனையின் மயிர் ஒன்று உதிர்ந்தால், அதற்கு ஈடாகத் தங்க மயிர் செய்து போட்டாலும் பாபம் தீராது. பூனை பாலைத் திருடிக் குடிக்கும். இப்படியெல்லாம் பல செய்திகள்! இவையெல்லாம் பூனையைப் பற்றி நமக்குத் தெரிந்த தகவல்கள்.


பூனையைப் பற்றித் தெரியாத பல செய்திகளை இப்பொழுது கேளுங்கள்.

சுமார் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வரை, எகிப்திய மக்களால் தெய்வமாக பூனை பூஜிக்கப்பட்டு வந்தது. ஒரு ரோம் நாட்டு வீரன் தவறுதலாக ஒரு பூனையைக் கொன்று விட்டான். இதைக் கேள்விப்பட்ட எகிப்திய மக்கள் கோபமடைந்து, அந்த வீரனைக் கல்லாலேயே அடித்துக் கொன்று விட்டார்கள். எகிப்திய வரலாறு இதைக் கூறுகிறது. அந்த அளவுக்கு, பூனை, எகிப்தியர்களால் மதிக்கப்பட்டு வந்தது.

பூனைக்கு மனிதர்களைப் போல் சிரிக்கவும், அழவும் தெரியும். இதை ஒரு ஆய்வு மூலம் கண்டறிந்துள்ளார்கள். பூனைக்கு இன்னொரு நல்ல குணமும் உண்டு. கண்ட கண்ட இடங்களில் மலம் கழிக்காது. அதோடு எங்கு மலம் கழிக்க நேரிட்டாலும், அதை மண் போட்டு மூடி விட்டு வந்து

விடும்.

பூனை, நாயைப் போல் வீட்டு எஜமானன் மீது நன்றி தெரிவிக்கும் இயல்புடைய செல்லப் பிராணி. ஜப்பானில் ஒரு பெரிய தனவந்தர், தான் செல்லமாக வளர்த்த ஒரு பூனையை முன்னூறு மைல்களுக்கு அப்பால் ஒரு இடத்தில் விட்டு விட்டு வந்தார்.



அந்தப் பூனை, அந்த முன்னூறு மைல் தூரத்தையும் மூன்றே நாட்களில் கடந்து வந்து, தனது எஜமானின் வீட்டை அடைந்து விட்டது.

பூனைக்கு தண்ணீர் என்றால் அவ்வளவாகப் பிடிக்காது. அது அதிகமாகக் குளிக்காது. ஆனாலும், பூனை ஒரு தூய்மையான பிராணி என்பது வியக்க வைக்கும் உண்மை. பூனை அசுத்தத்தை வெறுக்கும் பிராணி. நாக்கால் நக்கியே தன்னைத் தூய்மைப்படுத்திக் கொள்ளும்.

சராசரியாக ஒரு பூனை 12 முதல் 18 வயது வரை உயிரோடிருக்கும். ஒவ்வொரு பெண் பூனையும், மூன்று முதல் நான்கு குட்டி போடும். குட்டிப் பூனைகளுக்கு பிறந்தவுடன் கண் பார்வை கிடையாது. சத்தத்தை உணரும் சக்தியும் கிடையாது. தாய்ப் பூனை தன் குட்டிகளைப் பாதுகாப்பதில் விசேஷ அக்கரை செலுத்தும்.

தூக்கத்தில் கனவு காணும் இயல்பு பூனைக்கு உண்டு. இதை ஆய்வு மூலம் உறுதிப்படுத்துகிறார், ஹென்ரிக்ஸ் என்ற பெனிசில்வேனியப் பல்கலைக் கழகப் பேராசிரியர்.

இரவில் பூனைக்குக் கண் பார்வை கூர்மையானது. புனுகு என்ற வாசனைத் திரவியம் பூனையிடமிருந்து தயாரிக்கப்படுகிறது.

பூனைக் குட்டி பிறந்ததும், நாற்பத்தைந்து நாட்களுக்குள் தூக்கிக் கொண்டு வந்து வளர்த்துப் பாருங்கள்.

'பூனை, நமக்கு நல்ல தோழனடி பாப்பா' என்று பாடத் தோன்றும்.

- வி. பாலு, சென்னை - 17.




★ 'கிரிஸ்டோபர் லீ மார்ஷல்' என்னும் மாணவர் தனது 11-வது வயதிலேயே விமானம் ஓட்டும் பைலட்டாகத் தேர்ச்சி பெற்றுவிட்டார். இவர் அட்லாண்டிக் கடலை ஒரே ஒரு என்ஜின் உள்ள விமானம் மூலம் பறந்து கடந்துள்ளார். மிகவும் சிறிய வயதில் பைலட்டாகத் தேர்ச்சி பெற்று, இச்சாதனையைச் செய்திருப்பது குறிப்பிடத்தக்கது. இவர் 1988 - ஆம் ஆண்டு ஜூலை மாதம் 7 ஆம் தேதி கலிபோர்னியாவிலிருந்து (U.S.A) புறப்பட்டு, பாரீஸ் (பிரான்ஸ்) நகரத்துக்கு ஜூலை மாதம் 14 ஆம் தேதி அட்லாண்டிக் கடல் வழியாகப் பறந்து கடந்தார்!

- தா. ஷேக் உசேன், செஞ்சி - 2.

ராமுவும் வாசுவும் ஒரே வகுப்பில் படித்துக் கொண்டிருந்தார்கள். வாசு தன் அப்பாவிடம் பள்ளிக்குச் செல்ல ஒரு சைக்கிள் வாங்கித் தரும்படி கேட்டிருந்தான். ஆனால், பணமில்லாததால் அப்பாவால் வாசுவிற்கு உடனே சைக்கிள் வாங்கித்தர இயலவில்லை. இன்னும் சில மாதங்கள் சென்றதும் வாங்கித்தருகிறேன் என்று

பொறாமை வேண்டாமே



சொன்னார். ஆனால் ராமுவிற்கு அவனது அப்பா உடனேயே ஒரு புதிய சைக்கிள் வாங்கிக் கொடுத்து விட்டார்.

ராமுவும், வாசுவும் ஒரே தெருவில் வசிப்பவர்கள். இருவரும் ஒன்றாகத் தான் பள்ளி செல்வார்கள். ஆனால் சைக்கிள் வந்த பிறகு ராமு தன் தம்பியை சைக்கிளின் பின்னால் உட்கார வைத்து பள்ளிக்குக் கொண்டு போய் விட்டுவிட்டு, அப்படியே தானும் பள்ளி செல்லத் தொடங்கினான். வாசு மட்டும் தனியே நடந்து பள்ளிக்குச் செல்ல வேண்டியதாகி விட்டது. இதனால் வாசுவிற்கு ராமுவின் மீது பொறாமை உண்டானது.

சைக்கிள் வாங்கிய அன்று மாலை ராமு தன் புது சைக்கிளை வாசுவிடம் காட்டினான்.

''நீ வேணா ஒரு ரவுண்டு போயிட்டு வா வாசு. ஒரு மிதி மதிச்சா சும்மா ஜம்முனு பறக்குது'' என்றான் ராமு மகிழ்ச்சியுடன். ராமு உண்மையாகவே தனது நண்பன் என்று மதித்துத் தான் கேட்டான். ஆனால், வாசு அப்படி எடுத்துக் கொள்ள வில்லை. ராமு தன் புது சைக்கிளைக் காட்டித் தன்னிடம் பெருமை அடித்துக் கொள்கிறான் என்று நினைத்துக் கொண்டான் வாசு.

''வேண்டாம் ராமு. புது சைக்கிள். ஏதாவது ஆகிட்டா வம்பா போயிடும்'' என்று மறுத்தான் வாசு.

''டேய். எதுவும் ஆகாதுடா. சும்மா ஓட்டிப்பாரு'' என்றான் ராமு மறுபடியும்.

ஆனால், வாசு கடைசிவரை அந்த சைக்கிளைத் தொடக்கூட இல்லை. ராமுவுக்கு வருத்தம்தான்!

ஒரு வாரம் ஓடியது.

அன்று பிற்பகல் வேளைக்கான கடைசி வகுப்பு ஆசிரியர் வராது போகவே மாணவர்களைப் பள்ளி மைதானத்தில் விளையாடச் சொல்லி விட்டார்கள். வாசுவைத் தவிர எல்லோரும் போனார்கள். வாசு வேண்டு

ஆர்.வி. பதி



மென்றே தங்கி விட்டான்.

அந்தப் பள்ளியின் முதல் மாடியில் வாசுவின் வகுப்பு இருந்தது. அங்கிருந்து பார்த்தால் பள்ளி மைதானம் தெரியும். பள்ளி மைதானத்தைப் பார்த்தான் வாசு. ராமு மாணவர்களுடன் கால் பந்து ஆடிக் கொண்டிருந்தான். வாசுவின் மனத்தில் அந்த அரக்க எண்ணம் உதித்தது. மாடியிலிருந்து வேகமாக இறங்கி பள்ளியின் சைக்கிள் ஸ்டாண்டுக்குப் போனான். அங்கே யாரும் இல்லை. ராமுவின் புத்தம் புது சைக்கிள் அங்கே இருந்தது. அக்கம் பக்கம் பார்த்தான். தன்னை யாரும் கவனிக்கவில்லை என்பதை உறுதி செய்து கொண்டு சட்டென பின் பக்க டயரின் காற்றை இறக்கிவிட்டு வால்வ் ட்யூபை பிடுங்கி எறிந்துவிட்டுப் பழையபடி நட்டைப் போட்டு முடுக்கினான். ஸ்டாண்டு போட்டிருந்ததால் பின்பக்க டயரில் காற்று இறக்கப் பட்டது தெரியவில்லை.

பள்ளி முடிந்ததும் ராமு வேகமாக வந்து சைக்கிளை எடுப்பான். காற்று இருக்காது. பாவம்! வீடுவரை சைக்கிளைத் தள்ளிக் கொண்டு செல்வான். அவஸ்தைப்படட்டும் என்று நினைத்த வாசு மைதானத்திற்குப் போய் விளையாட்டில் கலந்து கொண்டான்.

அரை மணி நேரம் விளையாடினான். மணியடிக்க இன்னும் ஐந்து நிமிடங்கள்தான் இருந்தன. விளையாடிக் கொண்டிருந்த வாசு ஒரு கல்தடுக்கிக் குப்புற விழுந்தான். முட்டியில் சரியான அடி. இரத்தம் வடிந்தது.

அந்த நேரத்தில் மணியடிக்கப் பட்டது. பள்ளி மணி ஒலித்ததும் மாணவர்கள் வாசுவைப் பற்றிக் கவலைப் படாமல் தங்கள் புத்தகப் பையை எடுத்துக் கொண்டு வீட்டை நோக்கி ஓடினார்கள். ஆனால், ராமு மட்டும் தன் கர்சிப்பை எடுத்து, நீரில் பிழிந்து வந்து வாசுவின் காலில் கட்டுப் போட்டான். ரத்தம் வடிவது ஓரளவு நின்றது. வாசுவைப் பிடித்துக் கொண்டு அவனுக்கு நடக்க உதவி செய்து தன் சைக்கிளை எடுக்க வந்தான் ராமு.

சைக்கிள் ஸ்டாண்டாருகே ராமு

வின் தம்பி சோமு தன் அண்ணனுக்காகக் காத்துக் கொண்டிருந்தான்.

''டேய் சோமு. நீ வீட்டுக்கு நடந்து போ. நம்ம வாசுவுக்கு கீழே விழுந்து காலிலே அடிபட்டிருக்கு பாவம். வாசுவாலே நடக்க முடியாது. நான் அவனைக் கேரியர்லே உட்கார வெச்சித் தள்ளிகிட்டு வர்றேன்.''

ராமு தன் தம்பி சோமுவிடம் சொன்னான். சோமுவும் புறப்பட்டான்.

ராமுவின் பேச்சைக் கேட்ட வாசுவிற்கு அழுகையே வந்து விட்டது.

'சே! இவ்வளவு நல்ல குணம் படைத்த ராமுவின் மீது காரணமில்லாது வேண்டுமென்றே அனாவசியமாகப் பொறாமைப்பட்டு அவன் சைக்கிள் காற்றை இறக்கி விட்டேனே! அடிபட்டபோது, உடன் விளையாடிய மாணவர்கள் எல்லோரும் தங்கள் வீட்டிற்குச் செல்வதிலேயே குறியாக இருந்த போது, ராமு மட்டும் அப்படிச் செய்யாமல் கட்டுபோட்டு உதவி செய்திருக்கிறானே! தம்பியை நடந்து வரச் சொல்லிவிட்டு, என்னை உட்கார வைச்சுத் தள்ளிக்கிட்டு வர, முன் வந்திருக்கிறானே! இவன்தானே உண்மையான நண்பன்! இவனுடன் நட்புக் கொண்டாட எனக்கு அருகதை இருக்கிறதா?'


தன் செயலை நினைத்த வாசுவிற்கு வெறுப்பாக இருந்தது. ராமு, சாவி போட்டுத் தன் சைக்கிளைத் திறந்து ஸ்டாண்டைத் தள்ளினான். அப்போது தான் பின் பக்க டயரில் காற்று இல்லை என்பது தெரிந்தது.

''என்னை மன்னிச்சிடு ராமு. நான் தான் உன் மேலே பொறாமைப்பட்டு காற்றை இறக்கி விட்டேன். அதுக்குச் சரியான தண்டனை எனக்குக் கிடைச்சிடுச்சு. இனி யாரைப் பார்த்தும் பொறாமைப்பட மாட்டேன் ராமு. என்னை மன்னிப்பாயா ராமு?'' என்று கண்ணீர் விட்டான் வாசு.

''நீ செய்தது தவறுன்னு உணர்ந்துட்டியே. அதுவே போதும் வாசு.''

ராமு பெருந்தன்மையுடன் சொன்னான்.

வாசு மகிழ்ந்தான்.





உங்கள் நூலகம்

கண்ணாடி மனிதன் - வாண்டு மாமா. பக். 196, - ரூ. 25/- வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை - 17.

சிறுவர்களுக்காக வெளிவந்துள்ள பிரும்மாண்டமான நூல் எனலாம். கதையும் அப்படித்தான். காட்டின் நடுவில் உள்ள விடுதியில் மூன்று பேர் இரவில் தங்குகிறார்கள். ஒரு ஜமீன்தாரிணியும் தன் காவலர்களுடன் சேர்ந்து கொள்கிறாள். நடு இரவில் கொள்ளைக்காரர்களின் தாக்குதலுக்கு இலக்காகிறார்கள். ஜமீன்தாரிணிக்கு உதவ, ஒருவன் தானே ஜமீன்தாரிணி வேஷமிட்டு, கொள்ளைக்காரர்களுடன் போய்விட, பின்னால் அவன் மீட்கப்பட, இறுதியில் தான்தேடிக் கொண்டு கிளம்பிய பெண்மணி அவன்தான் என்பதை அறிந்து அவன் பெருமையும், பரிசுகளும் பெறுகிறான். இதுதான் மெயின் கதை. இடையே மந்திர தந்திர குட்டிச் சாத்தான் கதை ஒன்றும் வருகிறது. இதை மூன்று வழிப் போக்கர்களும் மாறி மாறிக் கூறுகிறார்கள். வாண்டுமாமாவின் முத்திரை நெடுகத் தெரிகிறது!

பரமார்த்த குரு - II - டாக்டர் பூவண்ணன் - பக். 168 - ரூ. 20/- சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 154, டி.டி.கே. சாலை, ஆழ்வார்பேட்டை, சென்னை - 600 018.

வீரமாமுனிவரின் படைப்பான 'பரமார்த்த குரு' கதையின் கற்பனைத் தொடர்ச்சியாக ஆசிரியரால் எழுதப் பட்டுள்ள கதை இது. இரண்டாம் பகுதியை வீரமாமுனிவரே எழுதியிருந்தால் இப்படித் தான் இருக்கும் என்று எண்ணவைக்கிறது கதை. 'அண்டப்புளுகன்' அத்தியாயம் ஒன்றே போதும்! சிரித்துச் சிரித்து சுவைக்க, சரியான நூல். மூன்றாம் பகுதியை எதிர் பார்க்கவைக்கும் படைப்பு.


இன்று புதிதாய்ப் பிறந்தோம் இனியவன் பக். 88 - ரூ. 11/- - எழுத்தாளர் பதிப்பகம், 1, நாகாத்தம்மன் தெரு தொடர்ச்சி, ஜாபர்கான்பேட்டை, சென்னை - 95.

நீண்ட காலமாக இலக்கியத் தொண்டாற்றி வரும் ஆசிரியர், கோகுலம் வாசகர்களுக்குப் புதியவர் அல்ல. இந்த நாவல், இதே தலைப்பில் ஏற்கெனவே கோகுலத்தில் நெடுங்கதையாக வந்தது தான் என்று கூறினாலே இதன் சிறப்பை அறிந்து கொள்ளலாம். சலுகைகளால் முன்னேற வாய்ப்புகள் இருந்தும் தகுதி களால் மட்டுமே உயர்வேன் என்று வைராக் கியமாக இருந்து வெற்றிகாணும் குப் பத்துக் காத்தமுத்து நூலெங்கும் நிறைந்து, நம் நெஞ்சிலும் நிறைகிறான்!

பூக்கள் சிந்தும் புதுமைகள் - கடல் நாகராஜன் பக். 108, - ரூ. 12/- - மாலதி பதிப்பகம், 51, கதர்சன் தெரு, மஞ்சைநகர், கடலூர் - 607 001.

அறிவியல் தாகம் கூடிவரும் நேரம் இது. இந்த தாகத்தைத் தணிக்க நாள் தோறும் புதுப்புது அறிவியல் நூல்கள் மலர் கின்றன. அந்த வகையில் பூக்களைப் பற்றிய அறிவியல் தகவல்களை மிக அருமையாகத் தொகுத்துத் தந்துள்ளார் ஆசிரியர். இடையிடையே பூக்கள் நம் அன்றாட வாழ்வில் இடம் பெறும் நிகழ்ச்சி களையும் ஓட விட்டுள்ளார். ஐந்து வண்ணங்களின் கூட்டாக மலரும் பஞ்சவர்ணத் தாமரையை நீங்கள் அறிவீர்களா? இலை களே இல்லாத பூச்செடியைப் பற்றி உங்க ளுக்குத் தெரியுமா? ஜோர்டான் அரண் மனையில் 1800 ஆண்டுகளாகியும் பசுமை குன்றாத பூச்செடிகள் இருக்கும் செய்தியை அறிவீர்களா? இப்படித் திகைக்க வைக்கும் பல அதிசயக் குவியல்கள் நூலில் உள்ளன. ஆசிரியரின் உழைப்பு நன்கு தெரிகிறது.

சிறுவர்களுக்கான நூல்கள் மட்டுமே இப்பகுதியில் இடம் பெறும். கட்டணம் ஏதுமில்லை. இரண்டு பிரதிகளை, ஆசிரியர் கோகுலம், ரேஸ் கோர்ஸ் சாலை, சென்னை - 32 என்ற முகவரிக்கு அனுப்பினால் போதும்.



உடும்பு பிடித்தால் விடாதா?

மாரி தம்பட்டத்தை வேகமாகத் தட்டி ஓசை எழுப்பினான். அவனுடைய ஆறு வயதுப் பையன் ராக்கு, கர்ணகடூரமமாகப் புல்லாங்குழலை ஊதிக் கொண்டு சுற்றிச் சுற்றி வந்தான். மாரியின் ஐந்து வயது கூட நிரம்பாத மகள் சுக்கி, உடுக்கையை எடுத்துப் 'படபட'வென்று அடித்து ஓசையெழுப்பினாள். கூடவே, ''ஐயா, அம்மா, எல்லாரும் வாங்க. நல்ல விஷயம் காது கொடுத்துக் கேளுங்க'' என்று உரக்கக் கத்தினாள்.

மூர்மார்க்கெட்டில் புத்தகம், காயலாங்கடைப் பொருள்களை வாங்க வந்த இரண்டொருவர் தயங்கித் தயங்கி வந்து நின்றனர். ரயிலில் குடும்பத்தோடு வந்து இறங்கிய கிராமவாசிக் கூட்டம், அதிசயத்தோடு நின்றது. அரை டிக்கெட்டுகள்தான் அதிகமாக இருந்தன.

''சின்னப் பசங்களெல்லாம் முன் வரிசையில வந்து உட்காருங்க'' என்றாள் சுக்கி!

கூட்டத்தின் நடுவில் தரையில் முதலைத் தோல், உடும்புத் தோல், பாம்புத் தோல், மயில் தோகை, ஆமை ஓடு, பல வடிவ வேர்கள், பாட்டில்களில் பல வண்ணங்களில் அடைக்கப்பட்ட ஏதேதோ பொருள்கள் வரிசை வரிசையாகப் பரத்தி வைக்கப்பட்டிருந்தன. பெரிய தாம்பாளங்களில் வண்ண வண்ண எண்ணெய்கள் வைக்கப்பட்டிருந்தன. எல்லாவற்றிற்கும் மேலாக, உயர் வரிசையில் நாலைந்து புகைப்படங்கள் இருந்தன. அதில் பிரபல திரைப்பட நடிகை நடிகர்களுடன் மாரி காட்சியளித்தான். பரத்தி வைக்கப்பட்டிருந்த பொருள்களின் இரு பக்கங்களிலும், பக்கத்திற்கு ஒன்றாக உயிருடன் இரண்டு உடும்புகள் காணப்பட்டன. தரையில் கடப்பாறையைப் புதைத்து, அதில் உடும்பைக் கயிற்றால் கட்டியிருந்தார்கள். இரண்டும் தங்கள் பிளவுபட்ட நீண்ட நாக்கை அடிக்கொருமுறை வெளியே நீட்டி, சுற்றிச் சுற்றி அலைந்தன. அவற்றின் சொரசொரப்பான உடல், குறிப்பாக நீண்ட விரல்களுடன் கூடிய வலுவான கால்கள், கனத்த வால் எல்லோரையும் கவர்ந்தன. ஒரு அச்சம் கலந்த ஆர்வத்தையும் ஏற்படுத்தின.

மாரி தம்பட்டத்தை அடிப்பதை நிறுத்தி விட்டு, கூட்டத்தைப் பார்த்துப் பேச ஆரம்பித்தான்.

''ஐயா, இந்தத் தாம்பாளங்களில், பாட்டில்களில் இருப்பது கப்பரை எண்ணெய்ங்க. முதலை, உடும்பு, பாம்பு, மயில், ஆமைங்களில் இருந்து வடித்து எடுக்கப்பட்டதுங்க. இத்தோடு

ரேவதி

சர்பகந்தி, சர்ப குண்டம், சர்ப யாந்தி வேர்களையும் இடித்துக் கலக்கித் தயாரிக்கப்பட்டதுங்க. சர்வரோக நிவாரணி. தலைவலி, தலைசுற்றல், காது வலி, காது எரிச்சல், கண் வலி, கண் எரிச்சல், பல் வலி, பல் குத்து, மார்க்கபம், தொண்டைக்கட்டு, வயிற்றுச் சூடு போன்ற நூற்றுப் பத்து வியாதிகளுக்கு இது கைகண்ட மருந்துங்க. முன்னாடியெல்லாம் மகாராஜாக்களும், பிரபுக்களும்தான் இதைச் செய்யச் சொல்லி பயனடைஞ்சாங்க. இப்போ கூட இது குடும்ப இரகசியங்க. கப்பரை எண்ணெய் வடிக்கறதை யாருக்கும் சொல்லித் தர மாட்டோங்க. இருந்தாலும் மக்களுக்கு நன்மை பண்ணனும்னு பத்ரகாளி கனவுல வந்து சொன்னதால, ஏதோ கொஞ்சமா பண்ணியிருக்கேங்க. இதையே சூரணமாவும் பண்ணியிருக்கு."

"முப்பது நாள் சூரணம் ஐம்பது ரூபாய். முப்பது நாள் எண்ணெய் அறுபது ரூபாய்ங்க. தேவையானவங்க வாங்கிக்கிங்க. ஒரு வாரம் சாப்பிட்டுப் பார்த்து பயனில்லேன்னா, இங்கேயே வாங்க. நான் இங்கேதான் இருப்பேன். உங்க கால் செருப்பைக் கழற்றி அடியுங்க. பட்டுக்கறேன்.''

கூட்டத்தில் இருந்த ஒரு நறுக்கு மீசைக்காரர் ''எண்ணெய் கொடுங்க'' என்று ஒரு நூறு ரூபாய்த் தாளை நீட்டினார். கொண்டை போட்ட ஒரு கிராமத்துப் பெண்மணி சூரணம் வாங்கினாள். வியாபாரம் 'இடுகிடு'வென்று



சூடுபிடித்தது.

இடது பக்கம் கட்டியிருந்த சின்ன உடும்பு, வலது பக்கத்தில் இருந்த பெரிய உடும்பைப் பார்த்து, ''என்னண்ணே...! இந்த நறுக்கு மீசையும், கிராமத்துப் பெண்மணியும் நம்ப ஐயா எங்கே கடை போட்டாலும் தவறாம வந்து முதல்ல வாங்கிக்கிறாங்க?'' என்று வியப்புடன் கேட்டது.

''நீ சரியான முட்டாள். அவங்க ரெண்டு பேரும் நம்ப ஐயாவுக்கு சொந்தக்காரங்க. ஐயாதானே பணங் கொடுத்து அவங்களை முதல்ல வாங்கச் சொல்லுவார். அப்பத்தானே மத்தவங்க வாங்குவாங்க'' என்று சிரித்தது பெரிய உடும்பு.

''ஏண்ணே... நிசமாலுமே இந்தக் கப்பரைத் தைலம், நம்பளை மாதிரி உடும்புங்களை வைச்சா எடுக்கறாரு முதலாளி? நான் இங்கே வந்த ஆறு மாசத்துல உங்களைத் தவிர வேறு உடும்புங்களைப் பார்த்ததே கிடையாதே!''



''நீ ஒரு அப்பாவி. ஒவ்வொரு தடவை தைலம் காய்ச்சும் போதும் உடும்பைப் போட்டு எடுக்கணும்னா, இவர் உடும்புக்கு எங்கே போவாரு? நான் இந்த ஆள்கிட்ட வந்து ரெண்டு வருஷமாச்சு. உடும்புன்னு காட்ட நான். ஆனால், தைலத்துக்கும் உடும்புக்கும் சம்பந்தம் இல்லே! அப்படியே சம்பந்தம் இருந்தாலும் அது இவரு பட்டியல் தர மாதிரி நோய்களை குணமாக்குமாங்கறது சந்தேகம்தான்'' என்றது பெரிய உடும்பு.

''ஆமாண்ணே, நீ எப்படி இவர் கிட்ட வந்து சிக்கினே?''

''நான் ஒரு சர்க்கஸ்ல இருந்தேன். சர்க்கஸ் கம்பெனி படுத்துப் போச்சு. எல்லா மிருகங்களையும் கிடைச்ச விலைக்கு வித்தாங்க. இவரு என்னை ஆயிரம் ரூபாய்க்கு வாங்கினாரு. என் கூட இருந்த இன்னொருத்தனை, கஞ்சீரா செய்ய தோல் வேணும்னு ஒருத்தர் வாங்கிக்கிட்டுப் போனாரு. நல்லவேளை நான் உயிர் தப்பினேன்'' என்றது பெரிய உடும்பு.

கணவன் மனைவியாக இரு அயல் நாட்டுக்காரர்களை அழைத்துக் கொண்டு வந்தான் ஒரு கைடு.

''இதுதான் 'வெறான்ஸ் மானிட்டர்'. நாங்க உடும்புன்னு சொல்வோம். ஊர்வன வகையில் இதுவும் பல்லி இனம். கையையும் காலையும் பார்த்தீங்களா? எப்படி நீண்ட வலிமையான விரல்கள்! இது எதையாவது பிடித்தால், விடவே விடாது. முன்பெல்லாம், அரசர்கள் கோட்டையை முற்றுகையிடும் போது, இதன் இடுப்பில் கயறு கட்டி மேல அனுப்புவாங்க. இதுங்க, கோட்டைச் சுவர் மேல ஏறிப் போய், அங்கே கெட்டியாகப் புடிச்சுக்கும். வீரர்ங்க, கயிறைப் புடிச்சு மேலே போய் தாக்குதல் நடத்தி, கோட்டைக் கதவைத் திறந்து விடுவாங்க.''

''கேட்கவே ரொம்ப சுவையாக இருக்கே!''

''உடும்புங்க ரொம்ப புத்திசாலி.



நரிமேடு தெரியுமா?

★ இப்போது சென்னையில் பார்க் டவுன் என்றழைக்கப்படும் பகுதிக்கு முன்பு நரிமேடு என்று பெயர். ராயப்பர் புரம்தான் ராயபுரம் ஆகியுள்ளது. மயிலாப்பூரின் பழைய பெயர் மயில் ஆர்க்கும் பாக்கம்.

- க.இரா. விஜயகுமார், செஞ்சி.

சத்ரபதி சிவாஜியின் தளபதி தானாஜி, இந்த மாதிரி ஒரு புத்திசாலியான உடும்பை வளர்த்தாராம். சிங்கக் கோட்டைன்னு மகா கரடுமுரடான ஒரு கோட்டை. சிவாஜியின் ஆணைப்படி தானாஜி அதை முற்றுகை இடப் போனார். உடும்பில் கயிறைக் கட்டி, மதில் மேல் அனுப்பினார். அதுவும் ஏறிப் போச்சு. உள்ளே பகைவர்கள் விழித்துக் கொண்டிருந்தார்கள். நிலைமை சரியில்லைன்னு அது புரிந்து கீழே இறங்கி வந்தது. மேலே போய் உடும்புப் பிடி போடலேன்னா அதை வெட்டி விடுவதாக தானாஜி மிரட்டி மறுபடி அனுப்பினார். வேற வழியில்லாமல் அந்தப் புத்திசாலி உடும்பு மேலே ஏறிப் போய், பலமா எதையோ புடிச்சுக்கிட்டது. எல்லாரும் மேலே ஏறிப் போனாங்க. பகைவர்கள் எளிதா எல்லோரையும் தீர்த்துக் கட்டினாங்க. தானாஜியும் போரில் மாண்டார். உடும்பு புடிச்சுக்க ஏன் முதலில் மறுத்தது என்பது பிறகுதான் எல்லோருக்கும் புரிந்தது. சிவாஜி மகாராஜா அதற்கு விசேஷ மரியாதை தந்தார்.''

''ஆமாம், இந்த உடும்புகளை வைச்சுக்கிட்டு இந்த வேடிக்கைக்காரர் என்ன பண்றார்! இந்தக் கலர் கலர் பாட்டில்ல இருக்கிறது என்ன?'' என்று கேட்டபடி தனது டீ.வி. காமிராவைத் தயார் செய்தார் மூக்கண்ணாடி அணிந்த அயல்நாட்டுக்காரர்.

''அதெல்லாம் உடும்பை வைத்துத் தயாரித்த எண்ணெய். கப்பரை எண்ணெய்னு பேரு. உடும்பு உடம்புல நிறைய விஷப் பொருள் இருக்கு. அதையெல்லாம் எடுத்துட்டு, மயில், முதலை, பாம்பு, பல வேர்களைக் கொண்டு தைலம் தயாரிப்பாங்க. இது சிறந்த மருத்துவ குணம் உடையது. உடும்பு மாமிசம் ஆஸ்துமாவுக்கு ரொம்ப நல்லது. இந்த கப்பரை எண்ணெய்க்காகவும், மாமிசத்துக்காகவுமே உடும்புகள் அழிக்கப்பட்டு வருகின்றன'' என்று விளக்கினான் கைடு.

''என்ன கொடூரம்!'' என்று உடலைச் சிலிர்த்துக் கொண்ட அயல் நாட்டுப் பெண், புகைப்படக் காமிராவைச் சரிபார்த்தாள்.

அவர்கள் படமெடுத்துக் கொண்டு நகர்ந்தனர்.

''அண்ணே, படையெடுப்புகளில் கூட, நாம மகாராஜாக்களுக்கு உதவியா இருந்திருக்கிறோம்கறதைக் கேட்க எனக்கு ரொம்பப் பெருமையா இருக்கு அண்ணே!'' என்றது சின்ன உடும்பு.

''பழம் பெருமை பேசி என்ன பயன்? நான் சர்க்கஸ்ல இருந்தப்போ, உயரமான நீண்ட இரும்புச் சட்டத்துல என்னைக் கயிறு கட்டி ஏத்தி விடுவாங்க. நான் உயரே போய் கெட்டியா புடிச்சுப்பேன். என் உடம்புக் கயிறைப் புடிச்சுக்கிட்டு ஒரு பயில்வான் மேல ஏறி வருவாரு'' என்றது பெரிய உடும்பு.

''அப்ப உடும்புப் புடின்னு இவங்க சொல்றது உண்மைதான்னு சொல்லுங்க!''

''வழுக்கிக்கிட்டு நழுவிப் போகாம நம்ப கையால் அணைச்சுப் புடிக்கிற மாதிரி இருந்தால்தான் உடும்புப் பிடி. நாம்ப புடிச்சுக்கிற பொருளைப் பொறுத்தது அது. நானாவது பரவாயில்லே... காட்டுல சுதந்திரமா பிறந்தேன். மாமரத்தின் வங்கில் சில காலம் இஷ்டத்திற்குக் குருவிகளையும், அணில்களையும், ஓணான்களையும், காட்டுக் கோழி, புறாக்களைப் புடிச்சுத் தின்னு வளர்ந்தேன். போதாத காலம், அணிலை பொறியில் வைச்சு என்னை மடக்கி, சர்க்க

ஸுக்குக் கொண்டு போனாங்க. அங்கே கூட ரெண்டு பேரைக் கடிச்சேன். அவங்க ரெண்டு பேரும் செத்துப் போனாங்க.''

''ஏன் அண்ணே! அப்ப நமக்கு விஷம் இருப்பது உண்மைதானா?'' என்று பரபரப்போடு கேட்டது சின்னது.

''நம்ம உடம்பிலே ஒரு துளி கூட விஷம் இல்லே. ஆனா, இருக்கிறதா நம்பியே, அந்த பயத்துலேயே அவங்க ரெண்டு பேரும் செத்தாங்க. நானாவது சிறிது காலம் சுதந்திரமா இருந்தேன். நீ பாவம், பிறக்கும்போதே கூண்டுக்குள் தான் அடிமையாப் பிறந்திருக்கே! உன்னை எண்ணினால்தான் இரக்கமா இருக்கு,'' என்றது பெரியது.

''அண்ணே, உண்மையாகவே நாம்ப புத்திசாலிங்களா, மனிதர்களைப் போல் சிந்திக்கக் கூடியவையா இருந்தோமா?''


''நான் இருந்திருக்கிறேன்'' என்று சிரித்தது பெரியது.

மாரியின் பையன் ராக்கு, இரண்டு முட்டைகளை வாங்கி வந்து பெரியதுக்கு ஒன்றைக் கொடுத்து விட்டு, சின்னதுக்கு ஒன்றைக் கொடுத்தான். இரண்டும் முட்டைகளைச் சிறிது நேரம் கைகளில் வைத்துக் கொண்டு, நாக்கை நீட்டி நீட்டி ஆராய்ந்தன. பிறகு அப்படியே முழுங்கின.

கால் நிமிஷம் கூட ஆகியிருக்காது. சின்னது விழுங்கின முட்டையை அப்படியே வெளியே துப்பியது. ஒரே அழுகல் வாடை! கோபத்தோடு முகத்தைத் தூக்கி வைத்துக் கொள்ளும் குழந்தை மாதிரி 'உம்'மென்று உட்கார்ந்து கொண்டது.

''அழுகல் முட்டையைக் கொடுத்து முட்டைக் கடைக்காரன் ஏமாத்திட்டான். அதான் துப்பியது'' என்று ஓடிப் போன ராக்கு, இன்னொரு முட்டையை வாங்கி வந்து கொடுத்தான். அதையும் கைகளில் வைத்துக் கொண்டு ஆராய்ந்து விட்டு முழுங்கியது சின்னது.

''தம்பி, நாம்ப புத்திசாலிகளா என்று கேட்டியே...? அழுகல் முட்டையைத் துப்பினியே... இப்பச் சொல்லு... நாம்ப புத்திசாலிகளா இல்லையா?'' என்று கேட்டுச் சிரித்தது பெரிய உடும்பு.



★ பாரதியார் தன் வாழ்நாளில் எடுத்துக் கொண்ட புகைப்படங்கள் மொத்தம் ஐந்தே ஐந்து. அதில் ஒரு புகைப்படத்தை எடுத்தவர் பாரதிதாசன்!

- டி. ஷேக் உசேன், செஞ்சி.

கூட்டத்தில் முன்வரிசையில் இருந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ஒரு முரட்டுப் பையன், யாரும் கவனிக்காத போது சிறு குச்சியால் சின்னதை அடித்தான்! அவ்வளவுதான்!

சின்னது கால்களை நீட்டி, உடலை உயர்த்தி உப்ப வைத்து, வாலைச் சவுக்கு போல் அசைத்துக் கடிக்கத் தாவியது! சிறுவன் அரண்டு ஒதுங்கிக் கொண்டு பின்வாங்கினான்! கூட்டம் கலகலத்துக் கலைந்தது!

அறிவியல் உண்மைகள் :

★ உடும்பு பல்லி இன விலங்கு.

★ வாழும் இடத்திற்குத் தக்கபடி இதன் நிறம் அமையும்.

★ இவற்றின் கால்களும் வலுவானவை. விரல்களும் நீண்டு வளைந்தவை. உறுதியாகப் பற்றிக் கொள்ள ஏற்றவிதத்தில் அமைந்தவை. 'உடும்புப் பிடி' என்பது, இதுபற்றிக் கொள்ளும் பொருளின் வடிவத்தைப் பொறுத்தது.


★ இதன் உடலில் எவ்வித விஷப் பொருளும் இல்லை. இது தானாக மனிதனுக்குத் தீங்கு இழைக்காத உயிரினம்.

★ வீட்டில் பழக்கி வளர்ப்பதற்கு ஏற்றது. பழக்கினால் கூறுவதைப் புரிந்து கொள்ளும்.

★ இதைக் கொண்டு எடுக்கப்படும் எண்ணெய்க்கும், இதன் மாமிசத்திற்கும் மருத்துவ குணம் உள்ளது என்பது அறிவியலாக இன்னும் நிரூபிக்கப்படவில்லை.

★ இதன் தோலைக் கொண்டு கஞ்சிரா இசைக் கருவி தயாரிக்கப்படுகிறது.

பட்டி காட்டிய வழி!



சரத்குமாரும் கண்ணனும் நண்பர்கள். இருவரும் கண்ணனின் பாட்டி இருந்த கிராமத்திற்குக் கோடை விடுமுறைக்குச் சென்றனர். போகும் வழியில் ஒரு பெரிய காடு இருந்தது.

வழியில் எதிர் பாராதபடி மழை பிடித்துக் கொண்டது. இருட்டியும் விட்டது. புதர் மறைவில் ஏதோ சத்தம் கேட்டது. கண்ணன் செடிகளை விலக்கி அச்சத்துடன் பார்த்தான். ஒரு அம்மா புள்ளி மான், தன் இரண்டு சிறிய குட்டிகளுடன் அங்கே கிடந்தது! அம்மா மானின் காலில் அடிபட்டு இரத்தம் கசிந்து கொண்டிருந்தது. அசையக் கூட முடியவில்லை போல் தெரிந்தது. துயரத்துடன், மருண்டு அவர்களைப் பார்த்தது.

சரத்குமாரும் கண்ணனும் ஆளுக்கொரு குட்டியை எடுத்துக் கொண்டு கிளம்பினர்.

பாட்டி வீட்டை அடையும் போது இரவு நெடு நேரமாகி விட்டது. கண்ணன் வீட்டுக் கதவைத் தட்டினான். எப்பொழுதும் சுறுசுறுப்புடன் உடனே வந்து கதவைத் திறக்கும் பாட்டி, அவர்கள் இரண்டு முறை தட்டிய பிறகுதான் வந்து கதவைத் திறந்தாள்.

''படி தடுக்கி விழுந்துட்டேன். ரெண்டு நாளா நடக்கக் கூட முடியலே'' என்று அவர்களை வரவேற்றாள் பாட்டி. இருவர் கையிலும் மான் குட்டியைப் பார்த்ததும் பாட்டி திகைத்தாள்.

''பாவமா இருந்தது பாட்டி. அம்மா மானால் அசையக்கூட முடியல. அங்கயே இருந்தால், இந்த இரண்டும் கூட ஏதாவது துஷ்ட மிருகங்களுக்கு இரையாகிடுமோன்னுதான் எடுத்து வந்துவிட்டோம்'' என்று விளக்கினான் கண்ணன்.

''ஏண்டா பசங்களா.... என்னால நடக்கக் கூட முடியலேன்னு யாராவது கொள்ளைக்காரங்க ராத்திரியில வந்து உங்க ரெண்டுபேரையும் புடிச்சுக்கிட்டுப் போயிட்டா, என்னடா பண்ணுவீங்க?''

பாட்டியின் கேள்வி இருவரையும் தூக்கிவாரிப் போட்டது.

''அப்ப நாங்க செஞ்சது தப்புன்னா சொல்றே பாட்டி!''

''கண்டிப்பா. உங்களுக்கு இதுங்க ரெண்டும் அழகா வளர்க்கத் தோதா சின்னதா இருந்தது. எடுத்துக்கிட்டு வந்துட்டீங்க. தாய்மான் எப்படித் தவிக்குதோ?''

''எப்படிப் பாட்டி இந்தக் குட்டிங்களையும் தூக்கிக்கிட்டு அம்மா மானையும் எடுத்துக்கிட்டு வரது?'' என்று திகைப்புடன் கேட்டான் சரத்குமார்.

''எல்லாத்துக்கும் மூளை வேணும்பா. ஒரு குச்சியில் தாய் மானைத் தலைகிழாக் கட்டறது. ஆளுக்கு ஒரு பக்கமா தோளில் சுமந்துக் கிட்டு, இந்தக் குட்டிங்களையும் இடுப்பில் வைச்சுக்கிட்டு வந்தால், மூன்றையும் காப்பாற்றியிருக்கலாமில்ல? என்னதான் பாடம் படிக்கிறீங்களோ போ!''

பிரச்னையைத் தீர்ப்பதில் பட்டிக்காட்டுப் பாட்டி காட்டிய அழகான வழியைக் கேட்டு இருவரும் திகைத்தனர்!

- கு. கணேசன்,
சிறுமுகைப்புதூர்.

தாவரங்களில் சில அதிசயங்கள்

ஆழி

உலகிலேயே பெரிய மரம் செக்குவாயா. உயரம் 113 மீட்டர். சுற்றளவு 15.5 மீட்டர். மரம்தான் பெரியது; இலையும் விதையும் மிகச் சிறியவை. இலையின் நீளம் 2.5 செ.மீ. விதையின் நீளம் 4 மி.மீ. மரத்தின் வயது 2000 ஆண்டுகளுக்கு மேல். கலிபோர்னியாவின் வட பகுதியில் இந்த மரங்கள் இருக்கின்றன!



உலகிலேயே மிகவும் உயரமான சப்பாத்திக் கள்ளி அமெரிக்காவின் தென்மேற்குப் பகுதியிலும், மெக்ஸிகோவின் வடக்குப் பகுதியிலும் உள்ள பாலை வனங்களில் வளருகிறது. 'உலக்கைக் கள்ளி' என்பது இதன் பெயர். உயரம் 15 மீட்டர். வளரும் வேகம் மிகவும் குறைவு. 10 ஆண்டுகளில் 2 செ.மீ. தான் வளரும். சுமார் 200 ஆண்டுகள் உயிர்வாழும்!




உலகிலேயே மிகப் பெரிய ஆலமரம் கல்கத்தா தாவரவியல் தோட்டத்தில் இருக்கிறது. 1782-ஆம் ஆண்டு முளைத்தது. 464 விழுதுகளுடன் இது வளர்ந்திருக்கும் பரப்பு 1½ ஏக்கர்! அடி மரத்தின் சுற்றளவு 15.5 மீட்டர். மரத்தின் உயரம் 26 மீட்டர். இதன் நிழலில் 7000 பேர்கள் நிற்கலாம். இந்த ஆலமரம் ஓர் ஈச்ச மரத்தின் மேல் முளைத்து வளர்ந்து இவ்வளவு பெரிதாகி விட்டது!



உலகிலேயே மிக உயரமாக வளரும் செடி, நிலத்தில் இல்லை; நீரில்தான் இருக்கிறது. கடல்பாசி இனத்தைச் சேர்ந்த இதன் தாவரப் பெயர் 'மாக்ரோ ஸைட்டிக் பைரிஃபெரா.' தென் அமெரிக்காவின் தென் கோடியில் உள்ள சமுத்திரத்தில் வளரும் இதன் உயரம் 186 மீட்டர்! நிலத்தில் வாழும் தாவரங்கள் காற்றிலுள்ள ஆக்ஸிஜனைக் கிரகிக்கின்றன. நீரிலுள் வாழும் தாவரங்கள் நீரில் கரைந்துள்ள ஆக்ஸிஜனைக் கிரகிக்கின்றன.






மிகப் பெரிய இலை 'விக்டோரியா ரீஜியா' என்னும் அல்லியின் இலைதான்! இலையின் குறுக்களவு 1.85 மீட்டர். வட்ட வடிவமான விளிம்பு மேல் நோக்கி வளைந்திருக்கிறது. இலையின் மேல் சிறுவர்கள் உட்கார்ந்தால்கூட தாங்கிக் கொண்டு மிதக்கும்! இதன் பிறப்பிடம் பிரிட்டிஷ் கயானா. கல்கத்தாவில், இந்தியன் தாவரத் தோட்டத்தில் கூட இந்த அல்லி இருக்கிறது!

உலகிலேயே மிகப் பெரிய மலர் சுமத்ரா தீவில் இருக்கிறது. ஆனால், இதற்குத் தனியாகத் தண்டோ இலையோ கிடையாது. ஒட்டுண்ணியாக வாழும் இனத்தைச் சேர்ந்தது. மற்றத் தாவரங்களின் தண்டுகளிலும் வேர்களிலும் ஒட்டிக்கொண்டு வளரும். இதன் எடை 15 பவுண்டு. குறுக்களவு சுமார் 1 மீட்டர்! இளஞ்சிவப்பு நிறம். மொட்டு முழுவளர்ச்சி அடைந்து மலர சுமார் ஒரு மாதம் ஆகும். 1918-ஆம் ஆண்டு ஸ்டாம்போர்ட் ராபிள்ஸ் என்பவர், ஆர்னால்டு என்பவருடன் இதைக் கண்டு பிடித்தார்.




ராபிள்ஸும் ஆர்னால்டும் கண்டு பிடித்ததால் இந்த மலரின் பெயரை 'ராபிள்ஸியா ஆர்னால்டு' என்று வைத்தார்கள்.




உலகிலேயே உயரமான மலர் 'அமோர்போ பாலஸ்': சுமத்ராவில் இருக்கிறது. மலரின் உயரம் சுமார் 2.5 மீட்டர்! இது 20 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒரே ஒரு மலர்தான் மலரும்! மலர்தான் பெரிதே தவிர, துர்நாற்றம் சகிக்க முடியாது!


உலகிலேயே மிகப் பெரிய விதை 'கடல் தேங்காய்'. இதை 'கடல்பனை' என்றும் சொல்லுவார்கள். விதை சுமார் 50 பவுண்டு. மரம் பனைமரம் மாதிரி இருக்கும். பிரஸ்லின் தீவில் வளர்கிறது. உயரம் சுமார் 31 மீட்டர். பெண் மரம் முளைத்து 100 ஆண்டுகள் கழித்துத்தான் பூக்கத் தொடங்கும். காய் முற்று வதற்கு 10 ஆண்டுகள் ஆகும்! விதை முளைப்பதற்கு 3 ஆண்டு கள் ஆகும்!



பின்லாந்தில் வளரும் 'பைன்' மரங்களின் வேர்கள்தாம் உலகிலேயே மிகவும் நீளமான வேர்கள். ஒரு வேர் பூமிக்குள் சுமார் 50 கி.மீ. தூரம் நீண்டு செல்லும்!



மரங்களில் 'ஓக்' மரத்திற்குத்தான் வேர்கள் அதிகம். ஒரு பெரிய 'ஓக்' மரத்தின் வேர்களை யெல்லாம் ஒன்று விடாமல் தோண்டி யெடுத்து, அவற்றைத் தொடர்ச்சியாக வைத்துக் கொண்டே போனால் அது சுமார் 40,000 கி.மீ. நீளம் இருக்கும்! பூமியின் மேல் ஒரு சுற்று சுற்றி விடலாம்!





★ வ. கீதா, தாதாபுரம்.


ஒரு நபருக்கு பாம்பு கடித்து விட்டால், கடித்த இடத்தில் வாயை வைத்து விஷத்தை உறிஞ்சி எடுக்கிறார்களே கிராமங்களில்! அது சரியா? அதனால், விஷத்தை எடுப்பவருக்கு ஆபத்து வராதா? விளக்கம் தேவை, டாக்டர்!

பாம்பு கடித்த இடத்தில் வாயால் விஷத்தை உறிஞ்சி எடுப்பதில் தவறில்லை! ஆனால், விஷத்தை உறிஞ்சி எடுப்பவருக்கு வாய்ப் புண்ணோ, தொண்டைப் புண்ணோ, சொத்தைப் பல்லோ இருக்கக் கூடாது. அப்படி இருந்தால் பாம்பின் விஷம் உறிஞ்சுபவருக்கும் பரவி விடும். ஆபத்து விளையும்!

★ கு. கோபிநாத், குடியாத்தம்.

'கிட்னி பெயிலியர்' என்றால் என்ன டாக்டர்? இந் நோய் வரக் காரணமென்ன? வராமல் தடுப்பது எப்படி? சிறுவர்களுக்கு இந் நோய் வருமா?

சிறுநீரகம் (KIDNEY) முழுமையாகவோ, தற்காலிகமாகவோ தன் செயலை இழந்தால் அதனைச் 'சிறுநீரகச் செயலிழப்பு' (KIDNEY FAILURE) என்கிறோம். இந் நோயின் போது சிறுநீர் வெளியேறுவதில்லை. இதனால், இரத்தத்தில் உள்ள கழிவுப் பொருட்கள் அகற்றப்படாமல் தேங்கி விடுகின்றன. இதன் காரணமாக உடம்பில் பல தொல்லைகள் உண்டாகின்றன. முறையான மருத்துவம் நேரத்தோடு கிடைக்கா விட்டால், மரணம் மனிதனை ஆட்கொள்ளும் அபாயமும் ஏற்படலாம்! அதிக இரத்த அழுத்தம், இதயக் கோளாறுகள், கல்லீரல் வியாதி, சர்க்கரை வியாதி போன்றவை சிறுநீரகச் செயலிழப்புக்கு முக்கிய



காரணங்களாகும். இந் நோய்க்கு வயது வரம்பில்லை. சிறுவர் முதல் பெரியோர் வரை எல்லா வயதினருக்கும் வரலாம். ஆறு மாதத்திற்கு ஒருமுறை மருத்துவப் பரிசோதனை செய்து கொள்வதும், எந்நோய்க்கும் ஆரம்பக் கட்டத்திலேயே மருத்துவர் ஆலோசனையைப் பெறுவதும் சிறுநீரகச் செயலிழப்பைத் தவிர்க்கப் பொதுவான வழியாகும்.

★ **ஆர். சுரேஷ், கலவை.**

'பபுல்கம்' எனப்படும் சூயிங்கத்தை சாப்பிட்டால் கெடுதலா, டாக்டர்?

கெடுதல்தான் தம்பி. வாய்ப்புண், சொத்தைப் பல், பல் ஈறு வீக்கம், வாயில் புற்றுநோய் போன்றவை சூயிங்கத்தைச் சாப்பிடுவதால் வரக் கூடிய கெடுதல்கள் என்பதைத் தெரிந்து கொள்.

★ **கே. காமாட்சி, வாலாசாபாத்.**

மூளைக் காய்ச்சல் நோய் எதனால் வருகிறது? இந் நோய் வந்தவர்கள் விரைவில் இறந்து விடுகிறார்களே, ஏன்? இது குழந்தைகளை அதிகமாகப் பாதிக்கக் காரணமென்ன?

மூளைக்காய்ச்சல் (ENCEPHALITIS) என்பது பொதுவான பெயர். இதில் பலவகை உண்டு. பாக்டீரியா, வைரஸ், காசநோய்க் கிருமிகள் மூளைக் காய்ச்சலை உண்டாக்க வல்லவை. சமீபத்தில் தமிழ்நாட்டில் பரவுவதாகச் சொல்லப்படும் மூளைக் காய்ச்சல்,வைரஸ் வகையைச் சார்ந்தது. 'ஜப்பனீஸ்-பி' எனும் வைரஸ் கிருமிகளால் அது வருகிறது. இக் கிருமிகள் உடம்புக்குள் நுழைந்து, மூளையை அடைந்து மூளை செல்களை அழித்து விடுவதால் மரணம் நிச்சயமாகிறது. மேலும், இதற்கான குணம் தரும் மருந்துகள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை! இந் நோய் பெரும்பாலும் குழந்தைகளையே பாதிப்பதற்குக் காரணம், நோய் எதிர்ப்பு சக்திக் குறைவும், சத்துக் குறைவும், சுயசுகாதாரமின்மையும்தான்!

★ **எம். வாணி, பாலப்பட்டி.**


டாக்டர், என் மூக்கில் வெள்ளை வெள்ளையாக முள் போன்று உள்ளது. தொட்டால் சொர சொரவென்று உள்ளது. இது எதனால் வருகிறது? போக்க வழி கூறுங்கள், டாக்டர்!


ஏ. டி. சி. வைட்டமின்கள் உடம்பில் குறைவாக இருந்தால் மூக்கில் முள் போன்று தோன்றும். அருகிலிருக்கும் மருத்துவரிடம் காண்பித்து தேவையான மருத்துவம் பெற்றுக் கொள். உணவில் கீரைகள், காரட், முட்டை, பழங்கள், ஆரஞ்சு, எலுமிச்சை, தக்காளி போன்றவற்றை தினமும் சேர்த்துக் கொண்டால் உன் குறை நீங்கும்! முகத்தை அடிக்கடி சோப்புப் போட்டுக் கழுவி சுத்தமாக வைத்துக் கொள்வதின் மூலமும் அதைத் தவிர்க்கலாம்!

★ **எஸ். சிவக்குமார், சிதம்பரம்.**

ஆணுக்கு அறிவு அதிகமா? பெண்ணுக்கு அறிவு அதிகமா?

அறிவு என்பது இருபாலருக்கும் சமம். அதை வளர்த்துக் கொள்வதற்கு எடுத்துக் கொள்ளப்படும் முயற்சிகள், சூழ்நிலை, சந்தர்ப்பங்கள் ஆகியவற்றைப் பொறுத்தே ஒருவருக்கு அறிவு அதிகமாகவும், மற்றொருவருக்குக் குறைவாகவும் அமைகிறது.





சுகுமார் சுகுமார்தான்!

கே. யுவராஜ்

ஒன்பதாம் வகுப்புப் படிக்கும் சுகுமாரை உங்களுக்குத் தெரியுமா? ஆளைப் பார்த்தால், 'எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கே!' என்பீர்கள். அது உண்மைதான். போன மாதம் அவனுடைய புகைப்படம் வராத பத்திரிகைகளே கிடையாது! தீர்க்க முடியாது போலீஸ் மண்டையைப் பிடித்துக் கொண்டு திண்டாடிய ஒரு திருட்டுக் கேசை, இவன்தான் இரண்டே மணி நேரத்தில் பிடித்துக் கொடுத்தான்! ஐ.ஜியே அவனுடைய வீட்டுக்கு வந்து பால்கோவா கொடுத்தார்! முதலமைச்சர் அவனை நேரில் அழைத்து தேநீர் விருந்து கொடுத்துத் தங்கப் பதக்கம் அளித்தார் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

இதில் அதிசயம் என்னவென்றால், இவ்வளவு பெருமைகள் கிடைத்தும் சுகுமாரிடம் துளிக்கூடப் பொறாமை இல்லாததுதான்! சர்வ சாதாரணமாக எல்லோரிடமும் சிரித்துப் பழகுவான்! பணிவாகப் பேசுவான்! இப்படிப்பட்ட ஒரு தங்கமான பையனை நீங்கள் பார்த்திருக்கவே முடியாது!

எந்த ஒரு விஷயத்தையும் அவன் மாறுபட்ட கோணத்தில்தான் பார்ப்பான்! அதனாலேயே மற்றவர்கள் பார்வைக்குக் கிடைக்காத பல உண்மைகளை அவன் கண்டுபிடித்திருக்கிறான். அவனுடைய வெற்றிக்குக் காரணமே இதுதான்!

அன்று காலை சுகுமார் பள்ளிக்குக் கிளம்பிக் கொண்டிருந்தான். கோடீஸ்வரர் தனகோடி அழைப்பதாக அவர் வீட்டுக் கார் வந்தது!

இன்னும் பத்து நிமிஷங்களில் தன்னுடைய சைக்கிளிலேயே வருவதாகக் காரை அனுப்பி விட்டுக் கிளம்பினான் சுகுமார். தனகோடி ஊரில் பெரும் புள்ளி. ஏராளமான தான தருமம், கல்விப்பணி செய்து வருபவர். சுகுமார் படிக்கும் பள்ளியின் ஒரு கட்டடம் கூட அவரது நன்கொடைதான். அவரது மகன் பாலு, அதே பள்ளியில் பத்தாவது படித்து வருகிறான். பலமுறை அவன் சுகுமாரின் திறமைகளைப் பாராட்டியிருக்கிறான்.

சுகுமார் தனகோடியின் வீட்டுக்குள் நுழைந்ததும் அவரே முன்னே வந்து வரவேற்றார். தனது தனி



அறைக்கு அழைத்துச் சென்றார். அவரது முகம் கலங்கியிருப்பதை சுகுமாரால் கவனிக்க முடிந்தது.

பிஸ்கட்டையும் தேநீரையும் பணியாள் கொண்டு வந்து வைத்து விட்டுச் சென்றதும் கதவைத் தாளிட்ட தனகோடி, ''சுகுமார், எனக்கு உன் உதவி தேவைப்படுகிறதுப்பா'' என்றார். அவர் கண்கள் கலங்கின.

''என்ன சார்! இப்படிக் கலங்குகிறீர்கள்! என்ன நடந்திருந்தாலும் மனத்தை திடப்படுத்திக் கொள்ளுங்கள். இப்படிக் கலங்கினால் எந்தப் பிரச்னைக்கும் நம்மால் தீர்வு கண்டு பிடிக்கவே முடியாது'' என்று அவரை சமாதானப்படுத்திய சுகுமார், ''இனி மேல் சொல்லுங்கள் சார்! என்ன பிரச்னை?'' என்று கேட்டான்.

''பாலுவை இரண்டு நாளாக் காணோம்ப்பா''

சொல்லும்போதே தனகோடியின் கண்கள் கண்ணீரைச் சொரிந்தன.


''ஏதாவது கூறி விட்டுப் போனானா?''

''இல்லையே! முந்தா நேற்றுக் காலை பள்ளிக்குக் கிளம்பும் போது, சாதாரணமாகத்தான்; அதுவும் வழக்கப்படி போவது போலத்தான் கிளம்பிப் போயிருக்கிறான். முந்தா நேத்து இரவு நான் அவனுக்குத் தெரிந்த இடமெல்லாம் விசாரித்து விட்டு, போலீசில் புகார் பண்ணி விட்டு வந்தேன். போலீசில் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்ஸ்பெக்டரின் யோசனைப்படி இதை நான் யாரிடமும் தெரிவிக்கவில்லை.''

சுகுமார் யோசனையோடு தனகோடியைப் பார்த்தான்.

''பாலுவிடம் பணம் ஏதாவது இருந்ததா? மைனர் செயின், மோதிரம், தங்கக் கைக்கடிகாரம் இப்படி எதையாவது போட்டிருந்தானா?''

''அதையும் பார்த்து விட்டேன். எல்லாம் பத்திரமாக இருக்கு. அவன் விலையுயர்ந்த பொருள் எதையும் அணிந்து கொண்டு போகவில்லை'' என்று நிறுத்திய தனகோடி, சட்டைப் பையில் இருந்து ஒரு கடிதத்தை



எடுத்தார்.

''தம்பி, இந்தக் கடிதம் இன்று காலை தபாலில் வந்தது. போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் தருவதற்கு முன்னால், உன்னிடம் விஷயத்தைச் சொல்லிக் காட்ட வேண்டும் என்று எனக்குத் தோன்றியது. இந்தா பார்'' என்று கடிதத்தைக் கொடுத்தார் தனகோடி.



சுகுமார் கடிதத்தைப் படித்தான்.

''அன்புள்ள ஸ்ரீஅப்பாவுக்கு, பாலு எழுதியது. என்ன்னை இ ங் கே ஞர்நான்கு பேர் ந்கடத்தி வந்திருக்ஃர்கி றார்கள். பூரிபணம் தேவையாம். கேட் கிழ்றார்கள். இந்தக் கஞ்டிதத்தை போலீசில் காட்டினால் கொர்ஜ்ன்று விடு வார்களாம். ஓட்டல் ஸ்சரவணா வாச லில் கோடு போட்ட சட்டையில் ப்பையன் இருப்பான். அவனிடம் நீங்ஞ்கள் பத்து லட்சம் பதீணம் தரவும். உடனே என்னை விட்டு விடுவார் களாஞ்ரீம். தவறினால் கொலை செய் வார்களாம். இன்றே பணம் தந்து காப் பாற்றவும். - பாலு''

கடிதத்தைப் பலமுறை திரும்பத்

திரும்பப் படித்தான் சுகுமார். பிறகு ''ஐயா இதற்கு முன் பாலு வெளியூர் போயிருக்கும் போது எழுதிய கடிதம் ஏதாவது இருக்கிறதா?'' என்று கேட்டான்.

''இல்லையே தம்பி! ஆனால், இந்தக் கையெழுத்து அவனுடையது தான். அதில் கொஞ்சம் கூடச் சந்தேகமே இல்லை!''

''ஐயா, பாலுவிடம் நான் நெருக்கமாகப் பழகியதில்லை. அதற்கு வாய்ப்பும் இல்லை. ஆனால் 'தமிழில் பாலு தான் முதல் மார்க் வாங்குவான். கவிதைகள் கூட எழுதுவான். எழுத்துப் பிழை இல்லாது எழுதுபவர்களில் பாலுவுக்குத்தான் முதலிடம்,' என்று தமிழாசிரியர் அடிக்கடி பாலுவைப் புகழ்வதை நான் கேட்டிருக்கிறேன். அப்படிப்பட்ட பாலு, இப்படிப்பட்ட எழுத்துப் பிழைகள் நிறைந்த ஒரு கடிதத்தை எழுதியிருப்பது எனக்கு அதிசயமாக இருக்கிறது!'' என்றான் சுகுமார்.

''எனக்கும் அப்படித்தான் இருக்கிறது சுகுமார். ஆனால், எந்த நிலையில் அவன் இதை எழுதியிருக்கிறான் என்பதை எண்ணிப் பார். அவனைப் பிடித்துக் கொண்டு போயிருப்பவர்கள், எவ்வளவு சித்ரவதைப்படுத்தி அவனை இந்தக் கடிதம் எழுத வைத்தார்களோ! அந்த பயத்தில், மனம் கலங்கிய நிலையில் அவன் எழுதியிருக்கிறான் என்பதை நினைக்கும் போது இந்த அடித்தல் திருத்தல்

''இந்த நாய் இனம் வீரமுடையது என்பதை எப்படிக் கண்டுபிடிச்சே?''

'' 'வான் வான்'னுதானே எதுக்கும் கத்துது?''



எழுத்துப் பிழைகள் எல்லாம் நியாயமே'' என்றார் தனகோடி.

காலிங்பெல் சத்தம் கேட்டது. கதவைத் திறந்து கொண்டு வந்த பணியாள், இன்ஸ்பெக்டர் வந்திருப்பதாகக் கூறினான்.

இன்ஸ்பெக்டரை வரவேற்ற தனகோடி, கடிதத்தைக் கொடுத்தார். சுகுமார் அங்கு இருப்பதைக் கண்டதும் மகிழ்ச்சியோடு சிரித்த இன்ஸ்பெக்டர், ''நானே உன்னை வந்து பார்க்க வேண்டும் என்று இருந்தேன். நீயே வந்து விட்டாய்!'' என்று கூறி விட்டுக் கடிதத்தைப் படித்தார். முடித்தார்.

''மாறுவேடத்தில் ஆட்களைத் தயார் செய்து சரவணா ஓட்டல் வாசலில் நிற்க வைக்கிறேன். நீங்கள் பணத்தோடு வாருங்கள். ஒரே அமுக்காய் அமுக்கி விடலாம்'' என்றார் இன்ஸ்பெக்டர்.

''போலீஸ் உதவியை நாடினால் கொன்று விடுவோம்னு அவங்க மிரட்டறதா பாலு எழுதியிருக்கானே!'' என்று பதறினார் தனகோடி.

திரும்பத் திரும்பக் கடிதத்திலேயே மூழ்கியிருந்த சுகுமார் மகிழ்ச்சியோடு துள்ளினான்.

''இன்ஸ்பெக்டர் சார், சாதாரண உடையில் ஒரு நாலு போலீஸ்காரர்களை என்னோடு சைக்கிளில் அனுப்பி வையுங்க. இன்னும் இரண்டு மணி நேரத்தில் பாலுவைக் கொண்டு வந்து சேர்க்கிறேன்'' என்று கிளம்பினான்.

சொன்னபடியே அவன் செய்தும் காட்டினான்!


''என்ன மந்திரம் போட்டுக் கண்டு பிடிச்சேப்பா!'' என்று வியந்து கேட்டார் தனகோடி. அவன் கூறுவதைக் கேட்க இன்ஸ்பெக்டரும் தயாராக இருந்தார்.

''உங்கள் மகன் பாலு புத்திசாலி. கடிதத்தில் தவறாக எழுதி அடித்திருந்ததில் ஏதோ சமிக்ஞை இருப்பதாக எனக்குப் பட்டது. அடித்த எழுத்துக்களைக் கூட்டிப் பார்த்தேன். அண்ணா நகர் பாழடைந்த பங்களா என்று வந்தது. இன்ஸ்பெக்டர் உதவியுடன் பிடித்து விட்டேன்'' என்றான் சுகுமார்.



எங்க பாட்டி இறந்துட்டாங்க. லீவ் வேணும்
போன மாசம் தானே பாட்டி இறந்ததா சொல்லி லீவு போட்ட?
ஏங்க தாத்தாவுக்கு ரெண்டு மனைவி மிஸ்!
தக்கோலம் அ.முஸ்தாபா
நீ கடலை உருண்டை வாங்கியதுக்கு உன்னை ஏ வாத்தியார் அடிச்சாரா?
ஆமா... அது பக்கத்து பையன் பாக்கெட்டிலிருந்து எடுத்த காசாச்சே!
ஏ.வி. இளங்கோ
"பயங்கரமானது" எது என்று உனக்கு தெரியுமா?
தெரியாது, நீயே சொல்
குண்டுமல்லி
உங்க பையன் நோட்டில் லைன் மேலயே எழுத மாட்டேங்கறான்!
"LION"னா ரொம்ப பயம், சார் அவனுக்கு
நந்தி
சிரிப்பு...
நேத்து ஸ்கூட்டருக்கு லைசென்ஸ் இல்லாம மாட்டிக்கிட்டேன்
அப்புறம் எப்படி வந்தே?
நல்லவேளை உன் அட்ரஸை கொடுத்துட்டு தப்பிச்சிட்டேன்
!?!
தக்கோலம் அ.முஸ்தாபா
செ

கொள்ளைக்காரனைப் பிடிக்க
சூப்பர்மேனுக்கு வழிகாட்டுங்கள்!



‘‘டேய் மணி நான் சொன்னா கேளுடா. வில்லு அம்பு வைச்சி வீட்டுக்குள் விளையாடறது ஆபத்து”என்று கத்தினான் ராஜா. ‘அட போடா!’ என்று கூறி அவன் மீதே ஒரு ‘அஸ்திரம்’ விட்டான் மணி. ராஜாவின் மேல் குத்தியது அம்பு. அவன் மௌனமாய்ச் சென்று விட்டான்.

முத்து மணி தன்னுடைய மனைவியிடம் ‘நான் போய் என்னோட பிரண்ட் தரேன்னு சொன்ன ஆயிரம் ரூபாயை வசங்கிட்டு வரேன்’ என்று கூறி விட்டுப் போனார். முத்து மணி யார் தெரிகிறதா? மணியின் அப்பா.

மாடியில் இருந்து மீண்டும் குறி பார்த்துக் கொண்டு இருந்தான் மணி!



தெருவில் யாரோ ஒருவர் சைக்கிளில் வந்தார். குறி வைத்து பொம்மை வில்லை வளைத்து தென்னங்குச்சி அம்பை விட்டான். அதே சமயத்தில் கேட்டுக்குள் நுழைந்தார் முத்துமணி. அவரைக் கவனிக்காமல் அம்பை விட்டான் மணி. அது என்ன ‘ராமர் விட்ட பாணமா?’ குறி பிசகாமல் இருப்பதற்கு! பிசகியது. அப்போதுதான் கேட்டுக்குள் நுழைந்த முத்துமணியின் கண்களைப் பதம் பார்த்தது! ‘ஐயோ’ என்று அலறிய அவர் தன் பையை வீசி எறிந்தார். அது சாக்கடைக்குள் விழுந்தது. அப்போதுதான் அதைக் கவனித்தான் மணி. அதற்குள் சத்தம் கேட்டு வந்த அம்மா அவரை உள்ளே அழைத்துக் கொண்டு போனாள். பயந்து கொண்டே மணியும் உள்ளே போனான்.

முத்துமணி கண்ணை மூடிக் கொண்டு அலறினார். ‘ஐயோ என் கண் போச்சே. பை போச்சே’ அவர் மனைவி ஏதோ சொல்ல வாயெடுத்தாள். அதற்குள் மணி ‘‘அப்பா, இனிமே இப்படிப் பண்ண மாட்டேன், என்னை மன்னிச்சிடுங்க. இனிமே வீட்டுக்குள் வில் அம்பு ஆட மாட்டேன். இது நிச்சயம்’ என்று அழுதான்.

அப்பா சிரித்தபடியே ஆயிரம் ரூபாயை எடுத்து தன் மனைவியிடம் கொடுத்து விட்டு மீண்டும் சிரித்தபடியே கூறினார். ‘மணி, என் கண்ணுக்கு ஒன்றும் ஆகவில்லை. அம்பு பட்டது போல் நடித்தேன். அவ்வளவுதான்’ என்றார்.

மணி மாடிக்குப் போய் அம்பையும், வில்லையும் எடுத்துத் தெருவில் வீசப் போனான்.

‘‘வேண்டாம் மணி. உன்னை வீட்டுக்குள்தான் வில், அம்பு விடக் கூடாதுன்னு சொன்னேனே தவிர, இதை விளையாடவே கூடாதுன்னு அல்ல. மைதானத்தில் போய் தாராளமா விடு. அது கூட எதிரே யாரும் இல்லாதப்போ விடு’’ என்று தடுத்தார்.

ராஜா சிரித்தான். ஏன்?

அப்பா முத்துமணியிடம் இப்படி நாடகம் போடச் சொன்னதே அவன் தானே?


அது புரியாமல் மணியும் பதிலுக்குப் புன்னகைத்தான்!

நீங்கள் கூறி விடாதீர்கள்!

– எம். ஜெ. அருண்.

பிருந்தாவனக்

மண்புழுவே!




மண்ணுக் குள்ளே வாழ்கிறாய்
மறைந்து உரமாய் இருக்கிறாய்
கண்டு உன்னுடன் பேசவே
காத்துக் கிடக்கேன் வாராயோ!

அற்ப உதவி செய்தாலும்
அரிய பதவி கேட்டிடும்
விற்பனை மனத்தார் நடுவிலே
வியக்கும் உயிர்நீ மண்புழுவே!

உழைப்பது வெளியே தெரியாமல்
உள்ளே மண்ணில் உறைகிறாய்!
உழவர் உன்னைப் போற்றுறார்
உற்ற நண்பனாய் என்னுறார்!

– ஆர். சுபாஷிணி,
சென்னை - 45



மேகமே!

வெள்ளைப் பஞ்சு மேகமே
வேகமாகப் பறக்கிறாய்
எல்லை இல்லா வானத்தில்
எதனைத் தேடி அலைகிறாய்?

கடலின் மேலே பிறக்கிறாய்
காற்றில் ஏறி விரைகிறாய்
தடையில் மலையில் குளிர்கிறாய்
தண்ணீர் சொரிந்து கரைகிறாய்

மழையை அளிக்கும் மேகமே
மக்கள் வாழ்த்தும் மேகமே
தழைத்து வாழ உயிர்களை
தாயாய் நினைக்கும் மேகமே.


– ஆர்.எஸ். பிரகாஷ்,
நல்ல கவுண்டன் பாளையம்

எங்கள் பாட்டி!

பாட்டி நல்ல பாட்டி
பழைய காலப் பாட்டி
வாட்டம் போக்கக் கதைகள்
வியக்கச் சொல்லும் பாட்டி.
நல்ல நீதி சொல்லும்
நாட்டுப் புறப் பாடல்
நல்ல நல்ல புதிர்கள்
நாங்கள் வியக்கச் சொல்வாள்.

பீமன் ராமன் கதைகள்
பாட்டுப் பாடிச் சொல்வாள்
சோம்பல் என்ற ஒன்றை
சிறிதும் அறியாப் பாட்டி!

– கே.எம். யோகலிங்கம்,
மாத்தூர்.



கவியரங்கம்!



பாடல் படைக்கப் போறேன்!

கவிதை படைக்கப் போகிறேன்
கேட்க ஓடி வாருங்க!
தவிக்கும் எண்ணக் குவியலைத்
தணிக்கப் போறேன் கேளுங்க!

சிறுவர் விரும்பிப் பாடவே
சின்ன அழகுப் பாடல்கள்
விரும்பி விரும்பிப் பாடவே
வடிக்கப் போறேன் வேகமாய்!

நிலவு மழை மேகத்தை
நிறைய வண்ணப் பறவையை
மலைகள் ஆற்றின் அழகினை
மடக்கப் போறேன் கவிதையில்!

– அ. முகமது நிஜாம்,
நெல்லிக்குப்பம் - 607 105

பாருங்கள்!


எங்கள் நாட்டைப் பாருங்கள்
இதற்கு நிகர் கூறுங்கள்.
எங்கள் நாட்டைப் போலவே
எதுவும் உளதோ சொல்லுங்கள்.

சீலம் மிக்க தலைவர்கள்
சிறந்து வாழ்ந்த நாடிது.
ஞாலம் வியக்கத் தியாகங்கள்,
நாங்கள் செய்த நாடிது.

அகிம்சை வழியில் நின்றது.
அடிமை விலங்கை உடைத்தது.
பகைவர் நடுங்க உலகிலே
புதிய வீறு கொண்டது.

தொழில்கள் வளரச் செய்வது.
தூய அமைதி காப்பது.
வறுமைப் பேயை விரட்டியே
வாழ்வு செழிக்க வைப்பது!

– மு. பூபாலன், மூஞ்சூர்'.பட்டு.



தம்பி....!

காலையில் எழுவாய் தம்பி,
கடன்களை முடிப்பாய் தம்பி,
வேலையில் முனைவாய் தம்பி,
விருப்பமாய் படிப்பாய் தம்பி.

அன்னை அளித்திடும் உணவை
அன்பாய் உண்பாய் தம்பி,
அன்னை உனக்கு தெய்வம்
அறிந்து நடப்பாய் தம்பி.

பள்ளிக்குச் செல்வாய் தம்பி,
பாடங்கள் கற்பாய் தம்பி!
நல்ல நண்பரை நம்பி
நட்பை வளர்ப்பாய் தம்பி.

உயர்வைத் தருவது தம்பி
உழைப்பே என்றனர் தம்பி
பயமும் தயவும் ஒதுக்கி
பாரில் உயர்வாய் என்றும்.

– என். கோபால்,
மேட்டுவலசு. P.O.



மிதிவண்டி

இரண்டு சக்கர மிதிவண்டி
எங்கும் ஓடும் மிதிவண்டி
முரண்டு செய்யா மிதிவண்டி
மாமா தந்த மிதிவண்டி

பெட்ரோல் எண்ணெய் இல்லாமல்
பறக்கும் மிதித்தால் மிதிவண்டி
நாட்டில் ஏழை எளியோர்கள்
நம்பும் நல்ல மிதிவண்டி

அக்கா தங்கை அம்மாவை
அல்லது அருமை நண்பனையே
பின்னால் ஏற்றிச் சென்றிடவே
பெரிதும் உதவும் மிதிவண்டி!

- கே. யுவராஜ், ஆரணி - 1.



வானொலி

அற்புத வானொலி கேளுங்கள்
அறிவியல் சாதனை காணுங்கள்
உற்ற நண்பன் இதுபோல
உலகில் இல்லை அறிவீரோ?

பாட்டும் பேச்சும் நாடகமும்
பலரும் விரும்பும் நிகழ்ச்சிகளும்
நாட்டில் நடக்கும் செய்திகளை
நயமாய்த் தருவது வானொலியாம்!

உலகச் செய்திகள் அத்தனையும்
உடனுக் குடனே தந்திடுவான்
கலகம் எதுவும் செய்யாத
கண்ணியம் நிறைந்த நண்பனிவன்!

- ம. கணேசன், குடந்தை.

தூண்டிடும்

நல்ல நல்ல பள்ளியில்
நடத்தும் நல்ல பாடம்தான்
வல்ல வல்ல மனிதராய்
வளரச் செய்ய உதவுமே!

சிறந்த சிறந்த கருத்துக்கள்
சொல்லும் உயர்ந்த நூல்கள்தான்
சிறந்த சிறந்த மனிதராய்
சிறந்து விளங்க உதவிடும்!

பெரிய பெரிய சாதனை
படைத்த பெரியோர் வாழ்க்கைதான்
அரிய செயல்கள் செய்யவே
அழகாய் நம்மைத் தூண்டிடும்!

- கே. சுபாஷிணி,
சென்னை - 59.





அஞ்சிடேன்!

பக்காத் திருடன் முனியனுமே
போலீஸ் என்றால் நடுங்கிடுவான்!
சொக்கா கடிக்கும் சுண்டெலியும்
சின்னப் பூனைக்கு நடுங்கிடுது!

துள்ளி ஓடும் மானினமும்
துப்பாக்கி கண்டால் நடுங்கிடுமாம்!
வண்ணம் மிக்க பறவைகளும்
வேடன் என்றால் நடுங்கிடுமாம்!

எவரும் அஞ்சும் அப்பாவும்
ஏனோ பாட்டிக்குப் பயந்திடுவார்!
இவரைப் போல அடியேனை
எண்ணிட வேண்டாம் கேளுங்கள்!

அப்பா அம்மா அண்ணனென
அடியேன் எவர்க்கும் அஞ்சிடேனே!
எப்போ தேர்வு என்றாலும்
ஏனோ எனக்கு நடுக்கம்தான்!

- பா. பூமா, சென்னை - 14.



மழை

காற்று குளிர்ந்து வீசுது
கரிய மேகம் திரளுது
காற்றின் வேகம் கூடுது
கனத்த தூறல் தூறுது!

வானை மின்னல் பிளக்குது
வெளிச்சம் காட்டி மறையுது!
பாறை உருளும் ஓசையாய்
பலத்த இடியும் இடிக்குது!

இளைத்த கம்பி போலவே
இனிய மழை பொழியுது
குழைத்து மண்ணை அரிக்குது
கூட இழுத்து ஓடுது!

பள்ளம் வீதி குட்டைகள்
பாய்ந்து வெள்ளம் வழியுது!
எல்லை இல்லா ஆனந்தம்
எங்கும் பொங்கி நிறையுது!

- வி. இராமலிங்கம்,
சென்னை - 19.

கோமதியும் குட்டி யானையும்

அ. உமாராணி



கோமதி தன் சிறுவர் பட்டாளம் புடைசூழ ஆலய முன் மண்டபத்தைக் கடந்தாள். மண்டபத்தின் ஒரு மூலையில் தென்னை ஓலையைச் சுவைத்துக் கொண்டிருந்த குட்டியானை கஜராஜன் அவளைக் கண்டதும், துதிக்கையை உயர்த்தி சின்னதாக ஒரு மகிழ்ச்சிப் பிளிறலைப் பிளிறிற்று.

ஒரு நிமிடம் நின்று கஜராஜனையே நோக்கினாள் கோமதி. இன்னும் எத்தனை நாட்களுக்கு இந்த கஜராஜனை இங்கே பார்க்கப் போகிறோமோ என்ற எண்ணம் தோன்றியதும், துக்கம் மனதைப் பிசைந்தது. கண்களில் பொங்கிய கண்ணீரை அடக்கிக் கொண்டு படியேறி அறங்காவலரின் அலுவலகத்தை நோக்கி விரைந்தாள்.

அலங்கார மண்டபத்தின் படிகளில் உட்கார்ந்திருந்த அறங்காவலர் முத்தையா, கோமதி வருவதைப் பார்த்து விட்டார். அருகே இருந்த தனது நண்பரிடம், ''அதோ முதலில் படியேறி வந்து கொண்டிருக்கிறாளே உயரமான ஒரு சிறுமி, அவள்தான் கோமதி. இந்த குன்றுப் பாக்கம் குமரன் கோவிலுக்கு யானைக்குட்டி நன் கொடையாகக் கிடைக்கக் காரணமானவள்'' என்று அறிமுகப்படுத்தினார்.

''அப்படியா!'' என்று வியந்தார் நண்பர்.

''புராதனமான ஆலயமானாலும் இந்தக் குமரன் கோவிலுக்கு அறுபது வருஷமா யானை இல்லை. பெரியவர்கள் ஏங்கியதைவிட, குழந்தைகள் அதிகமாக ஏங்கினார்கள். இரண்டு வருஷத்திற்கு முன்னால் ஒரு அதிசய நிகழ்ச்சி நடந்தது. காஞ்சிபுரத்தில் இருந்து, கோடீஸ்வரரான வணிகர் செல்லப்பன், தனது குடும்பத்தாருடன் காரில் ஒரு திருமணத்திற்காக வந்து கொண்டிருந்தார். இந்த ஊருக்கு அருகே வந்ததும் கார் பழுதாகி விட்டது.''

''அப்புறம்?'' என்று முத்தையாவை ஊக்கினார் அவரது வெளியூர் நண்பர்.

''காரை சரி செய்து கொண்டு அவர் கிளம்பினார். அவரிடம் இருக்கும் ரொக்கத்திற்காகவும், குடும்பத்தினர் அணிந்திருந்த நகைகளுக்காகவும் அவரது காரைப் பின் தொடர்ந்து வந்து கொண்டிருந்த ஒரு கொள்ளைக் கூட்டம், குமரன் குன்றின் அடிவாரத்திற்கு அருகே அவரை வழிமடக்கியது. கத்தி முனையில் அவர்களிடம் இருந்த ரொக்கம், ஏராளமான நகைகள் எல்லாவற்றையும் பறித்துக் கொண்டு அவர்களைக் காரில் உட்கார வைத்து, கதவுகளை மூடி, காருக்குத் தீ வைக்கவும் முயற்சித்தது. நாங்கள் எல்லோரும் பார்த்துக் கொண்டிருந்தோமே தவிர, யாருக்கும் என்ன செய்வது என்றே தோன்றவில்லை!''

''அப்புறம்!''

''கோவிலுக்கு வெள்ளையடிக்க பெரிய பெரிய டிரம்களில் சுண்ணாம்பு தாளித்து வைத்திருந்தார்கள். இந்தச் சிறுமி கோமதி, ஒரு குவளையை




எடுத்து, சுண்ணாம்பை மொண்டு, கொள்ளைக்காரர்கள் முகத்தில் வீசி, அவர்களைச் செயலற்றவர்களாக்கினாள்! காரின் கதவுகளை உடைத்து செல்லப்பனின் குடும்பத்தினரைக் காப்பாற்றினாள்.''

''அவளுடைய சமயோசித அறிவையும் துணிவையும் எத்தனை பாராட்டினாலும் தகும். மேல சொல்லுங்க. ரொம்ப சுவையா இருக்கு!'' என்று கேட்டுக் கொண்டார் நண்பர்.

''தங்களுடைய உயிர், உடைமைகளைக் காப்பாற்றியதற்காக செல்லப்பன் கோமதிக்கு பத்தாயிரம் ரூபாய் பரிசு தர முன் வந்தார்!''

''நியாயம்தானே? எத்தன கொடுத்தாலும் தகுமே?''

''ஆனால், கோமதி அதை வாங்கிக்க உறுதியா மறுத்துட்டா. ஆபத்தில் சிக்கியுள்ளவர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் எல்லோரும் செய்ய வேண்டிய ஒரு செயலைத்தான் நான்



செய்தேன். இதற்கு ரூபாய்க் கணக்கில் விலை போட்டு விடாதீர்கள்'' என்றாள்!''

''ஒரு சிறுமிக்கு இத்தனை பெரிய பரந்த மனமா! என்னால் நம்பவே முடியவில்லையே?''

''இப்படித்தான் அந்தச் செல்லப்பனும் அசந்து போனார். தனது மன மகிழ்ச்சிக்காகவாவது அவள் அதை ஏற்க வேண்டும் என்று கட்டாயப் படுத்தினார். ஆனால், கோமதி அதை ஏற்கவில்லை. செல்லப்பனும் விடுவதாக இல்லை. கடைசியில் கோமதியே ஒரு யோசனை கூறினாள்.''

''என்ன யோசனை சார் அது?'' என்று ஆவலுடன் கேட்டார் நண்பர்.

''எங்க ஊர் முருகன் கோவிலுக்கு அறுபது வருஷமா யானையே இல்லை. யானையையே கண்ணால் காணாத பெரியவர்கள் கூட இங்கே சுற்றுவட்டார கிராமங்களில் அதிகம், எங்க குன்றுப் பாக்கம் குமரனுக்கு ஒரு யானை இருக்க வேண்டும் என்பது என் போன்ற சிறுவர் சிறுமியரின் நீண்ட கால ஏக்கம். உங்களைப் போன்ற பெரிய மனிதர்கள் மனம் வைத்தால் இது பெரிய காரியம் அல்ல. இதை நீங்கள் செய்தால், உங்கள் உயிரையும் உடைமைகளையும் காத்த இந்த முருகப் பெருமானுக்கு நீங்கள் செலுத்தும் காணிக்கையாக இது அமைவதுடன், கோவிலுக்கு நன்கொடை வழங்கிய புண்ணியமும் கிடைக்கும்'' என்று கோமதி யோசனை கூறினாள்.

''புத்திசாலிப் பெண்.''

''கோமதியின் வேண்டுகோளை ஏற்று காஞ்சிபுரம் செல்லப்பன் நன்கொடையா வாங்கித் தந்த யானைக் குட்டிதான் கஜராஜன். குன்றின் அடிவாரத்தில் நீங்கள் பார்த்திருப்பீர்களே?''

''ஆமாம். பார்த்தேன். 'துறு துறு'ன்னு மனதை ஈர்க்குது.''


''யானைக் குட்டியை நன்கொடையாகத் தந்த செல்லப்பன், அதன் பராமரிப்புச் செலவுகளுக்காக மாதம் ஆயிரம் ரூபாய் தந்து வந்தார். கோவிலுக்கு வருமானம் இல்லை என்றாலும், எப்படியோ கஷ்டப்பட்டு, பாகனுக்குச் சம்பளம் போன்றவற்றைத் தந்து விடுகிறோம். ஆறு மாதம் முன்பு செல்லப்பன் காலமாகிவிட்டார். அவரது பிள்ளைகள் மாதம் ஆயிரம் ரூபாய் அதிகச் செலவு என்று நிறுத்தி விட்டார்கள். யானையைக் கட்டித் தீனி போட்டு, பாகனுக்கும் சம்பளம் தர முடியாது கோவில் நிர்வாகம் திணறுது. பெரிய மனிதர்களிடம் எல்லாம் போய்க் கெஞ்சிப் பார்த்தோம். யானைக்குத் தீனி போடும் செலவு என்றால் எல்லோரும் பயப்படுகிறார்கள். அத்தனை பெரிய ஜீவனை பட்டினி போட முடியுமா? அதனால் அரசாங்கத்திற்கு எழுதினோம். 'எப்ப உங்களால் முடியலைன்னு உறுதியா முடிவு பண்றீங்களோ, உடனே யானையை வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் கொண்டு வந்து விட்டு விடுங்கள்' என்று பதில் வந்து விட்டது.''

''அட பாவமே! கடைசியில் இப்படியா? கேட்கவே மனதுக்குக் கஷ்டமா இருக்கே?''

கோமதி தன் சிறுவர் பட்டாளத்துடன் மண்டபத்தை அடைந்து, முத்தையாவுக்கும் அவரது நண்பருக்கும் வணக்கம் போட்டாள். படிக்கட்டிலேயே வசதியாக அமர்ந்து கொண்டனர்.

''ஐயா, ஊர்ப் பெரிய மனிதர்களில் பத்து இருபது பேர் ஒற்றுமையாக முயன்றால் மாதம் ஆயிரம் ரூபாய் என்பது பெரிய தொகை அல்லவே?'' என்றாள் கோமதி.

''நான் ஏறிக் கேட்காத பெரிய மனிதர் வீடு இல்லைம்மா. யானைத் தீனி என்பது அரசர்களுக்கே தயக்கத்தைக் கொடுக்கும். அதோடு, இந்த கஜ ராஜன் வளரும் யானை. நாளுக்கு நாள் தீனியின் அளவு அதிகமாகுமே தவிரக் குறையாது. விலைவாசி விற்கிற விலையைப் பார்க்கும் போது எல்லோரும் பயப்படுகிறார்கள். ஊரிலே நடுத்தரக் குடும்பம்தான் அதிகம். அவங்க பயப்படறதுல நியாயம் இருக்கு. மனதைத் தேற்றிக்கம்மா. எனக்கு மட்டும் வருத்தம் இல்லையா? மனித முயற்சியில் செய்யக் கூடியது எல்லாத்தையும் செய்து பார்த்து சோர்ந்துவிட்டேன். நாளை மறுநாள் கிருத்திகை. அது முடிஞ்சதும், அடுத்த நாள் கஜராஜனை



டினோசார பூங்கா!

★ முதல் மனிதன் தோன்றுவதற்கு முன்பே டினோசார் (Dinosaurs) இராட்சத விலங்குகள் உலகிலிருந்து அழிந்து போய் விட்டன. ஆனாலும், ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் டினோசார் பூங்கா ஒன்று காணப்படுகிறது. இது எப்படி? டினோசார்களின் எலும்புக் கூடுகளை அடிப்படையாகக் கொண்டு கான்கிரீட் மூலம் பிரான்ஸ் க்ருஸ் என்ற ஓவியர் நிறைய சிற்பங்களை இந்தப் பூங்காவிலே அமைத்திருக்கிறார். தூரப்பார்வைக்கு இந்தச் சிற்பங்கள் உயிருள்ளன போலவே காணப்படுகின்றன.

- எஸ். ரவி, ஆற்காடு.

லாரியில் ஏற்றி வண்டலூருக்குக் கொண்டு போறதா முடிவு பண்ணி யிருக்கேன்'' என்றார் முத்தையா. அவர் கண்களும் கலங்கின.

''அக்கா, நான் என்னோட உண்டி யல்ல இருந்து மாதம் ஒரு ரூபாய் தரேன் அக்கா. கஜராஜனை அனுப்ப வேண்டாம்'' என்றாள் மழலை மாறாத ஒரு சிறுமி.

''நானும் ஒரு ரூபாய் தரேன்.''

''நான்கூட அக்கா, கஜராஜனை அனுப்ப வேண்டாம் அக்கா.''

குழந்தைகள் உற்சாகமாகக் கூறி யதைக் கேட்டு, கோமதி வேதனை யோடு சிரித்தாள்.

''யானைப் பசிக்குச் சோளப் பொறிங்கறது இதுதாம்மா....!'' என்று சிரித்தார் முத்தையா.

கோமதிக்கு மூளையில் ஏதோ பொறிதட்டியது.

''ஐயா, இந்தக் குன்றுப் பாக்கத்தில் சுமார் நூறு தெருக்கள் இருக்கு இல்லையா? இதே போல், ஒரு தெரு வில் குறைந்தது எழுபது வீடுகளாவது இருக்கு இல்லையா? ஒவ்வொரு வீட்டிலும் மாதம் ஒரு ரூபாய் நன் கொடை கொடுத்தால் கூட ஆயிரம் ரூபாய்க்கு மேல் மிக எளிதாக வரு லாகிவிடுமே? ஒரு ரூபாய் என்பது எல்லோராலும் கொடுக்கக் கூடிய் எளிய தொகை. மொத்தமாக அதிகப் பணம் கேட்டால்தான் தயங்குவார்கள். யாருக்கும் சுமையாக இருக்கும்?''


முத்தையா கோமதியைத் திகைப் புடன் நோக்கினார்.

''கோமதி...! உன் யோசனை அற் புதம். நான் பெரிய மனிதர்களைத்தான் அணுகினேனே தவிர, சாதாரண மக் களை அல்ல. அது எத்தனை பெரிய முட்டாள்தனம் என்பதை இப்பொழுது உணர்கிறேன். உன் யோசனை கண்டிப் பாக வெற்றி தரக் கூடியதே. யானையை அனுப்பி விடப் போகி றோமே என்ற வருத்தம் ஊர் மக்கள் அனைவருக்கும் இருக்கிறது. அதோடு இது அவர்களுடைய ஊரின் பெருமை யையும் பாதிக்கக் கூடியதல்லவா? நாம் நேரிலேயே வீடு வீடாகச் சென்று கேட்கலாம். இப்பவே கிளம்பு'' என்று எழுந்தார் முத்தையா அளவில்லா மகிழ்ச்சியுடன்.

''ஐயா, நாம் போகும்போது கஜ ராஜனையும் அழைத்துப் போகலாம். அதுவும் பயன் தரும்.''

''கஜராஜன் மட்டுமல்ல. உன் சிறு வர் பட்டாளமும் கூடவே வரவேண் டும். தயங்கும் ஒன்றிரண்டு பேர்களை யும் இவர்கள் சரிக்கட்டி விடுவார்கள். குழந்தைகள் மனம் வைத்தால் ஆகா ததும் உண்டா?'' என்று சிரித்தார் முத்தையா.

குழந்தைகள் சிறு வட்டமாக கை கோர்த்து கஜராஜனைச் சூழ்ந்து, ஆடிப் பாடி, கோலாட்டம் கும்மி போட்டு வர, முத்தையா கையில் லிஸ்டோடு வர, அவருக்கு உதவியாக கோமதி கூட வர இதோ ஊர்வலம் கிளம்பி விட்டதே! வருகிறீர்களா? நாமும் போய்ச் சேர்ந்து கொள்வோம்?



அணையாத தீச்சி!

★ அணையாத விளக்கு பற்றி அறிந் திருக்கிறோம்! அணையாத தீக்குச்சி கேள் விப்பட்டிருக்கிறீர்களா? மழையாலும், காற்றாலும் அணையாத தீக்குச்சிகளை சைபீரியாவிலுள்ள 'டாம்ஸ்க்' நகரின் தொழிற்சாலைகள் உற்பத்தி செய்கின்றன. அந்த எரியும் தீக்குச்சிகளை தண்ணீரில் நுழைந்தால் கூட சிறிது மங்கலாக எரியுமே தவிர அணையாதாம்!

- அ. நவ்சாத், மொரப்பூர்.

புத்தாண்டே வருக!



புத்தாண்டு மின்றே வந்ததாம் - எங்கும்
புதியதோர் பொலிவு தந்ததாம்
குற்றால அருவி போலவே - மனம்
குளிரிலே குளித்து நிறைந்ததாம்

கனவுகள் இன்றே மறையட்டும் - உள்ளக்
கடமைகள் கருத்தில் புரியட்டும்
மனமெனும் தெளிய ஊற்றிலே - நல்ல
மாண்புகள் என்றும் பெருகட்டும்

பளிங்கெனத் தோன்றும் எண்ணங்கள் - உள்ளப்
பசுமையைக் காட்டும் விளைநிலம்
விளங்கவே என்றும் வாழுங்கள் - அன்பின்
விழுதென ஒன்றாய்ச் சூழுங்கள்

கருவிதான் எதிலும் நாம் என - அவன்
கட்டளை விரும்பி ஏற்றுமே
இறைவனை முழுதும் நம்புங்கள் - செயல்
எளிதென ஆகும் உறுதியே

பொறுப்பினை நன்கும் உணருங்கள் - கண்போல்
பொழுததன் புனிதம் நினையுங்கள்
சிரிப்பிலே சேர்ந்து மலருங்கள் - உயர்
சிந்தனை சேர வளருங்கள்!

ஏழ்மைக்கே கனிந்தும் இரங்குங்கள் - பாச
இதயத்தால் அணைக்க நெருங்குங்கள்
தாழ்வெனல் மற்றும் உயர்வெனல் - பொருள்
தகுதியால் வருவ தில்லையாம்!

சத்தினை ஏற்றுக் கொள்ளுங்கள் - வெறும்
சக்கையைத் துப்பித் தள்ளுங்கள்
பக்தியை ஆழ்ந்து போற்றுங்கள் - என்றும்
பணிவிலே நிமிர்ந்தும் உயருங்கள்!


உண்மையால் என்றும் உழையுங்கள் -. மனம்
ஊக்கமாய் நாளும் விழியுங்கள்
நன்மையே வாழ்வில் பெருகுமாம் - இந்த
நல்லநாள் வாழ்க நினைவிலே


- மதி ஒளி


வலிமைக்கு வாலி


கதை: குமரன்

படம்: கோபலி -











வாலியின் பலத்தை உணர்ந்த தேவர்கள் —
அமுதத்துக்காக மந்திர மலையைக் கடைகிறோம். எங்கள் பக்கம் இருந்து உதவணும்.
ஆகட்டும்!
அசுரர் ஒரு பக்கமும் தேவர் ஒரு பக்கமும் இருந்து கடைய —
உம்... சோர்ந்து விடாதீர்கள்! இழுங்கள். வாசுகி பாம்புக்கு ஒன்றும் ஆகாது...
தேவர்கள் அமுதம் பெற்றனர் —
இந்திரன் மன மகிழ்ந்து —
உன் உதவிக்கு நன்றி. இந்தா பொன் மாலை. வேண்டும் வரம் கேள்!
நேருக்கு நேர் என்னுடன் சண்டை போடுகிறவர் யாராயிருந்தாலும் அவர்கள் பலத்தில் பாதி எனக்கு வந்துவிட வேண்டும்!
வரம் தந்தேன்!




வலிமை பெற்ற வாலி, பக்திமானாகவும் இருந்தான்...
தினமும் எட்டுக் கடல்களில் மூழ்கி எழுவேன்... சிவ பூஜை செய்வேன்.
ஒரு சமயம் திக் விஜயம் புறப்பட்ட ராவணன் —
எங்கே இந்நாட்டு மன்னன்? ஏன் என்னை வரவேற்கவில்லை?
கடலில் நீராடப் போயிருக்கிறார்!
ஆ! அவ்வளவு கர்வமா?
ராவணன் கடற்கரையை அடைந்து...
என்னை அலட்சியம் செய்த இவனைப் பிடித்துத் தண்டிப்பேன்...
பிரபோ! அவசரம் வேண்டாம்.
வாலி பெற்றுள்ள வரம் பற்றி கூறி மந்திரி எச்சரிக்க...
இவ்வளவு தானே... பின்புறமாகச் சென்று அவனைக் கட்டிப் பிடித்து வருகிறேன்!
நேருக்கு நேர் சந்திக்காமல் பின்புறமாகச் சென்றான் ராவணன்... ஆனால்...
யாரோ பின்புறமாக வருகிறார்கள். ஏமாறக் கூடாது...



ராவணன் நெருங்க, வாலி தன் பக்கம் கை நீட்டி —
அடேய்! உன்னைக் கழுத்துப் பிடித்து இடுப்பில் இடுக்கிக் கொண்டேன்!
இடுப்பில் சிறைப்பட்ட ராவண-னுடன் எட்டுக் கடலிலும் முக்குளித்து எழுந்தான் வாலி —
ஏழு முடிந்தது! எட்டாவது கடலுக்குள் பாய்கிறேன்!
குளித்து முடிந்ததும் சிவபூஜை செய்தான் வாலி —
ஆ! இவன் நம்மை விடவும் சிறந்த சிவபக்தன். என்ன வலிமை!
சிவ பூஜை முடிந்து நாடு திரும்பினான் வாலி —
என் கர்வம் அடங்கியது. உன் நண்பனாக இருக்கவே விருப்பம்!
நானும் ராஜ மரியாதையுடன் உன்னை வரவேற்கிறேன்!


ஒரு சமயம் துந்துபி என்ற அரக்கன் –
யாருடா அவன்! ராவணனை வென்றதாக மார் தட்டுகிறவன்?
ஏன் நான்தான்.
இருவரும் மல் யுத்தம் செய்ய –
என் வம்புக்கா வரே...?
ஆ! ஐயோ! வலிக்குதே!
வாலி வதைத்தால் வலிக்காமல் சுகமாகவா இருக்கும்?
துந்துபி இறந்தான் –
இந்த உடலை ஒரு உதை...
துந்துபி உடல் இரிசிய பர்வதத்தில் விழுந்தது... அங்கு மதங்க மகரிஷி –
என் தவம் கலைத்தது யார்?


ஞான திருஷ்டியால் நடந்தது அறிந்தார் மதங்கர்... மலை விட்டு இறங்கி –
வாலி! நீ இந்த மலை மீது பாதம் பதித்தால் உன் தலை வெடிக்கும்!
வாலி பயந்து நாடு திரும்ப, ஒரு நாள் மாயாவி என்ற அசுரன் –
என்னமோ துந்துபியை ஜெயிச்சட்டியாமே, என்னை வெல்ல முடியுமா?
யுத்தம் நடக்க –
ஐயோ! செத்தேன்! விட்டுடு!
பலத்தால் வெல்ல முடியாத மாயாவி, மாயத்தால் நழுவினான்.
ஓடுறியா! விடமாட்டேன்!
மாயாவி ஒரு குகைக்குள் நுழைய –
தம்பி, சுக்ரீவா! மாயாவியைத் தொடர்ந்து போறேன்... குகை வாசலில் காவல் இரு!
சரி!


முடிவில்லா குகை... இருட்டு... மாயம் செய்தான் மாயாவி—
அடேய்! எங்கேடா இருக்கே?
ஹஹ்ஹ ஹ ஹா!
மாதக் கணக்கில் வெளியே காத்திருந்த சுக்ரீவன் —
வாலி, செத்தே போயிருப்பான்!
ஒரு பாறை கொண்டு குகை வாயிலை அடைத்தான் —
திரும்பி வராதவ— னுக்காக எத்தனை காலம் காத்திருப்பது?
நாடு திரும்பிய சுக்ரீவன் —
பாவம் வாலி, மாயாவி அவனைக் கொன்— னுட்டான்...
இனி நீங்க தான் ராஜா...!
வாலி ஒரு வழியாக மாயாவியைப் பிடித்துக் கொன்ற பின் —
இந்த இருட்டில் வாசலைக் கண்டு பிடிப்பது எப்படி..? ஆ! அதோ ஒளிக் கீற்று...!


பாறையைத் தள்ளிவிட்டு வெளியேறிய வாலி—
ஓ...! இது சுக்ரீவன் சூழ்ச்சியா! குகைக்குள்ளேயே நான் அடைந்து கிடக்கணும்னு சதி!
கோபத்துடன் நாடு அடைந்த வாலி—
அடேய்! என்னைக் குகையில் சமாதி கட்டிவிட்டு நீ அரசாள்கிறாயா? உன்னை...
சுக்ரீவன் பயந்து ஓடினான்—
விடமாட்டேன் உன்னை...!
வாலி இரிசிக பர்வதத்துக்கு வரமாட்டான். தலை வெடிச்சுடும்!
இரிசிக பர்வதத்தில் நெடுநாள் வாழ்ந்தான் சுக்ரீவன்—
இன்னும் எத்தனை நாள் இப்படி தனிமையை அனுபவிக்கணுமோ...!
வாலி அரசாண்டு வந்தான்—
வாலியின் வலிமையை யாவரும் அறிவர்!


ராமர் சீதையைத் தேடி வர... சுக்ரீவன் —
ஐயனே... நீயே துணை!
உன்னைக் காப்பேன்!
சுக்ரீவன் வாலியைப் போருக்கு அழைத்தான் —
கூப்பிடுங்கள் வாலியை! இரண்டிலொன்று பார்த்துடலாம்!
வாலி சவாலை ஏற்க, மனைவி தாரை தடுத்தாள் —
வேண்டாம்... ஏதோ சூது... சுக்ரீவனுக்கு எப்படி திடீரென்று தைரியம் வந்தது...?
வாலி அவனை உதறி விட்டுச் சென்றான் —
இவன் சவாலை ஏற்காமல் இருப்பது என் வீரத்துக்கு இழுக்கு...
மறைவிடத்திலிருந்து ராமர் விட்ட பாணம், வாலியைத் தாக்க —
ஆ! இதென்ன மோசடி! யார் எய்த அம்பு?


அம்பை, தன் நெஞ்சிலிருந்து பிடுங்கிப் பார்த்தான் வாலி—
ஆ! "ராமன்" என்று எழுதி யிருக்கே!
ராமர் வெளிப்பட—
யார் நீ? ஏன் இந்த மோசடி?
ராமனை விஷ்ணு அம்சம் என உணர்ந்தான் வாலி—
உனக்கு மோக்ஷம் அளித்தேன்.
வாலி ராமனைத் துதித்தான்—
சுக்ரீவன் உங்களுக்குத் துணை இருப்பான். அவனைக் காத்தருள்க!
வீரன் வாலி சொர்க்கம் சென்றான்

அயல்நாட்டுக் கதை



வெகு நாட்களுக்கு முன்பு திபேத் நாட்டில் ஒரு அழகிய பெண் இருந்தாள். அவள் பெயர் திரோஸ்மா. கொள்ளை அழகு. பெற்றோருக்கு ஒரே மகள். பல ஆண்டு காலம் குழந்தை இல்லாமல் இருந்து புண்ணியங்கள் செய்த பிறகு பிறந்த குழந்தை. எனவே பெற்றோருக்கு ஆசை மகள். அப்பா

கூடையில் வந்த மணப்பெண்!

அம்மாவுக்கு வயதாகி விட்டதால் அவளது திருமணம் பற்றிக் கவலையுடன் இருந்தார்கள்.

அழகுப் பெண் திரோஸ்மா இருந்த கிராமத்தின் வழியே போவோர் வருவோர் எல்லாம், அவளை ஒருமுறை யாவது பார்த்து விட்டுப் போக ஆசைப் படுவார்கள். 'இவளை மனைவியாக அடைபவன் புண்ணியசாலி' என்று எண்ணிச் செல்வார்கள். எத்தனையோ இளைஞர்கள் அந்த அழகியை மனைவியாக அடைய ஆசைப்பட்டார்கள்.

ஒரு நல்ல இளைஞனுக்கே திரோஸ்மாவைத் திருமணம் செய்து தர அவளது பெற்றோர் நினைத்தார்கள். ஒரு நல்ல இளைஞனை எப்படிக் கண்டுபிடிப்பது என்று அவர்கள் குழம்பினர். இதைப் பற்றியே எப்போதும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

ஒருநாள் இரவு அப்பாவும் அம்மாவும் ஒரு முடிவுக்கு வந்தனர். 'ஆண்டவன் அருள் இருந்தால் எல்லாம் நல்லபடி நடக்கும். நாளை காலை கோவிலுக்குப் போகலாம். ஆண்டவனிடம் நமது வேண்டுகோளை முறையிடுவோம்' என்று பேசிக் கொண்டார்கள்.

அப்போது பார்த்து, அங்கே தெரு வழியே சென்ற ஒரு பட்டுத் துணி வியாபாரி காதிலே இந்தப் பேச்சு விழுந்தது. அவன் நல்லவனல்ல. படு மோசக்காரன். கெட்ட குணங்கள் எல்லாவற்றிற்கும் அவனே உறைவிடமாக இருந்தான். பார்ப்பதற்கும் அவன் நன்றாக இருக்க மாட்டான். அவனுக்கு ஒரு மோசடி எண்ணம் தோன்றியது.

தமிழில்: தம்பி சீனிவாசன்

கூபன் என்ற அந்தப் பட்டு வியாபாரி அடுத்த நாள் காலையில் சீக்கிரமே கோவிலுக்குப் போனான். அங்கே இருந்த பெரிய புத்தர் சிலையின் பின்னே ஒளிந்து கொண்டான். சிறிது நேரம் கழித்து திரோஸ்மாவின் தாயும் தந்தையும் கோவிலுக்குள் வந்து தொழுதார்கள். வணங்கி எழுந்து, ''எங்கள் குழந்தைக்குத் திருமணம் ஆக அருள் செய்ய வேண்டும்'' என்று வாய் திறந்து வேண்டிக் கொண்டார்கள். அடுத்த கணமே ஒரு கரகரத்த குரல் சிலையிலிருந்து ஒலித்தது :

''நாளை காலை ஒருவன் உங்கள் வீட்டுக்கு வருவான். கையிலே கோழிக் குஞ்சு வைத்திருப்பான். அவனோடு திரோஸ்மாவை அனுப்பி விடுங்கள்!'' - புத்தரே பேசுவது போல் மறைந்திருந்து அருள்வாக்குப் போலக் கூறினான் பட்டுத் துணிக்காரன் கூபன்.

அப்பாவும் அம்மாவும் அளவில்லாத மகிழ்ச்சியோடு வீடு திரும்பினார்கள். ஆண்டவன் அருள் இருக்கிறது இனி என்ன கவலை? என்று எண்ணி அமைதியடைந்தார்கள். இது ஒரு கயவனின் மோசடியாக இருக்கலாம் என்று ஒரு சிறிதும் அவர்கள் சந்தேகப்படவில்லை!

அடுத்த நாள் பொழுது விடிந்தது. மோசடிக்காரன் கூபன் அவர்கள் வீட்டைத் தேடி ஒரு கோழிக் குஞ்சுடன் வந்தான். அவனைப் பார்த்ததும் அப்பாவுக்கும், அம்மாவுக்கும் 'திக்'கென்றது. கட்டை குட்டையாக, உடல் பருமனாக கோணல் மாணலாக முதுகைத் தூக்கியபடி பார்க்கச் சகிக்காதபடி இருக்கும் இந்த ஆளா கடவுள் தேர்வு செய்து அனுப்பியுள்ள மாப்பிள்ளை! மகளின் தலைவிதி இதுதானா? 'தோற்றம் நன்றாக இல்லாவிட்டாலும் பரவா



யில்லை. குணவானாக இருந்தால் போதும். இவனைப் பார்த்தால் பெரிய கொடுமைக்காரனைப் போல் தோன்று கிறதே! என்று வருந்தினர்.

என்ன செய்வது? ஆண்டவன் விருப்பம் இதுதான் என்றால் அதை எப்படி மீறுவது என்று மனதைத் தேற்றிக் கொண்டனர்.

''திரோஸ்மாவோடு உடனே என் ஊருக்குக் கிளம்ப வேண்டும். எப்பொழுது இறைவனே என் கனவிலும் தோன்றி 'திரோஸ்மாவை அழைத்துக் கொள்' என்று உத்தரவிட்டு விட்டாரோ, வேறு திருமண நிகழ்ச்சி எதுவும் தேவையில்லை. அதனால், என்னுடன் அவளை அனுப்புங்கள்'' என்றான் கூபன்.

வேறு வழியின்றி அடக்க முடியாத துக்கத்துடன் மகளை வழியனுப்பி வைத்தனர் பெற்றோர்.


அந்த மலைப்பிரதேச கிராமங்களில் சாலை வசதி ஒன்றும் கிடையாது. மூடி போட்ட பழக்கூடை போன்ற பெரிய மூங்கில் கூடையிலே தன் மணமகளை வைத்து முதுகிலே தூக்கிச் சென்றான் கூபன்!

இவ்வளவு அழகான பெண்ணைத் தான் அழைத்துச் செல்வதை யாரும் பார்த்து விடக் கூடாது என்று அவன் மிகவும் ஜாக்கிரதையாக இருந்தான்.

கூபன் நீண்ட தூரம் நடந்தான். வழியோ மலைப்பாதை. தோளிலே கனம். மிகவும் அசதியாக இருந்தது. வழியிலே ஒரு மரத்தடியிலே கூடையைக் கீழே தரையில் வைத்துச் சற்றே ஓய்வெடுத்தான். தன்னையும் மறந்து அப்படியே அயர்ந்து தூங்கி விட்டான்!

திரோஸ்மா கூடையிலேயே இருந்தாள். வீட்டை விட்டு, ஆசை அப்பா அம்மாவை விட்டுப் பிரிந்த துயரமும்,





எதிர்காலம் எப்படி இருக்குமோ என்ற பயமும் அவளை வாட்டின. துக்கம் பொங்கியது. கண்ணீர் பெருகியது. கேவிக் கேவி அழத் தொடங்கினாள்.

அப்போது பார்த்து அங்கே ஒரு வேடன் மகன் வந்தான். வாட்டசாட்டமாக இருந்தான் அந்த இளைஞன். கூடையிலிருந்து அழுகைக் குரல் கேட்கவும் அவனுக்குத் திகைப்பாக இருந்தது. விடுவிடுவென்று அருகே வந்து கூடையின் மூடியைத் திறந்து பார்த்தான்.

பேரழகி ஒருத்தி உள்ளே அழுவதைப் பார்த்துத் திடுக்கிட்டான் அவன். அவளை மெல்ல வெளியே எடுத்து விட்டான்.

அவள் கதையைக் கேட்டதும் வேடன் மகன், ''என் பெயர் தானம். நான் வேடர் தலைவரின் மகன். உன்னைப் பார்த்தால் நல்ல பெண்ணாகத் தோன்றுகிறது. இங்கே தூங்கும் ஆளைப் பார்த்தால் நல்லவனாகத் தெரியவில்லையே! வெகுளியான உனது பெற்றோரை இவன் ஏதோ மாய்மாலம் செய்து ஏமாற்றி விட்டான் என்று எனக்குத் தோன்றுகிறது. நீ என்னுடன் வா. என் வீட்டுக்குப் போகலாம். என் தகப்ப

னாரும் தயாரும் உன்னைப் பார்த்துக் கொள்வார்கள்'' என்றான்.

திரோஸ்மாவுக்கு அ வ னை ப் பிடித்து விட்டது.

இருவருமாக அந்தக் கூடையிலே பெரிய வேட்டை நாய் ஒன்றைப் போட்டு மூடினார்கள். காத்திருந்த குதிரை மீது ஏறி தானம் இருந்த ஊருக்குப் போய் விட்டார்கள்!

சிறிது நேரம் கழித்து பேராசைக் காரனான கூபன் தூக்கம் விழித்து எழுந்தான். கூடைச் சுமையைத் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு ஊர் போய்ச் சேர்ந்தான். இரவு ஆகி விட்டது. எல்லாக் கதவுகளையும் மூடி அடைத்து விட்டு, கூடை மூடியைத் திறந்தானோ இல்லையோ, அத்தனை நேரமாக அடைபட்டுக் கிடந்த ஆத்திரத்துடன் வேட்டை நாய் அவன் மீது பாய்ந்தது!

ஊரிலே ஒதுக்குப்புறமாக இருந்த வீட்டுக்குள்ளே இருந்து அவன் அலறிய அலறல் எவர் காதிலும் விழவில்லை. அடுத்த நாள் வீடு திறந்து கிடந்ததையும் மோசக்காரனான வியாபாரி செத்துக் கிடந்ததையும்தான் ஊரார் பார்த்தார்கள். நாயைக் காணவில்லை. அவன் மோசடி செய்து பேரழகியைத் திருமணம் செய்யப் போனதும் திரும்பியதும் எவருக்கும் தெரியாது. எனவே, ''என்ன தெய்வக் குற்றமோ? இப்படி இறந்து விட்டானே!'' என்று ஊரார் சொல்லிக் கொண்டார்கள்.

இது இப்படி இருக்க வேட்டைத் தலைவன் வீட்டிலே திரோஸ்மா மகிழ்ச்சியாக இருந்தாள். அவள் வேடன் மகன் தானம் மீது அன்பு கொண்டாள். அவனுடைய தோற்றம், வீரம், நற்பண்புகள் எல்லாம் அவளைக் கவர்ந்தன. அவனுக்கும் அவள் மீது அன்பு இருந்தது. இருவரும் திருமணம் செய்து கொள்ள விரும்பினர்.

உடனே திரோஸ்மாவின் அப்பாவையும் அம்மாவையும் அங்கே வரச் செய்தார்கள். வயதான பெற்றோர் இருவரும் தமது ஆசை மகளைப் பார்த்து மகிழ்ந்தனர். பேராசைக்கார பட்டு வியாபாரி கூபனைத் தங்கள் பெண் கல்யாணம் செய்து கொள்ளவில்லை என்று தெரிந்ததும் நிம்மதியடைந்தார்கள். ''இறைவன் உங்கள் இருவருக்கும் மணம் செய்விக்கவே மோசக்கார கூபனை ஒரு கருவியாப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். இறைவனின் கருணையை என்னவென்பது!'' என்று சொல்லிச் சொல்லி மகிழ்ச்சிக் கண்ணீர் சொரிந்தனர்.

அடுத்த நாளே தானம் - திரோஸ்மா திருமணம் எளிமையாக நடைபெற்றது.


மணமக்கள் இருவரும் பல காலம் பிறருக்குப் பயன்படும்படி வாழ்ந்தனர்!

மறதியோ மறதி!



★ லியனார்-டோ-டாவின்ஸி-உலகப் புகழ் பெற்ற ஓவியர் மற்றும் கணித நிபுணர் என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால், அவருக்கு ஞாபகமறதி அதிகம் என்பது உங்களுக்குத் தெரியுமா? எதையாவது நினைவில் வைத்துக் கொள்ள வேண்டுமானால் அதைக்குறித்து வைத்துக் கொண்டால்தான் உண்டு. ஆனால், அதில் சங்கடம் என்னவென்றால், அந்தக் குறிப்புப் புத்தகத்தையே அ வ ர் பலமுறை தொலைத்துவிட்டு, 'எங்கே வைத்தோம்?'' என்பதை மறந்து விடுவாராம்....

- கே.எல். குமணன்,
கல்லிடைக்குறிச்சி.



11. இன்னா செய்தாரை...

சுமார் முப்பதடி உயரத்தில் தன் முன்னால் எழுந்து நின்ற அந்த ரயில் பாலத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டு நின்ற மணிமாறன், அதன் மேல் ஏறுவதற்கு வழி இருக்கிறதா என்று ஆராய்ந்தான். இருபுறமும் இருந்த மேடான நிலப் பகுதிகளை இணைத்துக் கட்டப்பட்டிருந்த அப்பாலத்தைத் தாங்கி நின்ற இரும்புத் தூண்களில், குறுக்குச் சட்டங்கள் இணைக்கப்பட்டிருந்தன. அதன் வழியாக மேலே ஏறி, இரயில் பாதை வழியாக நடந்தால், புவனபுரம் இரயில் நிலையத்தை அடைந்து விடலாம்.

இந்த முடிவுடன் அவன் பாலத்தின் அடியில் சென்று இரும்புச் சட்டத்தில் காலை வைத்து மேலே ஏறமுயன்றான். அப்போது, அவனுக்குப் பின்னால் எழுந்த வினோதமான ஒலி அவனைத் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்க்க வைத்தது. அந்த ஓசை வளர்ந்து மண்டிக் கிடந்த ஒரு பெரும் புதருக்குள் இருந்து வருவது அவன் கவனத்தை ஈர்த்தது.

ஒருவேளை ஏதாவது மிருகம் அதற்குள் மறைந்திருக்கக் கூடுமோ என்று நினைத்த மணிமாறன் தன் காதுகளைத் தீட்டிக் கொண்டு உற்றுக் கேட்டான். அது வேதனையால் முனகும் ஒரு மனிதக் குரல் போலிருக்கவே, மேலும் வியப்புற்றவனாய்க் கீழே இறங்கி வந்தான்.

அவசரமாக புதர் அருகே வந்த மணிமாறன், அங்கே ஒரு பெரிய மூட்டை கிடப்பதையும், அதில் கட்டப்பட்டிருந்த கயிறு, புதருக்குள் சென்று மறைவதையும் கவனித்தான். இப்போது உள்ளேயிருந்து, ''ஆ, ஆ....ம்மா'' என்று யாரோ வேதனையுடன் அரற்றுவது மிகத் தெளிவாகக் கேட்டது.

அவன் பரபரப்புடன் புதரை விலக்கிப் பார்த்தான். நிலவின் மங்கிய வெளிச்சத்தில், ஒரு சிறுவன் உள்ளே விழுந்து கிடப்பது தெரிந்தது. ஒரு விநாடி அவனுக்குக் கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை. உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் மனத்தில் ஓடினாலும், பாஞ்சாவின் ஆட்களின் கண்ணில் பட்டு விடாதவாறு தப்பி ஓடும் இந்த நேரத்தில், உதவி செய்ய எங்கே அவகாசம் இருக்கிறது என்று தவித்தான்.

ஆனாலும், அடிபட்டு அபாய நிலையில் புதருக்குள் விழுந்து கிடக்கிற சிறு

வனை அப்படியே விட்டு விட்டுப் போக அவன் மனசாட்சி இடமளிக்க வில்லை. நெருங்கிப் போய் அந்தச் சிறு வனைத் தன் பலங்க கொண்ட மட்டும் இழுத்துப் புதருக்கு வெளியே கொண்டு வந்தான்.

நிலவு வெளிச்சத்தில் அவன் முகத்தை உற்று நோக்கிய மணிமாறன் திடுக்கிட்டுப் போனான். சில மணி நேரங்களுக்கு முன்னால், பாஞ்சாவின் குடிலில் தன்னுடன் வாக்கு வாதம் செய்து விட்டு, கயிற்றுச் சுருளை எடுத்துக் கொண்டு வந்த அதே நாக ராஜனேதான்!

அவன் தலையில் நன்றாக அடி பட்டு இரத்தம் ஒழுகிக் கொண்டிருந் தது! முகம், கழுத்து எல்லாம் இரத்தம் உறைந்து போய், பார்ப்பதற்கே பயங் கரமாய்த் தோன்றியது. உடலெங்கும் சிராய்ப்புகள். வலி தாங்க முடியாமல் 'ஆ ஆ... ஊ ஊ' என்று மயங்கிய நிலை யிலும் அரற்றினான் அவன்.

மணிமாறனுக்கு இப்போது என்ன செய்வதென்று தெரியவில்லை. அவன் தனக்கு எவ்வளவோ தீங்குகளைச் செய் திருந்த போதிலும், அடிபட்டு உயி ருக்குப் போராடிக் கொண்டிருக்கும் நிலையில் அவனை அப்படியே விட்டு விட்டுப் போவது மனிதச் செயலாகத் தோன்றவில்லை. இவனோடு வந்த வர்கள் எல்லோரும் எங்கு சென் றார்கள் என்று புரியாமல் குழப்ப மடைந்தவன், மேலும் அங்கு தாம திப்பது ஆபத்து என்று உணர்ந்தவனாய் எப்படி நாகராஜனைத் தூக்கிக் கொண்டு பாலத்தின் மீது ஏறுவது என்று யோசிக்கலானான்.

மூ ட் டை க ளோ டு கட்டப் பட்டிருந்த கயிற்றின் மறு முனையில் ஒரு பெரிய கொக்கி மாட்டப்பட் டிருப்பது அவன் கண்ணில் பட்டது.

அவன் மேலும் தாமதியாமல் மூட்டையிலிருந்து கயிற்றைக் கிடுகிடு வென்று அவிழ்த்தெடுத்தான். பின், பாலத்தின் மீது குறுக்குக் கட்டை களைப் பொருத்தும் இரும்புச் சட்டத் தைக் குறி பார்த்துக் கொக்கியை வீசி னான். கொக்கி மேலே மாட்டிக் கொள்ள, நாகராஜனைத் தூக்கித் தன் தோளில் சரித்துக் கொண்டு, ஒரு கை யால் பாலத்திலிருந்து தொங்கும் கயிற் றைப் பிடித்தவாறு, தூண்களை இணைத்த குறுக்குச் சட்டங்களில் காலை வைத்து மெல்ல மெல்ல ஏற லானான்.

அவனே மூன்று நாட்களாகச் சரி யாக உணவில்லாமல் அரைப்பட்டினி கிடந்தவன். அதனால், அவனுக்கு இருந்த அயர்ச்சியில் நாகராஜனையும் தூக்கிக் கொண்டு மேலே ஏற முடி யாமல் திணறினான். கைகள் சோர்ந் தன. கால்கள் சட்டத்திலிருந்து நழுவி விடுவது போல் நடுங்கின. ஆனாலும், தன் பலத்தையெல்லாம் ஒன்று திரட்டி மூச்சைப் பிடித்துக் கொண்டு அங்குலம் அங்குலமாக மேலே ஏறினான்.

ஒரு வழியாக மேலே வந்து, நாக ராஜனை பாலத்தின் மீது கிடத்தி விட்டுத் தானும் எம்பி, மேலே ஏறிய மணிமாறன் ஒரு கணம் நின்று தன்னை யாராவது தொடர்கிறார்களா என்று நோட்டம் விட்டான். அப்படி யாரே னும் தொடரும் பட்சத்தில், பாலத்தில் கட்டியிருக்கும் கயிறு தான், அந்த வழி

"சுத்தாதே கோழியக்கா! என் பையன் உம் பசங்களோட விளையாடிக் கிட்டிருக்கானான்னு பார்த்துப் போகத் தான் வந்தேன்!"

— ச. மாணிக்கைராஜ்






யாகத் தப்பித்துச் சென்றதைக் காட்டிக் கொடுத்து விடும் என்று நினைத்தவன், மாட்டியிருந்த கொக்கியைக் கழற்றி, கயிற்றை கீழே புதருக்குள் வீசியெறிந் தான். பின், நாகராஜனைத் தூக்கிக் கொண்டு தட்டுத் தடுமாறி புவன புரத்தை நோக்கி ரயில் பாதை வழியாக நடக்கலானான். பொழுது புலருவதற் குள் புவனபுரத்தை அடைந்து விட லாம். அங்கு பெரிய பெரிய மருத்துவ மனைகள் இருப்பது அவனுக்குத் தெரி யும். எப்படியும் நாகராஜனைக் காப் பாற்றி விட வேண்டும் என்ற எண்ணம் அவன் கால்களுக்குப் புதுத் தெம்பைக் கொடுத்தது.

மூட்டைகளோடு அந்தச் சரக்கு ரயிலில் தொற்றிக் கொண்டு சென்ற சந்திரகிரியைச் சேர்ந்த ஆட்கள், மூட் டைகளில் கட்டியிருந்த கயிறுகளை மீண்டும் அவிழ்த்துச் சுருட்டிக் கட்டி விட்டு ஒரு குறிப்பிட்ட இடம் வருவ தற்குக் காத்திருந்தார்கள்.

தாங்கள் ஈடுபட்டிருக்கும் தொழில் சட்டவிரோதமானது என்பதோடு மக்க ளுக்கு எவ்வளவு தீங்கு விளைவிக்கக் கூடியது என்பதைப் பற்றி அவர்கள் எதுவுமே அறியாதவர்களாகவே இருந் தனர்.

தாங்கள் உற்பத்தி செய்யும் சட்ட விரோதமான அந்தப் பொருளைக் கொண்டு பாஞ்சா எவ்வளவோ புது வகைப் பொருட்களைத் தன் ஆட்கள் மூலம் தயாரித்து திருட்டுத் தனமாக விற்றுப் பெரும் பொருள் ஈட்டி வரு வதையும், தன் பெயரில் பட்டணத்தில் பெரும் மாளிகைகளை வாங்கிக் குவித் திருப்பதையும், சமுதாயத்தில் கண்ணியமிக்க மனிதனாக உலா வரு வதையும் அந்த அப்பாவி ஜனங்கள் அறிந்திருக்க நியாயமில்லை.

அரசாங்கத்தின் கண்களை மறைத்து




சில வருடங்களாக இந்தத் தொழிலை வெற்றிகரமாக நடத்தி வந்த பாஞ்சா வுக்கு, வெள்ளியாற்று அணைத் திட்டம் உருவாகியது பெரும் சோத னையாக அமைந்தது. அணை கட்டு வதன் விளைவாக சந்திரகிரி கிராமம் நீருக்குள் மூழ்கிப் போவதும், அதற்கு ஈடாக அரசாங்கம் அந்த மக்களுக்குப் புதிய பாசன நிலங்களைத் தந்து, வேறி டத்தில் வீடு கட்டித் தருவதாக அறிவித் ததும் அவனுக்குப் பேரிடியாக இருந் தது.

ஆனாலும், கிராம மக்களின் அறி யாமையைப் பயன்படுத்தி அவர் களைத் தந்திரமாக மலைக் கோட்டை யின் மறு பக்கச் சரிவில் குடியேற்றி விட்ட பாஞ்சா, இனி யாரும் தன்னைக் கண்டு கொள்ள மாட்டார்கள் என்று இறுமாந்திருந்தான்.

தன்னுடன் ஒத்துழைக்க மறுத்த மணிமாறனை அவன் ஒரு பொருட் டாகக் கருதவில்லை. ஆனாலும், அவன் அரசாங்க அதிகாரி பிரேம்நாத் வீட்டா ருடன் தொடர்பு வைத்திருப்பது அவ னுக்குக் கொஞ்சம் அச்சத்தையே கொடுத்தது. அதைக் குலைக்க மணி மாறனுக்கு அவன் பெரும் இடைஞ் சல்களை ஏற்படுத்தினான். அவைகள் எந்தப் பலனையும் கொடுக்காததாலும் இறந்து விட்டதாகக் கருதப்பட்ட மணி மாறனின் தகப்பனார் முத்தையா தற் போது உயிரோடு இருப்பதாக நாக ராஜன் புதுக் கதையைச் சொன்ன தாலும் குழப்பமடைந்தவன், அவனை வலுக்கட்டாயமாகக் கடத்தி வந்துவிட முடிவெடுத்து செயல் படுத்தினான்.

சந்திரகிரி மக்கள் அனைவருமே அந்தக் கிராமத்தை விட்டு வெளியேறி விட்டதால் அவர்களோடு சேர்ந்து மணிமாறனும் பிழைப்பதற்கு வழி தேடி எங்காவது சென்றிருப்பான் என்றே ஆனந்தும், அவனது பெற்றோ ரும் நினைப்பார்கள் என்று பாஞ்சா எதிர் பார்த்தான். ஆனால், நிலைமை கள் வேறு விதமாய் உருவெடுத்து விட்டதை அவன் சற்றும் அறிய வில்லை.

மணிமாறனைத் தேடிச் சென்ற ஆனந்த், வழியில் தாடிக்காரப் பெரிய வரை மலைக்கோட்டை முனிஸ்வரன் கோயிலில் சந்தித்ததையும், அவர் மூலம் பாஞ்சா தனது உற்பத்திப் பொருட்களைக் கடத்திச் செல்லும் முறைகளை அறிந்த ஆனந்த், தன் தந்தை மூலம் காவல் துறையினருக்கு எல்லா விபரங்களையும் தெரிவித்து விட்டதையும் அறியாத பாஞ்சா, அடர்ந்த காட்டுப்பகுதி ஒன்றில் தன் ஆட்களோடு, சந்திரகிரி ஆட்கள் மூட் டைகளை ஏற்றி வரும் ரயிலை எதிர் பார்த்துக் காத்திருந்தான்.



★ நாற்பது செ. மீட்டர் நீளத்திற்குள் டிரான்ஸிஸ்டர், டேப் ரெக்கார்டர், டெலி விஷன் போன்றவற்றை அடக்கி எங்கும், எளிதில் எடுத்துச் செல்லும் (All in one) ஐ அறிமுகப்படுத்தியுள்ளது ஜப்பா னில் உள்ள Sharp எலக்ட்ரானிக் நிறு வனம்.

- ந. நவமணி.

இருளின் ஆட்சியில் மூழ்கிக் கிடந்த அந்த வனப்பகுதியில் வான ளாவி நின்ற பெரும் மரங்களுக்குப் பின்னால், காவல் துறையைச் சேர்ந்த காவலர்கள் துப்பாக்கிகளுடன் மறைந் திருந்து தன்னைக் கண் காணித்துக் கொண்டிருப்பதை வஞ்சக நெஞ்சம் கொண்ட அவன் சற்றும் அறிய வில்லை.

ரயிலின் பிளிறல் ஓசை ஒரு கணம் அந்த காட்டுப் பகுதி முழுவதும் எதி ரொலித்து அடங்கியது. லாரியின் முன் புறவிளக்குகளை இரண்டு முறை எரிய

விட்டு அணைத்து தாங்கள் காத்திருப்பதை ரயிலில் தொற்றிக் கொண்டு வரும் ஆட்களுக்கு அறிவித்தான் பாஞ்சா.

அந்த ஒளி சமிக்ஞையைப் புரிந்து கொண்ட ஆட்கள், தாங்கள் ஏற்றியிருந்த மூட்டைகளை ரயிலிலிருந்து உருட்டித் தள்ளி விட்டுத் தாங்களும் தபதபவென்று கீழே குதித்தனர். அந்த இடத்தில் பாதை வளைந்து சென்றதால் ரயிலின் வேகம் மிகக் குறைவாக இருந்தது.

கீழே கிடந்த மூட்டைகளை அவர்கள் அவசர அவசரமாக இருட்டுக்குள் நின்ற லாரியில் ஏற்றலானார்கள். எல்லாவற்றையும் ஏற்றி முடித்ததும் லாரியிலிருந்து இறங்கி வந்த பாஞ்சா, வீரமாணிக்கத்தை அருகே அழைத்து, ஒரு காகித மடிப்பைக் கொடுத்தான். அவன் காதில் மெதுவாக, ''இதில் ஆயிரம் ரூபாய் இருக்கு, எல்லோருக்கும் பிரிச்சுக் கொடு.... திரும்பிப் போகும்போது உங்களுக்கு சாப்பாட்டுக்கு வேண்டியதை வாங்கிட்டுப் போங்க.... வேற என்ன வேணும்னாலும் நான் வரும் போது கேட்கலாம்'' என்றான்.

வீரமாணிக்கம், ''நீங்க இருக்கும் போது எங்களுக்கு ஒரு குறையும் வராதுங்க'' என்றான் நன்றி கலந்த குரலில்.

அப்பொழுது நாற்புறமிருந்தும் நூற்றுக்கணக்கான டார்ச் விளக்குகளின் வெளிச்சம் பாய்ந்து வந்து அவர்கள் இருந்த இடத்தை ஒளிமயமாக்கியது!

எல்லோரும் அதிர்ச்சியுடன் விழிக்க, பாஞ்சாவும், அவனது ஆட்களும் தங்களைச் சூழ்ந்திருப்பது காவல் துறையினர்தான் என்பதை ஒரு நொடியில் புரிந்து கொண்டு விட்டனர்.

பாஞ்சா மிரட்சியுடன் சந்திரகிரி ஆட் களைப் பார்த்து, ''ம், தப்பிச்சு ஓடுங்க, இவங்க கையில சிக்கிடாதீங்க'' என்று கத்தி விட்டு லாரிக்குப் பாய்ந்தேறினான்.

ஆனால், அவர்கள் ஓட முடியாதவாறு இருட்டுக்குள்ளிருந்து ஒரு முரட்டுக் குரல், ''யாரும் ஓடாதீங்க... எங்கள் கைகளில் துப்பாக்கிகள் இருக்கின்றன. ஓடினால், உயிரை இழக்க நேரிடும்'' என்று எச்சரிக்கை செய்தது.

கன வேகத்தில் பாய்ந்து புறப்பட்ட பாஞ்சாவின் லாரியின் முன்னால் துப்பாக்கி ஏந்திய நூற்றுக் கணக்கான காவலர்கள் தோன்றினர். இப்போது அவர்களிடம் சரணடைவதைத் தவிர பாஞ்சாவுக்கும், அவனது அடியாட்களுக்கும் வேறு வழி இருக்கவில்லை.

ரயிலில் இருந்து விழுந்து பலத்த காயங்களுடன் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த நாகராஜனைத் தூக்கிக் கொண்டு ரயில் பாதை வழியாக நடந்த மணிமாறன் பொழுது விடியும் நேரத்தில் புவனபுரத்தை அடைந்து மருத்துவமனைக்கு விரைந்தான், டாக்டர்கள் வந்து பரிசோதித்தனர்.

(வளரும்)




★ அரண்மனை போல் அனைத்து வசதிகளும் கொண்ட ரெயில் இந்தியாவில் தயாராகி விட்டது. 'மீட்டர் கேஜ்' பாதையில் செல்லும் இது முற்றிலும் 'குளுகுளு' வசதி கொண்டது. 20 பெட்டிகள் இருக்கும். 13 பெட்டிகள் - 103 படுக்கைகள் உட்பட - சகல வசதிகளும் கொண்ட ஆடம்பரப் பெட்டிகள் ஆகும். அவை ஒவ்வொன்றிலும் நாலு அறைகள் இருக்கின்றன. இந்த நடமாடும் அரண்மனையைச் செய்ய ஆகிய செலவு எவ்வளவு தெரியுமா? மிகக் குறைவுதான்... 8 கோடியே 38 லட்சம்.

- கே. எல். குமணன், கல்விடைக்குறிச்சி.

'மோசடிக்குத் தண்டனை,'

கதை
பெ.செல்லப்பெருமாள்
அமைப்பு : ரே




கந்தனின் செயலைப் பாராட்டிய அரசர்—
உன் நாணயத்திற்குப் பரிசாக ஐநூறு பொன் இந்தா!
இதைக் கேட்ட பணக்கார பரமன்—
ஒரு காசுக்கு ஐநூறு காசு பரிசா!
ஏழையா வேஷம் போட்டு அரிசி தானம் வாங்கியவன் மாதிரி நடிக்கலாம் பரிசு கிடைக்கும்!
அரசரிடம் பணக்கார பரமன்
இந்தாங்க ராஜா! தங்கக் காசு! இது என்னுடையது இல்லை!
பரமனைப் பார்த்த ராஜாவுக்கு சந்தேகம்—
நீ அரிசி தானம் வாங்கினாயா?


ஆமாம்! இதோ பாருங்க நீங்க தந்த அரிசி!
அரிசியைக் கண்ட அரசனுக்கு கோபம் பொங்கியது-
உண்மையைச் சொல்! தானம் தந்தது சாதாரண அரிசி! இது உயர் வகை அரிசி!
பணக்கார பரமன் பயந்து உண்மையைக் கூறினான்-
என்னையே ஏமாற்ற முயன்ற இவனுக்கு ஐம்பது கசையடி கொடுத்து விரட்டுங்கள்!
என் பொறா-மைக்கு இது வேண்டியது தான்!



நன்மை செய்ய உத்தரவு!

மங்களபுரி அரசன் மிகவும் பொல்லாதவன். நிறைய வரிகள் விதித்து மக்களைச் சுரண்டினான். அரசாங்கக் கருவூலம் நிரம்பிக் கொழித்தது. ஆனாலும் மக்களின் நலனை முன்னிட்டு மன்னன் எந்தச் செலவும் செய்யவில்லை!

அரசனுக்கு நோய் கண்டது. எந்த வைத்தியமும் மருந்தும் பயனில்லாமல் போயிற்று. வெளியூரிலிருந்து பெரிய பெரிய மருத்துவர்களும், மந்திரவாதிகளும் வரவழைக்கப்பட்டனர். மன்னனின் உடல் நலம் தேற விசேஷப் பிரார்த்தனைகள் கோவில்களில் நடத்தப்பட்டன. என்ன செய்தபோதும் அரசனின் நோய் நீங்கியபாடில்லை.

அந்த நேரத்தில் அரண்மனைக்கு ஒரு மகான் வந்தார். அரசனைப் பரிசோதித்த அவர், ''மன்னா, உன் நோய் தீர ஒரே வழிதான் உண்டு. ஏழை எளியவர்களுக்கு, தான தர்மம் செய். அவர்கள் உன்னை வாழ்த்துவார்கள். அந்த வாழ்த்துகளின் பயனாக உன் நோய் உடனடியாகத் தீரும்'' என்றார்.

அரசனும் மனம் மாறி மந்திரியை அழைத்து ''அரசாங்கக் கருவூலத்திலிருந்து ஐம்பது லட்சம் ரூபாய் எடுத்து ஏழை, எளிய மக்களுக்குப் பங்கிட்டுக் கொடுங்கள்'' என்றான்.

மந்திரி சுறு சுறுப்பானார்.

கருவூலத்திலிருந்து எடுத்த ஐம்பது இலட்சத்தில் கால் பாகத்தைத் தன்னிடம் வைத்துக் கொண்டு மீதியை ஏழைகளுக்குப் பங்கிடச் சொன்னார் அமைச்சர்.

திவான் அதில் பாதித் தொகையைத் தனக்கு வைத்துக் கொண்டு, மீதியை நிதியதிகாரியிடம் கொடுத்தான். அவனும் அதில் பாதியைத்தான் வைத்துக் கொண்டு கீழ் அதிகாரியிடம் மீதியைக் கொடுத்தான்!

அரசன் அனுமதித்த ஐம்பது லட்சம் ரூபாயும் இப்படியாகப் பல கைகள் மாறி முடிவில் ஒரு ரூபாயாக இளைத்து கோயில் கணக்குப் பிள்ளையிடம் வந்து சேர்ந்தது.

கோயில் கணக்குப்பிள்ளை, பூசாரி கையில் எட்டணாவைக் கொடுத்து ''ராஜா, ஏழைகளுக்கு அளிக்கக் கொடுத்த உதவிப்பணம் இது. நல்ல வகையில் செலவு செய்யுங்கள்'' என்று உத்தரவிட்டார்.

பூசாரி அதிர்ந்து போனார். மன்னனாகப்பட்டவன் எட்டணா தர்மம் செய்வது என்பது எவ்வளவு வெட்கக்கேடானது! என்று எண்ணிய பூசாரி அதில் பாதியைத் தான் வைத்துக் கொண்டு, மீதி நாலணாவுக்கு இரண்டு வாழைப் பழங்களை வாங்கி, அம்மனுக்குப் படைத்து விட்டு பழங்களைத் தானே பிரசாதம் என்று எடுத்துச் சாப்பிட்டார்!

அரசனின் நோய் தீரவில்லை!

''மகான் பொய் சொல்லி விட்டார். ஐந்து இலட்சம் ரூபாய் தான தர்மம் செய்ய உத்தரவிட்டும் என்னுடைய நோய் அகலவில்லையே!'' என்று அரசன் மனம் குமுறினான். ''நிர்வாகம் நேரில்லாவிட்டால் எந்த நன்மையும் மக்களைச் சென்று அடையாது'' என்று சிரித்துக் கொண்டார் மகான்......

– சரஸ்வதி இராசேந்திரன்,
மன்னார்குடி – 2.

அப்பள ராஜா!



கொட்டாவி விட்டான்பட்டி என்று ஓர் இராஜ்ஜியம். அதன் மகா ராஜா சொட்டையப்பர்.

சொட்டையப்பர் வினோதமான பேர்வழி. மக்களுக்கு நன்மை செய்வதிலும், நிர்வாகத்தைச் சீர்திருத்தம் செய்வதிலும், பகைவர்களின் தாக்குதலில் இருந்து நாட்டைக் காப்பதிலும் அவருக்குப் புத்தி போகவில்லை. விதம் விதமாகச் சமைத்து மூக்கைப் பிடிக்க சாப்பிடுவதில்தான் அவர் தீவிரமாக இருந்தார்! குறிப்பாக அவருக்கு அப்பளம் என்றால் உயிர்! தினமும் ஒரு ஐம்பது அப்பளமாவது திங்காமல் இருக்க மாட்டார். சுவையான அப்பளக் கட்டோடு போனால், மன்னரை எளிதில் சந்தித்து, வேண்டியதைச் சாதித்துக் கொண்டு வரலாம் என்ற நிலை நிலவியது!

இப்படி சொட்டையப்பர் அப்பளப் பைத்தியமாக இருந்ததற்குக் காரணமும் இருந்தது. வெகுகாலம் வரை மன்னர் மக்களது குறை கேட்கும், நிர்வாகத் திறமைமிக்க மன்னராகத்தான் இருந்தார். கேளிக்கை, விருந்து எதற்கும் அவர் போக மாட்டார். வீணில் பொழுதைக் கழிக்க மாட்டார். அந்த அளவுக்கு நிர்வாகத் திறமை மிக்கவராக இருந்து, மக்கள் குறை கேட்கும் மாமன்னராகத் திகழ்ந்தார்.

மகாராணிக்கு மன்னர் இப்படி இருப்பது பிடிக்கவில்லை. மன்னர் தன்னையே சுற்றி வர வேண்டும் என்று அவள் எண்ணினாள். ஒரு முனிவரிடம் போனாள். ''மன்னர், சதா என்னையே சுற்றி வரும் மாமன்னராக இருக்க வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டாள்.

முனிவர் அரசியாரிடம் எவ்வளவோ கூறிப் பார்த்தார். ஆனால்,அரசி கேட்கவில்லை.

ஏதோ பூஜை செய்த முனிவர், ''அரசியாரே, வரும் வெள்ளிக் கிழமை காலை, மன்னர் தூங்கியெழுந்து வந்ததும் எந்தப் பொருளைத் தொடுகிறாரோ, அதன் மேல் அவர் உயிருக்கு உயிராக அன்பு பாராட்டுவார்,'' என்று கழன்று கொண்டார்.

மகாராணியாருக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. நன்றாக அலங்கரித்துக் கொண்டார். வெள்ளிக் கிழமை காலை மன்னரின் அறைவாசலில் தயாராக நின்று கொண்டாள்!

மன்னர் அறைக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தார். அந்த சமயத்தில் அரண்மனை சமையற்காரன், பொரித்த அப்பளங்களை ஒரு தட்டில் வைத்து எடுத்துக் கொண்டு அறை வாசலைக் கடந்து கொண்டிருந்தான்! மன்னர்,பொரித்த அப்பளத்தின் வாசனையால் கவரப்பட்டு, அவனுடைய தட்டில் இருந்து ஓர் அப்பளத்தை எடுத்தார்! பொரித்த அப்பளம்

சின்னபாபு

ராணியை முந்திக் கொண்டது! மன்னர் அப்பளப் பைத்தியமாக மாறினார்.

விதம் விதமாக அப்பளம் செய் பவர்களுக்கு தனிப் பரிசுகள் தரப் பட்டன. அப்பளத்தின் பெருமையைக் கவிஞர்கள் பாடித் தள்ளினார்கள். அரிசி அப்பளம் சிறந்ததா, உளுந்து அப்பளம் சிறந்ததா என்று பட்டி மன்றங்கள் நடத்தப்பட்டன. வெற்றி பெற்ற அணியினருக்குத் தங்க, வெள்ளி அப்பளங்கள் பரிசாக வழங்கப்பட்டன.

அப்பளத்தில் என்னென்ன சக்திகள் அடங்கியுள்ளன என்பதைப் பற்றி ஆராய, தனி அறக்கட்டளைகள் ஏற் படுத்தப்பட்டன. அரசின் செலவில் வேகமாக அப்பளம் இடப் பயிற்சியும், அப்பளம் இடும் போட்டிகளும் நடத்தப்பட்டன. அப்பளம் இடுவதி லும், புதுமை செய்வதிலும் சாதனை புரிந்தவர்களுக்கு டாக்டர் பட்டம் தரப்பட்டது! அவர்களில் சிறந்தவர் களுக்கு தங்கப் பதக்கம் கூடத் தரப் பட்டது!

மன்னர் நிர்வாகத்தை மறந்தார். குடிமக்களைக் காத்து, தரும நெறி தவறாத ஆட்சியைக் கொடுப்பதில் ஆர்வம் காட்டவில்லை. அப்பளத் தைப் பற்றிப் புதிதாக என்ன செய்ய லாம் என்பதிலேயே கவனமாக இருந் தார். எல்லாம் ராணியாரைத் தொடு



வதற்குப் பதில் அப்பளத்தைத் தொட்ட தன் விளைவு!


அரசர் இப்படி அப்பளப் பைத்திய மாக மாறியதும், அமைச்சருக்கும் மற்ற வர்களுக்கும் பெரிய அதிர்ச்சியாக இருந்தது. குடிமக்கள் மன்னரை 'அப் பள ராஜா' என்றே குறிப்பிடத் தொடங் கினார். அதுவே நாளடைவில் அவரது பெயராக அமைந்து விட்டது.

இளவரசருக்குத் திருமண வயசு நெருங்கியது. இளவரசன் புத்திசாலி. நல்லறிவு மிக்கவன். அவனுக்குத் திரு மணம் செய்வித்து இளவரசுப் பட்டம் கட்டி விட்டால், அவனைக் கொண்டு அரசு நிர்வாகத்தைச் சீரமைக்கலாம் என்று மந்திரி திட்டம் போட்டார்.

அமைச்சர் அரசரிடம் வந்து இள வரசனுக்குத் திருமணம் செய்வது பற்றி யும், இளவரசுப் பட்டம் கட்டுவதைப் பற்றியும் பேசினார்.

அரசருக்கு மகிழ்ச்சியான மகிழ்ச்சி. ஆனால், அவர் எடுத்த முடிவு விபரீத மாக இருந்தது!

என் மகனுக்கு வரும் மனைவி, அப்பளத்தின் பெருமையை உணர்ந் தவளாக, அதற்கு உரிய கௌரவத்தை அளிப்பவளாக இருக்க வேண்டும். நமது அரசாங்கத்தின் அப்பள வித்த கர்கள் கடினமாக உழைத்து பிரும் மாண்டமான அப்பளம் ஒன்றைத் தயா ரிக்கும் முறையைக் கண்டுபிடித்திருக்கி றார்கள். அதற்குக் கதவு அப்பளம் என்று பெயரிட்டிருக்கிறோம். இந்த அதிசயக் கதவு அப்பளத்தை நாட்டு மக்களுக்கு அறிமுகப்படுத்தி அர்ப்ப ணிக்கும் விழா இன்னும் சில நாட் களில் நடைபெற உள்ளது. இந்த அற் புதக் கண்டுபிடிப்பான கதவு அப்ப ளத்தைத் துளியும் விண்டு உடைந்து போகாமல், இரண்டே வாயில் போட் டுத் தின்னும் பெண்ணையே நமது





''நீ... தினமும் ஒரு 'சாக்கு' சொல்றே.. இன்னைக்கு ஏமாற்ற முடியாது. ஏன் வீட்டுப் பாடம் எழுதல?''

''நேற்று 'மருதாணி' இட்டுக்கிட்டேன் சார்!''

- அருகாவூர் ரவிசங்கர்

இளவரசனுக்குத் திருமணம் செய்து வைக்கப் போகிறேன். இதை முரசறைந்து இராஜ்ஜியம் முழுவதும் அறிவியுங்கள்'' என்றார் மன்னர்.

'இதென்ன, கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டு விட்டதே!' என்று அமைச்சர் கலங்கினார். அரசர் உத்தரவை மீற முடியுமா? தண்டோரா போட்டார்கள்.

சாதாரணமான சின்ன அப்பளத்தையே விண்டு போகாது; உடையாது தின்பது கடினம். அவ்வளவு பெரிய கதவு அப்பளத்தை விண்டு போகாது, உடையாது அதுவும் இரண்டே வாயில் தின்பது என்பது நடக்கக்கூடிய காரியமா? எடுக்கும்போதே அது உடைந்து விடுமே? அப்புறம்தானே தின்பதைப் பற்றி யோசிக்க!

நாட்கள் ஓடின. போட்டியில் பங்கு கொள்ளக் கூட யாரும் முன்வரவில்லை! அதைப் பற்றி அரசர் கவலைப்படவும் இல்லை. அப்பளத் தயாரிப்பில் புதிய உத்திகளைக் கையாண்டு சாதனை படைப்பதிலேயே மன்னர் கவனமாக இருந்தார்!

கொட்டாவி விட்டான் இராஜ்ஜியத்தில் ஓலைப்பாய் செய்து தரும் ஏழைக் குடும்பத்தில் பொன்னி என்று புத்திசாலிப் பெண் இருந்தாள். துணிவும், சமயோசிதமும் மிக்கவள். அவள் போட்டியைப் பற்றிக் கேள்விப்பட்டாள். அரசரிடம் சென்று தான் போட்டியில் கலந்து கொள்ளப் போவதாகக் கூறினாள்.

அரசருக்கும் மகிழ்ச்சி. ராணியாருக்கும், இளவரசனுக்கும் கூடப் பெரு மகிழ்ச்சி. பொன்னியின் அறிவாற்றலை இருவரும் பலமுறை கண்டு வியந்திருக்கிறார்கள். எப்படியாவது போட்டியில் பொன்னி வெற்றி பெற வேண்டுமே என்று இருவரும் இறைவனை வேண்டிக் கொண்டனர்.

போட்டியைக் காண தலைநகரே திரண்டு வந்தது. பொன்னி மிகப் பெரிய ஓலைப்பாய் ஒன்றை எடுத்து வந்தாள். கதவு அப்பளத்தைப் பொரித்தவுடன் அதை அப்படியே ஓலைப் பாயில் வைக்கும்படி கூறினாள்.

''பெண்ணே, அப்பளத்தைக் கையால் எடுத்துத்தான் தின்ன வேண்டும். தெரியுமா?'' என்று ஏளனமாகச் சிரித்தார் மன்னர்.

''தெரியும் அரசே!'' என்றாள் பொன்னி பணிவாக.

பக்கத்தில் ஒரு பெரிய கெட்டிலில் பால் கொதித்துக் கொண்டிருந்தது. கெட்டிலைத் தூக்கி, கொதிக்கின்ற பாலை, பொரித்த அப்பளத்தில் ஊற்றினாள் பொன்னி. பாலில் நனைந்த அப்பளம் தன் ''மொரு மொருப்'பை இழந்து துணி போல் துவண்டது! பொன்னி அதை அப்படியே சுருட்டினாள்! இரண்டாக மடித்தாள். கைப்பிடிக்குள் அப்பளம் அடங்கி விட்டது! தின்று முடித்தாள்!

''இதை ஏற்க முடியாது!'' என்றார் மன்னர்.

''ஏன் முடியாது? உங்கள் நிபந்தனை என்ன? கதவு அப்பளத்தைத் துளியும் விண்டு, உடைந்து போகாமல் இரண்டே வாயில் போட்டுத் தின்று காட்ட வேண்டும் என்பதுதானே? நானும் அப்படித்தானே செய்திருக்கிறேன்? அப்பளத்தில் பாலை ஊற்றக் கூடாது என்பதை நீங்கள் கூறினீர்களா?'' என்று கேட்டாள் புத்திசாலிப் பொன்னி.

அரசர் பதில் கூற முடியாது திணறி, அமைச்சரைப் பார்த்தார். ''வகையாகச் சிக்கிக் கொண்டீர்கள். பொன்னி ஜெயித்து விட்டாள்'' என்றார் அமைச்சர்.

பொன்னிக்கும் இளவரசனுக்கும் திருமணம் நடந்தது. அப்பளராஜாவின் கையிலிருந்த அதிகாரம், இளவரசர் கைக்கு வந்தது. புத்திசாலி பொன்னியின் ஆலோசனைகளைக் கேட்டுப் பல மாற்றங்களைக் கொண்டு வந்து நாட்டு மக்களின் துயர் துடைத்தார் இளவரசர்.

கேளுங்கள்



சொல்லப்படும்

★ சு. மரியதாஸ், திருவள்ளூர்.

பிரும்ம சமாஜத்தை ஆரம்பித்து, சதிக்கு சட்டப்படி தடைவிதிக்க உதவி யதைத் தவிர, ராஜாராம் மோகன்ராய் வேறு சாதனை ஏதாவது படைத்திருக் கிறாரா?

உலக மக்களைக் கவர்ந்தவை இவை இரண்டுமே. ஆனால், தாய் மொழியாகிய வங்க மொழி வளர்ச் சிக்கு இவர் செய்துள்ள தொண்டு ஈடு




இணையற்றது. வங்க மொழி உரை நடையின் தந்தை இவரே. 1833-ல் இவர் எழுதிப் பதிப்பித்த இலக்கண நூல் கௌடிய வியாகரணம், வங்க மொழியைச் செம்மைப்படுத்தியுள் ளது. இதற்கு இணையான நூல் இன்று வரை இல்லை எனப்படுகிறது. இந்திய பத்திரிகைகளின் வளர்ச்சிக்கும் இவர் மகத்தான தொண்டு புரிந்துள்ளார்.

★ ஹ. ஜெயச்சந்திரன், குண்டூர்.


உலகின் முதல் மின்சார போக்கு வரத்து சிக்னல் எங்கே அமைக்கப் பட்டது?

அமெரிக்காவின் நியூயார்க் நகரில்



'ரோட் பாயிண்ட்' என்ற இடத்தில் 1918-ஆம் ஆண்டு, ஏப்ரல் 19-ஆம் தேதி யன்று அமைக்கப்பட்டது. இது கூட சோதனை முறையில் அமைக்கப் பட்டதுதான்.

சேரநம்பி



* வி. ரோசம்மா, தக்கலை.

'ஆலிவர் டிவிஸ்ட்' மாதிரி புகழ் பெற்ற வேறு ஆங்கில நாவல்கள் ஏதாவது திரைப்படமாக வந்துள்ளதா?

இந்திய மொழிகளில் வந்துள்ளதா என்று கேள்வி இருக்க வேண்டும். சரி தானா? ஆர். எல். ஸ்டீபன்சனின் 'டாக்டர் ஜெக்கால் அண்டு மிஸ்டர் ஹைடு' 'செர்ர்ரீபி செர்ரா' என்ற பெயரில் ஹிந்தியில் வெளியாகியுள்ளது. இதில் முக்கிய பாத்திர நடிகர் சஞ்சீவ் குமார்.

★ கு. வேதவல்லி, திருவையாறு.

துரதிர்ஷ்டத்தை அதிர்ஷ்டமாக்கியவர்கள் யாராவது இருக்கிறார்களா?

எத்தனையோ பேர் இருக்கிறார்களே! ஆணிகளோடு விளையாடிக் கொண்டிருந்தான் ஒரு சிறுவன். எதிர் பாராத விதமாக அது கண்ணில் குத்தி



விட, செப்டிக்காகி, இரு கண் பார்வையையும் இழந்தான். பார்வை இழந்தோர் கல்வி கற்க, புது வழி ஒன்றைக் கண்டுபிடிக்க அவன் துடித்தான். எவ்வளவோ இடையூறுகளுக்கிடையே ஆணியால் ஓட்டை போட்டு எழுதி, அதன் பின்பக்கம் பதியும் மேடு பள்ளங்களை விரல்களால் தடவி, பரர்வையற்றோர் கல்வி கற்கும் முறையைக் கண்டு பிடித்தான். துரதிர்ஷ்டமாகி பார்வை பறிபோகக் காரணமான ஆணியை, அதிர்ஷ்டமுள்ளதாக்கி, விழி இழந்தோருக்குக் கல்வி முறையைக் கண்டு பிடித்த சாதனையாளர் லூயி பிரெய்லி தான் அந்தச் சிறுவன். இவர் கண்டு பிடித்த எழுத்து முறை, இவர் பெயராலேயே அழைக்கப்படுகிறது.

* லூ. அந்தோணிசாமி, புதுக்கோட்டை.

''கிரீன் புக்'' என்றால் என்ன?

'வனவிலங்கு - சுற்றுச் சூழல் பாதுகாப்பு' தொடர்பானவற்றில் குறிக்கப்



படும் 'கிரீன் புக்'கைதானே கேட்கிறாய்? அழிந்து போகக்கூடிய நிலையில் உள்ள தாவரங்களைக் குறிக்கும் சொல்லே கிரீன் புக். இவற்றை அழிப்பது சட்டப்படி குற்றம்.

★ வ. முத்துக்குமரன், சீர்காழி.

எந்த ஒரு சிறுவர் நாவலுக்காவது சாகித்திய அகாதமி பரிசு கிடைத்திருக்கிறதா? அது எங்கு கிடைக்கும்?

குழந்தை இலக்கியத்திற்கு சாகித்ய அகாதமி விருது வழங்கப்படுவது இல்லை. என்.சி. ஈ.ஆர்.டி. விருதுதான்



குழந்தை இலக்கியத்திற்கு. ஆனால், கி. வா. ஜகந்நாதன் அவர்களுக்கு 'வீரர் உலகம்' என்ற நூலுக்கு சாகித்ய அகாதமி விருது கிடைத்தது. இந்த நூல் முழுக்க முழுக்க சிறுவர்களுக்கான

துணைப்பாட புத்தகம்! இதை வெளியிட்டவர்கள் மணிவாசகர் நூலகம், சிதம்பரம்.

* த. பூமா, த. ரமா, மற்றும் பலர், திருச்சி.

கழுதைகளும், சில சமயம் மாடுகளும் கூட காகிதங்களைத் தின்கின்றனவே! இதனால் அவைகளுக்குத் தீங்கு ஏற்படாதா? மனிதனால் காகிதத்தைத் தின்று வாழ முடியாதா?

சுவையான கேள்வி. காகிதத்தில் 'செல்லுலோஸ்' (CELLULOSE) என்ற




கலவைச் சத்து உள்ளது. இதை ஜீரணிக்கும் சக்தி மனித உடலுக்கு இல்லை. அதனால், எந்தக் காலத்திலும் காகிதத்தைத் தின்று மனிதனால் உயிர் வாழ முடியாது! செல்லுலோசை ஜீரணிக்கும் சக்தி, கழுதைக்கும் மாடுகளுக்கும் இருக்கிறது. அதனால், அவை காகிதம் தின்கின்றன. அவைகளுக்கு இதனால் எந்த பாதிப்பும் இல்லை. அவை காகிதம் தின்பதால் நமக்கும் எந்த பாதிப்பும் இல்லை!

* சு. இக்பால், செங்குன்றம்.

பூமியும் சந்திரனைப் போல் ஒரு கிரகம் என்றால், சந்திரனைப் போல் பூமி ஏன் ஒளி வீசுவதில்லை?

கிரகங்கள் எல்லாமே சுயமாக ஒளிர்வதில்லை. சூரியனின் ஒளி



யையே வாங்கி பிரதிபலித்து ஒளிர்கின்றன. சந்திரனும் கூட நமது பூமியைப் போன்ற ஒரு கிரகம்தான். நாம் சந்திரனில் இருந்தோமானால் சந்திரன் ஒளிர்வதையும் நம்மால் காண முடியாது. ஆனால் சந்திரனில் இருந்து பார்த்தால் பூமி ஒளிர்வதைக் காணலாம்.

* நெற்குப்பை நாகமுத்து, நெற்குப்பை.

கடல்களின் பெயர்கள் அமைந்துள்ளதற்கு ஏதாவது காரணம் உண்டா?

கண்டிப்பாகக் காரணம் உண்டு. அரபிக் கடல், இந்துமகா சமுத்திரம், வங்காள விரிகுடா போன்றவை, இவை அமைந்துள்ள பகுதிகளைக் கருத்தில் கொண்டு பெயரிடப் பட்டவை. கருங்கடல் - ஹைடிரஜன் சல்ஃபேட் கலந்த கருமையான வாயு உள்ள மேல்பரப்பு அமைந்துள்ளதால் வைக்கப்பட்ட பெயர். இறந்த கடல் (டெட் சீ) உயிரினமே வாழ முடியாத உப்புக் கலந்த நீருடையது என்பதால். செங்கடல் - பவளப் பாறைகள், பவளப் பூச்சிகள் ஆகியவை மிகுந்து சிவப்பாகக் காட்சி தருவதால். வெண் கடல் (ஒயிட் சீ) வருடத்தில் பாதி நாள் பனி; ஐஸ் நிறைந்து வெண்மையாக இருப்பதால்.

இப்படி ஒவ்வொரு கடலுக்கும் அதற்குப் பெயர் ஏற்பட ஏதாவது ஒரு காரணம் இருக்கிறது.

* ப. செண்பகராஜன், சுவாமிமலை.

குழந்தை இலக்கியத்திற்குப் பெருமை தரும் செய்தி ஒன்றைக் கூறுங்களேன்?

இங்கிலாந்தின் இளவரசர் பிரின்ஸ் சார்லஸ் ஒரு சிறந்த குழந்தை எழுத்தாளர். இவர் எழுதியுள்ள புத்தகத்தின் பெயர் தி ஓல்டு மேன் ஆஃப் லோச் நகர் "THE OLD MAN OF LOCH NAGAR"





படிப்புக்குக் குட்பை!

குமாருக்கு எல்லாம் ஒரே வெறுப்பாக இருந்தது! என்ன அம்மா இந்த அம்மா? எப்பப் பாரு படி படி படி தானா?

குமார் யோசித்தான். பேசாம காட்டுக்குப் போய் தவம் பண்ணி, ஏதாவது ஓர் சாமியிடம், நினைச்சப்ப நினைக்கிறபடி உருமாறும் வரத்தைக் கேட்டு வாழ்க்கையை சுவைமிக்கதாக ஆக்கிக் கொள்வதுதான் புத்திசாலித்தனம். படிப்புக்கு குட்பை சொல்லலாம் என்று முடிவு செய்தான். காட்டுக்குப் போனான். மூக்கைப் பிடித்துக் கொண்டு, கண்ணை மூடிக் கொண்டு தவம் செய்தான்.

எந்த சாமியை வேண்டிக் கொள்வது என்று தெரியவில்லை! ஒரு வன தேவதையை எண்ணிக் கொண்டான்! என்ன அதிசயம்! உடனே ஓர் அழகிய வனதேவதை தோன்றியது! குமார் வரம் கேட்டான். நினைத்தபடி உரு மாறும் வரத்தைக் கொடுத்து விட்டு மறைந்தது தேவதை!

குமார் தனக்குப் பிடித்த பட்டாம் பூச்சியாக மாறினான். ஒரு காட்டுப் பூவில் தேன் குடித்து விட்டுப் பறந்த போது, செவ்வரளி மரக்கிளையில் இருந்த பூ, அழகைக் கொட்டி அவனை அழைத்தது. அதில் அவனுக்கு முன்னால் ஒரு பட்டாம்பூச்சி. அவன் பக்கத்துப் பூவில் அமரச் சென்றான். ஏதோ சத்தம்! பார்த்தால் அந்தப் பட்டாம் பூச்சியை ஓர் ஓணான் தின்று கொண்டிருந்தது!

குமார் நடுங்கிப் பறந்தான்! ஒரு பரந்த புல்வெளியில் புள்ளிமான்கள் கூட்டம் கூட்டமாக மேய்ந்து கொண்டிருந்தன. குமார் புள்ளி மானாக மாறி அவைகளோடு கலந்து கொண்டு புல் மேய்ந்தான்.

திடீரென்று ஏ தோ பரபரப்பு. எல்லா மான்களும் குபீரென்று உயர்ந்து தாவித் துள்ளிப் பாய்ந்து ஓடின. குமாருக்கு அருகே மேய்ந்து கொண்டிருந்த ஒரு குட்டி மானை, புலி ஒன்று கௌவிக் கொண்டு சென்றது! குமார் நடுங்கினான்.

இந்த விலங்கு சமாச்சாரமே வேண்டாம் என்று பளபளவென்று வெள்ளைக் கொக்காகி வானவீதியில் பறந்தான் கொக்குக் கூட்டத்துடன். திடீரென்று அவனுக்குப் பின்னால் பறந்து வந்து கொண்டிருந்த கொக்கு சுருண்டு கீழே விழுந்தது! கீழே வேட்டைத் துப்பாக்கியுடன் ஒருவன் கொக்குக் கூட்டத்தைக் குறி பார்த்துக் கொண்டிருந்தான்.

குமார் அலுத்துப் போனான். என்ன வாழ்க்கை இது! பகைவர்களே இல்லாத, பறவை விலங்கு இனங்களே இல்லையா? ஆபத்தே இல்லாத, சுவையான வாழ்க்கையுடைய உயிரினமே கிடையாதா என்று ஏங்கினான் அவன். தேவதையை அழைத்துக் கேட்டான்.

''சுவை நிறைந்த, பயனுள்ள வாழ்க்கை மனித வாழ்க்கைதான் குமார். இறைவன் மனிதனுக்கு மட்டுமே ஆற்றலைத் தந்திருக்கிறார். அதைக் கொண்டு கல்வி பயின்றால், இலக்கியம், கலை, எல்லாவற்றையும் அடைந்து பயன்மிக்க சுவையான வாழ்க்கை வாழலாம்'' என்றது தேவதை!

குமார் இப்பொழுது படிக்கச் சண்டித்தனமே செய்வதில்லை!

– ஜே. ஜூலியட் குளோரி,
தூத்துக்குடி.



தளபதியாகும் தகுதி



குந்தள நாட்டு மன்னர் புதிதாக படைத் தளபதி ஒருவரை நியமிக்க விரும்பினார். பழைய தளபதி வயதான காரணத்தால் ஓய்வு பெற விரும்பினார்.

''நீங்களே ஒருவரைத் தேர்ந்தெடுத்து என்னிடம் அனுப்பி வையுங்களேன்?'' என்று வயதான தளபதியைக் கேட்டார் மன்னர்.

மன்னர் கேட்டுக் கொண்டபடி இருவரை அனுப்பி வைத்த தளபதி, ''அரசே, நம்மிடம் உள்ள படை வீரர்களில் இந்த இருவரும் மிகச் சிறந்தவர்கள். இவர்களில் ஒருவரை நீங்கள்தான் தேர்வு செய்ய வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

இப்பொழுது தளபதியைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு மன்னருக்கு வந்து விட்டது. ஆழ்ந்து யோசித்த மன்னர், அமைச்சருக்குத் தகவல் கூறி அனுப்பி, தனது பிரச்னையைக் கூறினார்.

''இது பிரச்னையே அல்ல'' என்று கூறிய மதியூகி அமைச்சர், அந்த இரு வீரர்களையும் வரவழைத்து விசாரித்தார்.

''என் பெயர் பூபதி'' என்றான் ஒருவன்.

''என் பெயர் சங்கர்'' என்றான் இன்னொருவன்.

''நமது அரண்மனைத் தோட்டத்தில் காய்க்காத இரண்டு முரட்டு மாமரங்கள் உள்ளன. அவற்றை நீங்கள்

வெட்டி விட வேண்டும்'' என்று கூறிய அமைச்சர், ஆளுக்கு ஓர் கோடாலி தந்து அவர்கள் இருவரையும் அனுப்பி வைத்தார், மறைவாக அவர்களைக் கவனித்தார்.

சங்கர் மாமரத்தை நெருங்கியதும் விறுவிறுவென்று கோடாலியால் வெட்ட ஆரம்பித்து விட்டான். ஆனால், பூபதி அப்படிச் செய்யவில்லை. கோடாலியைத் தரையில் தேய்த்து நன்றாகக் கூறாக்கிக் கொண்டான். பிறகுதான் மரத்தை வெட்ட ஆரம்பித்தான். ஆனால், கால் மணி நேரத்தில் மரத்தை வெட்டிச் சாய்த்து விட்டான். சங்கரோ, பூபதிக்கு முன்பே வெட்ட ஆரம்பித்தும், இன்னும் வெட்டி முடிக்காது திண்டாடிக் கொண்டிருந்தான்!

அரசே, இருவர் கையிலும் மழுங்கிப் போன கோடாலியைத்தான் தந்தேன். சங்கர் எதையும் பார்க்காது உத்தரவை நிறைவேற்றத் தொடங்கி விட்டான். ஆனால் பூபதியோ, கோடாலி எப்படிக் கூர் இன்றி இருக்கிறது என்பதைக் கவனித்துக் கொண்டு அதைச் சரிசெய்து கொண்ட பிறகே வெட்ட ஆரம்பித்தான். வெகு விரைவில் தனக்கு இடப்பட்ட பணியையும் முடித்து விட்டான். எதையும் தொடங்குமுன் அதற்கு ஏற்ப முன்னேற்பாடுகளைச் செய்து கொண்டு பணியை விரைவில் முடிப்பவன் பூபதி. ஆனால் சங்கர், உத்தரவைக் கண்ணை மூடிக் கொண்டு நிறைவேற்றுபவன். படைத் தளபதியாக இருப்பவன் கண்ணை மூடிக் கொண்டு காரியத்தில் இறங்குபவனாக இருக்கக் கூடாது. அதனால் பூபதியே படைத் தளபதியாகத் தகுந்தவன்'' என்றார் அமைச்சர்.

பூபதியை மன்னர் படைத் தளபதி ஆக்கினார்.

- ஏ.வி. இளங்கோ,
ஆட்டியனூர் புதூர் P.O.

அழகும் அரசனும்

"ஒரு காட்டில் பறவைகள் எல்லாம் கூடித் தங்களுக்கு ஓர் அரசனைத் தேர்ந்தெடுக்க விரும்பின. அங்கிருந்த மயில் தனது அழகான தோகையை விரித்துக் காட்டியபடி ''நான்தான் உங்கள் அரசன்'' என்று சொல்லியது. அங்கே இருந்த பறவைகள் மயிலின் அழகைப் பார்த்து மயங்கி, அதையே தங்கள் அரசனாக ஏற்றுக் கொண்டன.



கூட்டத்திலிருந்த மைனா ''மயிலே, இப்போது நீ எங்கள் அரசனாக ஆகி விட்டாய். சரிதான். ஆனால், எங்களையெல்லாம் கருடன் துரத்தி வந்தால் நீ எங்களை எப்படிக் காப்பாற்றப் போகிறாய். சொல்?'' என்று கேட்டது.

அரசனாகி விட்ட மயிலுக்கு மைனாவின் இந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை. சும்மா நின்றது. ''மயில் ஒரு நல்ல அழகான பறவையாக இருக்கலாம். ஆனால், நல்ல திறமையான அரசனாக இருக்க முடியாது'' என்றது மைனா. மற்ற பறவைகளும் மைனாவின் கருத்துக்கு ''ஆமாம்'' என்றன.

மறுபடியும் விஷயம் பரிசீல

னைக்கு வந்து பறவைகள் அனைத்தும் மயிலுக்குப் பதிலாக ஒரு கழுகையே தங்களுக்கு அரசனாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டன.

- தக்கோலம் அ. முஸ்தபா.

அன்பின் விலை.....!

"ஆனாலும் அப்பா என்னை ரொம்பவும் ஏமாற்றுகிறார்" என நினைத்தான் ராஜேந்திரன்.

'பின்னே என்ன? நான் எவ்வளவு உதவி அப்பாவுக்குச் செய்யறேன். தினமும் பாக்கெட் மணி தந்தால்தான் என்ன...? ஸ்கூலில் எல்லோரும் விதம் விதமாய் வாங்கித்தின்ன, நான் மட்டும் அவர்கள் வாயைப் பார்த்துக் கொண்டிருக்கணுமா? சே! என்ன வாழ்க்கை இது! இதை இப்படியே விடக்கூடாது. இன்றிலிருந்து நாம் செய்யும் வேலையைச் சொல்லி அதற்குக் கட்டணம் கேட்க வேண்டும்,' என்று முடிவு செய்து கொண்டான் ராஜேந்திரன்.

மாலை பள்ளி முடிந்து வந்தவுடன், உறுதியாய் அப்பாவிடம் தன் முடிவைச் சொன்னான். 'இனிமே நான் வீட்டுக்குச் செய்யும் எந்த வேலைக்கும் எனக்குக் கட்டணம் தர வேண்டும்' என்று உறுதியாகக் கேட்டான்.

அப்பாவோ புன்சிரிப்பு மாறாது - "நான் உள்ளே போய்க் காப்பி போட்டுட்டு வர்றேன். நீயே யோசித்து, ஒரு பேப்பரில் உன் வேலைகளையும், கட்டணத்தையும் வரிசையா எழுதி டேபிள் மேலே வைத்து விடு...." என்றார்.

ராஜேந்திரனும் யோசித்து யோசித்து..... 'கடைக்குப் போனதற்கு 50 காசு, வீடு கூட்ட, 25 காசு..... அப்பாவின் சைக்கிளைத் துடைக்க 10 காசு, பால் வாங்க 15 காசு. ஆக மொத்தம் 1 ரூபாய் தினமும் தேவை.'... என எழுதி டேபிளில் வைக்கப் போனான்.



ஆனால், அங்கே ஏற்கெனவே ஒரு துண்டுக் காகிதம் இருந்தது. அதில்....

★ அம்மா இறந்த பிறகு உன்னை கவனித்ததற்கு - 0 காசு

★ தினமும் சமைக்க.... 0 காசு

★ துணி துவைக்க.... 0 காசு

★ இரவில் உனனோடு பாத்ரூம் வர.... 0 காசு

ஆகமொத்தம் - 0 காசுகள் என்றிருந்தது!

ராஜேந்திரனுக்குத் தன் தவறு புரிந்தது.... அழுகை முட்டிக் கொண்டு வந்தது. தான் எழுதிய தாளைக் கிழித்தெறிந்தான். பாசத்தோடு ஓடி வந்து தந்தையைக் கட்டியணைத்து, "அப்பா... என்னை மன்னிச்சுடுங்க!" என விம்மினான்.

இனிமேல் தந்தையைப் போலவே தானும் எதையும் எதிர்பாராது அன்பு செலுத்த வேண்டுமெனத் தீர்மானித்தான்...

- ஜெயஸ்ரீ ராஜகுமார்

வரமோ வரம்!

ஜெர்மனியில் ஒரு ராஜா இருந்தார். அவர் ரொம்ப ரொம்ப நல்லவர். ஜனங்களுக்கு நன்மை செய்ய எது வேண்டுமானாலும் செய்வார்.

ராஜாவுக்கு அழகான குமாரி ஒருத்தி இருந்தாள். அவள் அழகி மட்டும் அல்ல. சிறந்த குணமுடையவளும் கூட.

இளவரசிக்குத் திருமண வயது வந்தது. அக்கம் பக்கத்து ராஜாக்களில் பலர், பெண் கேட்டு எழுதினர்.


அந்த நாட்டுல ஒரு கெட்ட தேவதை இருந்தது. அதற்கு ஒரு முரட்டு அசட்டுத் தம்பி இருந்தான். அதோட அவன் ஒரு கோழை. கல்வி கற்காதவன். தேவதை, இளவரசியை அவனுக்குக் கல்யாணம் செய்து வைக்க நினைத்தது.



இளவரசியிடம் வந்து கேட்டது. இளவரசி மறுத்து விட்டாள். தேவதைக்குக் கோபம் வந்து விட்டது. ''உன் திருமணத்தன்று இருட்டும் வேளை வந்ததும் உன் கணவன் இறந்து போவான்' என்று சாபமிட்டது. செய்தி வெளியில் பரவியது. இளவரசியை மணந்து கொள்ள எந்த ராஜகுமாரனும் துணியவில்லை.

அந்த நாட்டில் மிகவும் நல்லவனான ஒரு விறகு வெட்டி இருந்தான். அவனுக்கு ஒரே மகன். பெயர் குமார். நல்ல அறிவாளி. இருவரும் நல்ல உழைப்பாளிகள். ஒரு நாள் குமார் காட்டில் விறகு வெட்டிக் கொண்டிருக்கும் போது அவன் அருகே ஏதோ பொருள் விழுந்தது! எடுத்துப் பார்த்தான்.

அது ஓர் வைர மோதிரம்! நிமிர்ந்து நோக்கினான். வானத்தில் இருந்து ஒரு தேவதை,தலைகுப்புற விழுந்து கொண்டிருந்தது. குமார் ஓடிப் போய்த்



தாங்கிக் கொண்டான். கண் விழித்த தேவதை, ''என் வைர மோதிரம் நழுவி விழுந்து விட்டது. அது இருந்தால்தான் என்னால் பறக்க முடியும். தேவலோகம் போக முடியும்'' என்றது.

குமார் மோதிரத்தை எடுத்துக் கொடுத்தான்.

தேவதைக்கு மிகவும் மகிழ்ச்சி. ''சக்திவாய்ந்த மோதிரம் என்பதை அறிந்து கொண்ட பிறகும் கூட, உனக்கென்று வைத்துக் கொள்ளாது திருப்பிக் கொடுத்தாயே...! நீ பிறர் பொருளுக்கு ஆசைப்படாத நல்லவன். உனக்கு என்ன வேண்டும்?'' என்று கேட்டது.


''எனது திருமணத்தன்று சூரியன் அஸ்தமிக்கவே கூடாது என்ற வரம் வேண்டும்'' என்று கேட்டான் குமார். தேவதை வரம் தந்தது. குமார் அரசரிடம் வந்து நடந்ததைக் கூறி, ராஜகுமாரியைத் திருமணம் செய்து கொள்ள முன்வந்தான். இளவரசிக்கு ஒரே மகிழ்ச்சி!

திருமணத்தன்று எவ்வளவு நேரமாகியும் கூட இருட்டவில்லை! சூரியனும் மறையவில்லை! தூக்கம் வராது எல்லா உயிர்களும் சோர்ந்தன! உலகம் தவித்தது!

தேவேந்திரன் இரு தேவதைகளையும் அழைத்தான். தங்கள் சாபத்தையும், வரத்தையும் விலக்கிக் கொண்டு, உலக மக்களைக் காக்கும்படி உத்தரவிட்டான். கெட்ட தேவதை தனது சாபத்தை வாங்கிக் கொண்டது! குமாரின் தேவதையும் தனது வரத்தைத் திரும்பப் பெற்றுக் கொண்டது!

இளவரசியும், குமாரும் மக்களுக்கு நன்மை புரிந்து பல காலம் ஆண்டனர்.

- ச. உமாதேவி.



ஏப்ரல் பிறக்கிறது; ஏமாறாதீர்கள்!

ஓர் அரசனிடம் பணியாற்றிய அதிகாரி பல பிரமுகர்களை ஏப்ரல் முட்டாளாக அடித்த சம்பவம் உண்டு. பல பெரிய மனிதர்களுக்கு இவர் விருந்துக்கு வருமாறு அழைப்பிதழ் அனுப்பினார். விருந்தினர் அவர் இல்லத்துக்கு வந்து சேர்ந்த போது அங்கே அவர் இருக்கவில்லை. நீண்ட கூடத்தில் மேஜை, நாற்காலி, ரத்தினக் கம்பளம் ஏதும் இல்லை. ஒரே ஒரு கழுதை மட்டும் கூடத்தின் ஒரு மூலை யில் ''ஏப்ரல் முட்டாள்'' என்ற அறி விப்பு அட்டையைக் கழுத்தில் தொங்க விட்டுக் கொண்டு நின்றது! விருந் தினரைப் பார்த்ததும் கட்டிப் போடப் பட்டிருந்த அந்தக் கழுதை பெரிதாகக் குரல் எழுப்பி கத்தி வரவேற்றது!

நம்பினால் நம்புங்கள், நம்பா விட்டால் போங்கள். ஸ்காட்லாந்தில் இது உண்மையாகவே நடந்தது. சில நபர்கள் அபிஸினிய சக்ரவர்த்தி போலும், அவரது குடும்பத்தினர் மெய்க்காப்பாளர்கள் போலும் வேஷ மணிந்து போர்ப் படைக் கப்பல் ஒன்றுக்கு விஜயம் செய்தனர். அவர் களுக்கு இருபத்திதோரு முறை பீரங்கி குண்டு வெடித்து வணக்கம் செலுத்து வது உட்பட சகலவிதமான மரியாதை களும் நடந்தன!

''ஃபிலடெல்ஃபியா'' பிரஸ் நாளி தழ் ஆசிரியர் ஓர் ஏப்ரல் முட்டாள் விளையாட்டு நடத்தினார். அன்று காலை நாளிதழில் ''பியரி கிராண் டியா'' என்பவரைப் பற்றி ஒரு செய்தி வெளியாயிற்று. இவர் சிலந்திப் பண்ணை ஒன்று நடத்துவதாகவும் அந்தச் சிலந்திகள் பின்னும் வலைகள்

விற்பதாகவும் கூறியது அந்தக் குட்டிச் செய்தி. "அதனை வாங்குவோர் யார்?" என்ற கேள்விக்கும் விடையளித்தது. பெரும்பாலும் மது வியாபாரிகள் தம்மிடமுள்ள மது எவ்வளவு பழமையானது என்பதை உணர்த்துவதற்காகச் சிலந்தி வலைகளை வாங்கிப் போய்த் தங்கள் கைவசம் உள்ள மது பாட்டில்கள் மீது பரப்பி வைப்பார்கள் என்று அந்தச் செய்தி விவரித்தது. இதை நிஜமென்றே நம்பி மது வியாபாரிகள் பலர் பியரி கிராண்டியரின் விலாசத்தைக் கோரி அந்தப் பத்திரிகை நிறுவனத்துக்கு கடிதம் எழுதினர். வேறு பலர் தாங்களும் சிலந்திப் பண்ணை நடத்த விரும்புவதாகவும் அதன் நுணுக்கங்களை அறிய பியரியை அணுக விரும்புவதாகவும் கூறி விலாசம் கேட்டு காரியாலயத்துக்கு வந்து குவிந்த கடிதங்களுக்குக் கணக்கு வழக்கு இல்லை!

நியூயார்க்கில் ஒரு சமயம் சில நண்பர்கள் நகர சபை உழைப்பாளிகள் போல் உடையணிந்து அந் நகரின் பிரதான சாலையொன்றில் "சாலை பழுது பார்க்கப்படுகிறது" என்ற அறிவிப்புப் பலகையை வைத்து விட்டுத் தோண்ட ஆரம்பித்து விட்டார்கள். சாலையின் குறுக்கே நெடுகிலும் ஆழக் குழி பறித்து விட்டுச் சென்ற பிறகுதான் தெரியவந்தது. அவர்கள் நகர சபை அதிகாரிகளின் உத்தரவு பெற்றவர்கள் அல்ல என்பது!

1860-ல் பல லண்டன் பிரமுகர்களுக்கு ஓர் அழைப்பு வந்தது. லண்டன் டவர் வாசலில் இருக்கும் சிங்கச் சிலைகளைக் கழுவிச் சுத்தப் படுத்தும் வருடாந்திர விழாவில் கலந்து கொள்ள வருமாறு கோரியது அந்த அழைப்பிதழ். இதை நிஜமென்றும், ஆண்டுதோறும் அப்படி ஒரு சம்பிரதாயம் உண்டு என்றும் நம்பிப் பல பிரமுகர்கள் போய்ச் சேர்ந்தார்கள்! "ஏப்ரல் முட்டாளானார்கள்" அழைப்பிதழை அனுப்பியவர் - நல்ல காலம் இதுவரை தெரியவில்லை

- தக்கோலம் அ. முஸ்தபா





♦ பௌலர் - கபில்

கட்டிப்பிடிக்க முடியாத கபில்தேவ்!

ஓர் இந்தியப் பந்து வீச்சாளரின் வேகத்தைச் சமாளிக்க முடியாமல் பாட்ஸ்மேன் பயந்து, ஹெல்மெட் அணிவது என்பதே அபூர்வம். ஏனெனில் அப்படிப்பட்ட அதிவேகப் பந்து வீச்சாளர்களையே நாம் உருவாக்கவில்லை. முதன் முதலாக அப்படி ஹெல்மெட் அணிந்து இந்தியப் பந்து வீச்சைச் சமாளித்தவர்கள் 1978 ல் பாகிஸ்தான் அணியினர். ஃபைசலாபாத் டெஸ்ட்டில் அவர்களை அவ்வாறு எதிர் கொள்ள வைத்தது, கபில்தேவின் வேகப் பந்து வீச்சு!

அண்மையில் கபில்தேவ் டெஸ்ட் போட்டிகளில் தமது 400வது விக்கெட்டை வீழ்த்தி, இந்திய கிரிக்கெட் வரலாற்றில் மட்டுமின்றி உலகளாவிய புகழ் பெற்றுள்ளார். 400 விக்கெட்களை வீழ்த்திய இரண்டாவது பௌலர் இவரே. முதல் இடத்தில் இருப்பவர் நியூசிலாந்தின் ரிச்சர்ட் ஹாட்லீ (431).

கபில்தேவ், 1959 ஜனவரி 6 ஆம் தேதி, சண்டிகரில் பிறந்தவர். தந்தையாருக்கு மர வியாபாரம். சிறு வயதிலிருந்தே கிரிக்கெட்டில் ஈடுபாடும் ஆர்வமும் இருந்தது. 1977-78 இல் பல்கலைக் கழகங்களுக்கிடையே நடைபெற்ற போட்டிகளில் ஹிஸ்ஸார் அணிக்கு எதிராக பஞ்சாப் அணிக்காக ஆடும்பொழுது 326 ரன்கள் எடுத்தும், அதே வருடம் சர்வீஸஸுக்கு எதிராக நடந்த ஒரு ரஞ்சிக் கோப்பைப் போட்டியில், பௌலிங்கில் 11 விக்கெட்களை வீழ்த்தியும் இந்திய அணியில் ஆடும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டார்.

இந்தியாவிற்காக அன்று ஆடத் துவங்கியவர் இதுவரை இந்த 14 வருடங்களில், இந்தியா ஆடியுள்ள 116 டெஸ்ட் போட்டிகளில் ஒன்றைத் தவிர, மற்ற 115 டெஸ்ட் போட்டிகளிலும் பங்கேற்றுள்ளார். உடல் நிலை சரியில்லாத காரணத்தினாலோ அல்லது அடிபட்டதாலோ அவர் எந்த டெஸ்ட் போட்டியிலிருந்தும் விலகியிருக்கவில்லை. இது அவருடைய மன உறுதியையும் உடல் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதில் அவருக்குள்ள தீவிரத்தையும் காட்டுகிறது. 1980-81 இல் மெல்போர்னில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியின் ஐந்தாம் நாள் ஆட்டம் துவங்கும்போது ஆ ஸ் தி ரே லி யா வெற்றிபெற 100 ரன்களே தேவைப்


பட்ட நிலையில் தமது கால் தொடையில் அடிபட்டுள்ளதையும் பொருட்படுத்தாது தீவிரமான மன உறுதியுடன் பந்து வீசி ஐந்து விக்கெட்களை வீழ்த்தியதோடு இந்தியா வெற்றி பெறவும் வழி வகுத்தார் கபில்.

இந்திய அணி மிகவும் மோசமான கட்டத்திலிருந்தபோதெல்லாம் கபில்தேவ் மிகவும் அபாரமாக 'பேட்' செய்து டானிக் கொடுத்தது போல் வலுப்படுத்தியுள்ளார். கிரிக்கெட் அரங்கில் ஒரு பெளலராகக் காலடி எடுத்து வைத்த கபில், பேட்டிங்கிலும் கவனம் செலுத்தி உயர்ந்த நிலைக்கு வந்துள்ளது அவர் திறமைக்குச் சான்று.

ஜிம்பாப்வேக்கு எதிரான உலகக் கோப்பைப் போட்டி ஒன்றில் இந்தியா 9க்கு 4 என்ற நிலையில் இருந்த போது கபில் ஆடவந்து 175 ரன்கள் எடுத்தார். இங்கிலாந்துக்கு எதிராக வார்ட்ஸ் மைதானத்தில் தொடர்ந்து நான்கு பந்துகளில் நான்கு ஸிக்ஸர்கள் அடித்தார். இவையும் வே று சாதனைகளு அவரது பே ங்கிற்குப் பெருமை சேர்ப்பன ஸ்ட் இண்டிஸ் மண்ணில் சத அடித்துள்ள ஒரே இ ந்தியக் கேப்டன் இவரே.


எப்பேர்ப்பட்ட பேட் மனையும் தம்முடைய அபாரமான பநது வீச்சால் திணற வைப்பார் கபில்தேவ். புதுப் பந்தைக் கொண்டு இவர் வீசும் முதல் ஏழு அல்லது எட்டு ஓவர்கள் சிம் சொப்பனமாக விளங்கும். சட காலமாகப் பழைய பந்திலும் 'ஸ்விங்' செய்யக் கற்றுக் கொண்ட ால் இவரால் விரைவாக விக்கெட்கள் எடுக்க முடிந்

✤ வெற்றிக் கோப்பையும் இந்திரா காந்தியின் பாராட்டும்!



திருக்கிறது. ஒருநாள் போட்டிகளில், 100 பந்துகளில் மிகவும் குறைவான ரன்கள் கொடுத்தவர்கள் என்று பார்த்தால் இவர், உலகின் முதல் ஐந்து பௌலர்களுக்குள் ஒருவராக உள்ளார். 'அவுட் ஸ்விங்கர்' பந்து வீச்சில் இவருக்கு இணை இவரேதான்!

பாகிஸ்தானுக்கு எதிராக சென்னையில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் 11 விக்கெட்கள் எடுத்ததும், முறையில் ஃபீல்டிங் செய்வதுதான். பந்தைக் கையில் எடுத்த வேகத்திலேயே எறிவதில் சூரர். மிகவும் கடினமான 'கேட்ச்'ஐயும் பார்ப்போர்க்கு மிகவும் சுலபமான ஒன்றாகத் தோன்றும்படி அவ்வளவு லாகவமாகப் பிடிப்பார். உலகக் கோப்பைப் போட்டியின் (1983) இறுதி ஆட்டத்தில் விவியன் ரிச்சர்ட்ஸை பார்த்தோர் மறக்க முடியாத விதத்தில் மிகவும் அபாரமாகக்



◆ மனைவியுடன் கபில்

வெஸ்ட் இண்டீஸுக்கு எதிராக அஹமதாபாத்தில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் ஒரே இன்னிங்ஸில் 9 விக்கெட்கள் எடுத்ததும் இவருடைய பௌலிங்கிற்குப் பெருமை சேர்ப்பன.

உலக அரங்கிலே சிறந்த ஃபீல்டர்களாகக் கருதப்படுகிறவர்களில் ஒருவராகத் திகழ்கிறார் கபில். இவர் ஃபீல்டிங்கின் சிறப்பான அம்சம், கிரிக்கெட் மைதானத்தின் எந்தப் பகுதியில் வேண்டுமானாலும் நின்று அபாரமான

கேட்ச் பிடித்து அவுட் செய்து இந்தியா வெற்றி பெற வழி வகுத்தவர் கபில் தான்!

பாட்டிங், பௌலிங், ஃபீல்டிங் ஆகிய மூன்றிலும் கபில் சிறந்து விளங்குவதால் உலக அரங்கில் முதல் இடத்திலுள்ள ஆல் ரவுண்டர்களில் இவர் ஒரு சிறப்பான இடம் பெற்றுள்ளார்.

இவர் பங்கேற்ற மொத்த டெஸ்ட் போட்டிகள் 115 போட்டிகள், எடுத்தது மொத்தமாக 4683 ரன்கள், 7 சதங்கள், 401 விக்கெட்டுகள் (23 முறை 5 விக்

கெட்களை வீழ்த்தியுள்ளார்.), 58 கேட்ச்கள்.

ஒரு நாள் போட்டிகளைப் பொறுத்தவரை இவர் ஆடியவை 181 போட்டிகள் எடுத்தது மொத்தமாக சுமார் 3500 ரன்கள், 217 விக்கெட்கள், கேட்ச்கள் - 50 க்கும் மேல்.

மிகச் சிறிய வயதிலேயே (24) காப்டனாக நியமிக்கப்பட்ட கபில் தேவ், 34 டெஸ்ட் போட்டிகளிலும், 74 ஒரு நாள் போட்டிகளிலும் இந்தியாவின் கேப்டனாக இருந்துள்ளார்.

சர்வதேச அரங்கில் பல போட்டிகளில் பங்கேற்ற காரணத்தால் தேசிய அளவில் பல போட்டிகளில் இவர் பங்கேற்க முடியாமல் போனது. இருப்பினும் இதுவரை நடந்துள்ள 'துலிப்' கோப்பைப் போட்டிகளில் ஹாட்-டிரிக் சாதனையைப் புரிந்துள்ள ஒரே பௌலர் இவரே. இவர் தலைமையில்தான் சென்ற வருடம் 'ஹரியானா' ரஞ்சி கோப்பையை மட்டுமின்றி இராணி கோப்பையையும் முதன் முறையாக வென்றது.

இவருடைய ஆட்டத்திற்கு மதிப்புக் கொடுக்கும் வகையில் இந்திய அரசாங்கம் இவருக்கு 1980 இல் ''அர்ஜுனா' விருதையும், 1981 இல் 'பத்மஸ்ரீ' பட்டத்தையும், 1991 இல் 'பத்மபூஷண்' பட்டத்தையும் கொடுத்துக் கௌரவித்துள்ளது.

ஏற்கெனவே விவரித்தவை தவிர கபில்தேவ் புரிந்துள்ள வேறு சில உலக சாதனைகள் :

★ டெஸ்ட் போட்டிகளில் உலக அளவில் 4000 ரன்கள் எடுத்தும் 400 விக்கெட்டுகள் வீழ்த்தியும் சாதனை புரிந்திருப்பவர் இவர் ஒருவரே.

★ டெஸ்ட் போட்டிகளில் மிகவும் குறைந்த பந்துகளில் அரை சதம் அடித்திருப்பவர். (30 பந்துகள்.)

உலக அரங்கில் இப்படிப் பல சாதனைகளைப் புரிந்திருந்தாலும் சொந்த வாழ்க்கையில் 'பந்தா' எதுவும் இன்றி மிகவும் எளிமையாகப் பழகுகிறார் கபில். இவர் 'எஸ்கார்ட்ஸ்' நிறுவனத்தில் பணி புரிகிறார். இவருடைய மனைவியின் பெயர் 'ரோமி'.

அடிச்சளைக்காத கபில், கடந்த சாதனைகளில் திருப்தி அடைபவரல்ல. புதிய சாதனைகளுக்குப் பாடுபடுகிற



★ பேட்ஸ்மேன் - கபில் புகைப்படம் : சசி

வர். தமது அடுத்த லட்சியம் 500 விக்கெட்டுகளையும் 5000 ரன்களையும் எடுப்பதுதான் என்று கூறியுள்ள கபில், உலகில் இன்று பல்லாயிரக்கணக்கான கிரிக்கெட் ஆட்டக்காரர்களுக்கு லட்சிய மனிதராக விளங்குகிறார்.

விடுகதைப் போட்டி முடிவு


இந்தப் போட்டியில் 539 பேர் கலந்து கொண்டிருக்கிறார்கள். தம்பி தங்கைகளின் கற்பனை வளத்தை ஒவ்வொன்றிலும் காண முடிந்தது. வந்தவற்றுள் மிக நன்றாக இருந்ததாகப் பத்து விடுகதைகளைத் தேர்ந்தெடுத்தோம். அவை இங்கே தரப்பட்டுள்ளன.

இவற்றை எழுதிய ஒவ்வொருவரும் ரூபாய் பத்து பரிசு பெறுகிறார்கள். பரிசு பெற்றவர்களுக்கு கோகுலம் வாசகர் சார்பில் பாராட்டுகள். போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெறச் செய்த அனைவருக்கும் நன்றி!

மாயாவி

உலகைக் காட்டும் மாயாவி
ஒற்றைக் கண்ணன் யாரவன்?


- டி. ஜேசின், வயது 9,
சுவாமி தோப்பு அஞ்சல்.



பேசி இசைக்கும் பெட்டி!

பெட்டி நல்ல பெட்டி
பேசி இசைக்கும் பெட்டி!
விசை வாலைச் சொருக
வண்ணப் படம் காட்டும்!
அகில உலகச் செய்தி
அருகே காட்டும் பெட்டி.

- வி.எம். விஜயலக்ஷ்மி, வயது 8,
இராணிப்பேட்டை.



பட்டாக்காரன்!

ஆறெழுத்துப் பட்டாக்காரன்
4ம் 2ம் சேர்ந்தால்
மாலைக்குப் பகைவன்
6ம் 2ம் சேர்ந்தால்
அழகான வடிவம்
2ம் 3ம் சேர்ந்தால்
ஆங்கிலத்தில் விருப்பம்
4ம் 6ம் சேர்ந்தால்
புண்ணியத்தலம். யாரவன்?

-ஜெ. பார்த்தசாரதி, வயது 10,
சென்னை - 5.

நாக்கில்லை!


ஒளி தருவான் சூரியன் அல்ல!
ஒலி தருவான் நாக்கு இல்லை!
பாடமும் பாட்டும் தருவான்
பள்ளிக் கூடமல்ல!

- கே.பி. கணேஷ், வயது 10,
சென்னை - 38.

குடும்பத்துடன் கண்டிடலாம்!

நாடு நகரம் சுத்தாமல்
நல்ல காட்சிகள் பார்த்துக்கலாம்!
சில்லறை செலவு இல்லாமல்
சினிமா எல்லாம் பார்த்துக்கலாம்!
உள்ளே அறையில் உட்கார்ந்தே
உலக மெல்லாம் சுற்றிடலாம்!
குடும்பத் துடனே கண்டிடலாம்
குதூகலமும் அடைந்திடலாம்!

- ஜி. புவனேஸ்வரி, வயது 12,



திரை அரங்கு இல்லை!

திரைப்படம் உண்டு
திரையரங்கு இல்லை!
கலை நிகழ்ச்சி உண்டு
கலையரங்கம் இல்லை!
வீட்டுக்குள்ளே தெருக்கூத்து
வீதியெல்லாம் வெறிச்சோட்டம்!

- எஸ். சதானந்தம், வயது 12,
பனப்பாக்கம்.

தடங்கலுக்கு வருந்துவான்!

அழைத்தால் வருவான்
வேலைக்காரனல்ல!
அகிலத்தைக் காட்டுவான் மந்திரமல்ல!
வண்ணங்களில் வருவான் வானவில் அல்ல!
தடங்கலுக்கு வருந்துவான் மனிதன் அல்ல!

- பி. தீபா, வயது 11,
மன்னார்குடி.

பேச்சும் பாட்டும் உண்டடி!

பெட்டி அகலம் ரெண்டடி!
பேச்சும் பாட்டும் உண்டடி!
எட்டுத் திசை நடப்பினை
எதிரில் காட்டும் என்னடி?

- ஜி.கே. வெண்ணிலா, வயது 10,
சென்னை - 15.

உலகைக் காணலாம்!


மண்ணுலக காட்சிகளை
கண்ணெதிரே காட்டுமாம்!
உட்கார்ந்த இடத்திலேயே
உலகத்தைக் காட்டுமாம்!

- வே. பூங்குன்றன், வயது 12,
வடபாதிமங்கலம்.

காணாமல் போய்டுவேன்!

எங்கும் இருப்பேன்
எதிரில் வருவேன்
க ரண்ட் கட்டானால்
காணாமல் போவேன்!

- வி.பி. விஜயபாஸ்கர், வயது 10,
உச்சிப்புளி.



சார் தபால்



போற்றுவோம்!

★ "மலைக் கோட்டை மர்மம்" வெகு அருமை. அடுத்த இதழை ஆவலுடன் எதிர் பார்க்கிறேன்.
மதுக்கூர் வடக்கு, மதுரா ரமேஷ்.

★ பிருந்தாவனப் பாடல்களை இராகம் போட்டுப் பாடுகிறேன்!
பொகளூர், ஆர். அனிதா தேவி.

★ மாட்டி விட வந்தவரை, மாட்டி வைத்த குழந்தை கவிஞர் நெஞ்சை நெகிழ வைத்து விட்டார்.
வண்ணப்பாளையம், சாரதா.

★ சின்னபாபுவின் "சிங்க ராஜாவின் சீடை"யும், குரு சீனிவாசனின் "பொன் முடிப் பெட்டகம்" சிறுகதையும் அருமை.
சங்கமங்கலம், க. கோகிலவாணி.

★ மின்னு, சின்னுவின் அட்டகாசச் செயல்கள், கதையை நேரில் காண்பது போல் இருந்தது.
மொரப்பூர், எச். பிஜு.

★ "சிங்கராஜாவின் சீடை" படித்து விட்டு வயிறு குலுங்கக், குலுங்கச் சிரித்தேன்.
காமரசவல்லி மாத்தூர்,
ரெ. இராமாதேசிகன்.

★ பிருந்தாவனக் கவியரங்கம் பகுதியில் வெளியான கவிதைகள் அனைத்தும் தாளம் போட வைத்தன.
மணப்பாறை, வி. ஸ்ரீராம்.

★ பச்சைக் கிளியில் ஆண், பெண் வித்தியாசத்தைத் தெரிவித்த 'ரேவதி' அவர்களுக்கு எனது பாராட்டுகள்.
நல்லாலம், சு. இராமசெயம்.

★ 'இளம் சாதனையாளர்' நீபிகாவின் காலட்சேபத்தைக் கேட்க வேண்டும் போல இருக்கிறது. கட்டுரை எழுதிய விதம் அருமை!
காவேரிப்பட்டணம், கே. சோமசேகர்.

★ 'அக்பரை வென்ற துளசிதாஸர்' படக் கதை மிகவும் அருமையாக இருந்தது. அத்துடன் சித்திரங்களும் மிகவும் அருமையாக இருந்தன.
செஞ்சி - 2, க.இரா. விஜயகுமார்.

★ "பொன்னாடை" சித்திரக்கதை பாராட்டத் தகுந்தது.
வடபாதிமங்கலம், வே. பூங்குன்றன்.

★ 'கேளுங்கள் தரப்படும் பகுதி எங்கே? அடுத்த இதழ் முதல் இந்தப் பகுதியைப் போடாவிட்டால் "கோகுலம்" வாசகர் சார்பில் பயங்கரப் போராட்டம் வெடிக்கு மென அடக்கமாக அறிவித்துக் கொள்கிறேன்.
மதுக்கூர் - 3, மதுகை த. சரவணன்.

★ ஈ என்ற ஒரு எழுத்துப் பிராணி விடம்தான் எத்தனை அரிய விஷயங்கள். இதுவரை எங்கும் எதிலும் படித்திராத, புதுச் செய்திகள்.
மதுக்கூர் - 3, மதுக்கூர் ரமேஷ்.

★ அறிஞர்களை அயர வைத்த டாக்டர். எட்கர் கேசி பற்றி, அறியாத அற்புதத் தகவல்களைத் தந்து எங்களை அயர வைத்துவிட்டது மார்ச் கோகுலம்!
மதுரை - 20, ஜோதி. குமரன்.

★ ஆழியின் முட்டைச் செய்திகள் சுவைக்கத் தகுந்தது சார்!
மொரப்பூர், சி. அருள்மணி.

★ 'தலைகீழ் தம்புசாமி'யைப் படித்ததும் இருபது ஜோக்குகளை ஒன்றாய்ப் படித்துச் சிரித்த திருப்தி ஏற்பட்டது!
கொங்கணாபுரம், வே. செந்தில் குமார்.

★ புவனை கலைச் செழியனின் "தண்டனை யாருக்கு" சிறுகதை அருமையாக இருந்தது. ஆழமான கருத்தைத் தத்ரூபமாகச் சொல்லிய விதம் அற்புதம்.

★ நான்கு உலகக் கோப்பைகளையும் ஒரு சேரத் திரட்டி எந்த இதழும் செய்யாத ஒரு சாதனையை ஏற்படுத்தி விட்டது கோகுலம்.
தக்கோலம், அ. முஸ்தபா.

எட்டாவது வள்ளல்!



சென்னையில் உள்ள மாநிலக் கல்லூரி. திறமையான மதிப்பெண் பெற்றிருந்தும், என்ன காரணமோ தெரியவில்லை, அந்த இளைஞன் கல்லூரியில் சேரத் தாமதமாகவே விண்ணப்பித்திருந்தான். சாதாரணமாக அப்படிப்பட்ட விண்ணப்பங்களை ஏற்கவே மாட்டார்கள். ஆனாலும், இளைஞனின் திறமை, மதிப்பெண்களைக் கருத்தில் கொண்டு, அவனுக்குக் கல்லூரியில் சேர இடம் தரப்பட்டது.

கல்லூரியில் மாணவர்களைச் சேர்ப்பது ஏற்கெனவே முடிந்து விட்டிருந்ததால் வருகைப் பதிவேடு என்னும், ''அட்டென்டென்ஸ் ரிஜிஸ்தரில்'', மாணவர்களின் பெயர்களை ஆங்கில அகரவரிசைப்படி எழுதி, எண்ணும் கொடுத்து விட்டிருந்தார்கள். தாமதமாக வந்து சேர்ந்த மாணவனின் பெயர் ஆங்கில 'ஏ'யில் தொடங்கியது. அதனால், எல்லோருடைய எண்களையும் திருத்தி எழுதி அறிவிக்க வேண்டியநிலை. கல்லூரி முதல்வர் சிந்தித்தார் எப்படி இதைச் செய்து முடிப்பது என்று.

நிலைமையை உணர்ந்து கொண்ட அந்த மாணவர், ''கவலை வேண்டாம், யாருடைய எண்ணையும் திருத்த வேண்டாம். 'ஜீரோ' எண் கொடுத்து என் பெயரை எழுதிவிடுங்கள்'' என்று தீர்வு சொன்னான். கல்லூரியில் அவன் எண் ஜீரோவாகவே இருந்தது!

இளைஞன் பிற்காலத்தில் தொழிலதிபராகி ஏராளமாகப் பொருளீட்டினான். ஈட்டிய அளவுக்கு மேல் பொதுப் பணிகளுக்காகவும், கல்வி வளர்ச்சிக்காகவும் அள்ளி அள்ளி வழங்கினான். தெய்வ நம்பிக்கை மிக்க அந்த இளைஞன், ராஜாஜி அவர்கள் எழுதிய 'ஆத்மசிந்தனை' நூலை ஒருமுறை படித்தார். 'தனி மனிதன் ஒழுக்கத்தைப் பேணி வளர்ந்தால், உலகமே நன்மை பெறும்' என்று அதில் எளிய முறையில் வலியுறுத்தப்பட்டிருந்த கருத்து அவரது

மனதைக் கவர்ந்தது. அந்த நூலில் இரண்டாயிரம் பிரதிகளை உடனே வாங்கி, தனது பொறுப்பில் இயங்கி வந்த கல்லூரிகளில் படித்து வந்த அத்தனை மாணவ மாணவிகளுக்கும் இலவசமாக வாங்கிப் படிக்க உதவினார். இவரது புத்தக ஈடுபாட்டை அறிந்த 'கல்கி' அவர்கள், தான் சென்னையில் ஏற்பாடு செய்திருந்த 'தமிழ்ப் புத்தகாலய மாநாட்டை' அவரைக் கொண்டே திறக்கச் செய்தார்.


தமிழில் கலைக் களஞ்சியத்தையும் சிறுவர் கலைக்களஞ்சியத்தையும் உருவாக்க தமிழ் வளர்ச்சிக் கழகம் அமைக்க முடிவெடுத்ததும் அதன் வளர்ச்சிப் பணிகளுக்காக பத்தாயிரத்து ஒரு ரூபாய் உடனே வழங்கி தன் ஈடுபாட்டைக் காட்டியவர் இந்தத் தொழிலதிபர்.


தொழில், கல்வி வளர்ச்சியோடு, இவருக்கு இசையிலும் அளவில்லாத ஈடுபாடு இருந்தது. சென்னை 'மியூசிக் அகாதமி' இசைவிழாவை ஒருமுறை துவக்கி வைத்தார். திருவையாறு தியாகராஜ ஆராதனையைக் கூட இவர் ஒருமுறை தலைமை ஏற்று நடத்தி வைத்திருக்கிறார். ஒரு இசைப் பள்ளியையும் இவர் தொடங்கினார்.

குழந்தைகளிடம் இவருக்கு அதிகமான அன்பு. தனது உறவினர் வீட்டுக் குழந்தைகளோடு, நண்பர்களின் குழந்தைகளுக்கும் அவர் வெளி நாடுகளில் இருக்கும்போது பரிசுகளையும், அழகிய வாழ்த்து அட்டைகளையும் அனுப்பிவைப்பார்.

இந்த இளைஞர் நோய்வாய்ப்பட்டுப் படுத்த படுக்கையாகக் கிடந்தபோது, காந்தியடிகள் இவர் ''நோய் நீங்கி வாழ வேண்டும்'' என்று தனது பிரார்த்தினைக் கூட்டத்தில் இவருக்காகப் பிரார்த்தித்தார்!

இவ்வளவு பெருமைகளுக்குரிய இந்த மனிதர் கொடை வள்ளல் அழகப்பர்தான். 'கல்வி' என்ற சொல்லும், கொடை என்ற சொல்லும் அகராதியில் இருக்கும் வரை, தனக்கென வாழாத இந்த எட்டாவது வள்ளலான அழகப்பரின் பெயர் நிலைத்திருக்கும்.








நயாகராவில் நடந்தவன்!

★ அமெரிக்காவில் பேரிரைச்சலுடன் பிரவாகமாகக் கொட்டும் நயாகரா நீர் வீழ்ச்சி உலகப் புகழ்மிக்கது. இதில் 100 அடி உயரத்தில் 900 அடி நீளத்துக்கு ஒரு கம்பியைக் கட்டி சார்லஸ் ப்ளாஸ்டின் என்பவன் ஒரு முனையிலிருந்து மறுமுனைக்கு நடந்தான். அதில் பலமுறை பல்டி அடித்தான். ஒரு நாற்காலியின் இரண்டு கால்களை மட்டும் அக் கம்பியின் மீது வைத்து நிறுத்தி, அதில் ஏறி அமர்ந்தான். கண்ணைக் கட்டிக் கொண்டும் பின்புறமாகவும் நடந்தான். பார்ப்பவர்கள் பயத்தால் கூச்சலிட்டார்கள்; சிலர் மயக்கம் போட்டு விழுந்தனர். ஒருமுறை ஒரு மனிதனையும் சுமந்து கொண்டு நடந்தான். அவன் பாதி வழியில் பயந்து அலறிய போது, ''பேசாமல் இரு. இல்லாவிடில் கீழே எறிந்து விடுவேன்'' என்றான் சார்லஸ் ப்ளாஸ்டின். அவன் பயத்தால் உறைந்து போய் சிறிதும் அசையவில்லை.

உலகின் மிகச் சிறந்த இந்த 'பாலன்ஸ' வித்தை நிபுணன் தன் 72வது வயதில் இயற்கையாக மரணமடைந்தான்.

- அ. ஷண்முகசுந்தரம், சிட்லபாக்கம்.

8 அடி மனிதரின் எலும்புக் கூடு!



★ அம்மை நோய்க்குத் தடுப்பு ஊசி முறையைக் கண்டுபிடித்தவர் எட்வர்டு ஜென்னர். ஒருநாள் அவரது மருத்துவ மனையில் ஆய்வு செய்து கொண்டிருந்தார். அப்போது அங்கே ஓ ப்ரயன் என்பவர் வந்து சேர்ந்தார். அவருக்கு எலும்புருக்கி நோய். அவரது உயரமோ எட்டு அடி!

அந்த எட்டடி மனிதரைப் பார்த்தவுடன் எட்வர்டு ஜென்னருக்கு ஒரு விசித்திரமான எண்ணம் உதித்தது! ''இந்த மனிதன் இறந்ததும் இவரது எலும்புக் கூடை காட்சிப் பொருளாக வைக்க வேண்டும்'' என்று முடிவு செய்தார்.

ஜென்னரின் இந்த எண்ணம் எப்படியோ ஓப்ரயனுக்குத் தெரிந்து விட்டது.

உடனே அவர் இரகசியமாக ஓர் ஏற்பாட்டைச் செய்தார். "தான் இறந்த பின் தன் உடலைப் புதைக்கக் கூடாது. தன் உடலை ஒரு மரப்பெட்டியில் வைத்து ஐரிஷ் கடலில் போட்டு விட வேண்டும்" என்பதே அந்த ஏற்பாடு!

இந்த ஏற்பாடு ஜென்னருக்கு எப்படியோ தெரிந்து விட்டது. நேரம் வரும் வரை காத்துக் கொண்டிருந்தார்.

ஓ ப்ரயன் இறந்தார். அவர் விருப்பப்படியே அவரது உடல் ஓர் மரப் பெட்டியில் அடைக்கப்பட்டு, ஐரிஷ் கடலில் விடக் கொண்டு செல்லப்பட்டது. ஜென்னர் சும்மா இருக்கவில்லை! காவல்காரனுக்கு அதிகமான பணத்தை லஞ்சமாகக் கொடுத்து அந்த எட்டடி மனிதரின் உடலைக் கொண்டு வந்து விட்டார்!

இப்போதும் கூட எட்டடி மனிதரான ஒப்ரயனின் எலும்புக் கூடு, 'இராயல் காலேஜ் ஆஃப் சர்ஜன்ஸ்' பொருட்காட்சி சாலையில், காட்சிப் பொருளாகத் தொங்கிக் கொண்டிருக்கிறது!

- பி. லதா, சென்னை - 114.



★ டெகாதலான் என்றால் என்ன? பயந்து விடாதீர்கள். கீழ்வரும் 10 நிகழ்ச்சி களைக் கொண்டதுதான் டெகாதலான்.

100 மீட்டர் ஓட்டம், 110 மீட்டர் தடை ஓட்டம், கோலூன்றித் தாண்டல், நீளம் தாண்டல், தட்டெறிதல், குண்டெறிதல், ஈட்டி எறிதல், 200 மீ ஓட்டம், 1500 மீட்டர் ஓட்டம்.

ஒரு நாளைக்கு ஐந்து நிகழ்ச்சிகளாக இரண்டு நாட்கள் இது நடைபெறும்.

- க. இரா. விஜயகுமார், செஞ்சி.



★ சிறுவர், சிறுமியரை மகிழ்ச்சியில் ஆழ்த்த பொழுதுபோக்கு வசதிகளுடன் ஒரு புதுமையான பஸ் தயாராகிறது. இதில் நூலகம், தொலைக்காட்சிப் பெட்டி, வீடியோ கருவி உபயோகமான தகவல்கள் படமாகியுள்ள வீடியோ நாடாக்கள், இன்டோர் கேம்ஸ் விளையாடும் இடம், அரட்டை அடிப்பதற்கான இட வசதி இவை எல்லாம் உள்ளன. இத்தகைய பஸ் இந்தியாவில் தயாராவது இதுவே முதல் தடவை. "நேரு பால் சமிதி" என்ற குழந்தைகள் நல்வாழ்வு சங்கம் இதற்கான முயற்சியை மேற்கொண்டுள்ளது. புது தில்லியில் ஒவ்வொரு வட்டாரத்துக்கும் ஒவ்வொரு நாள் சென்று குழந்தைகளை மகிழ்விக்க உள்ளது. இது! நம்ம ஊருக்கு எப்ப வருமோ?

- தக்கோலம் முஸ்தபா.



★ மாபெரும் இதிகாசமான மகாபாரதத்தைப் பற்றி நாம் யாவரும் கேள்விப் பட்டிருக்கிறோம். ஆனால், மகாபாரதத்தின் உண்மையான பெயர் என்ன தெரியுமா? "ஜெய சம்ஹிதா" ஆகும்.

- ஆர். அ. சுப்ரமணியன், தூத்துக்குடி - 1.

பாரதன் அச்சகத்தில் பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிடுபவர் : வி. முரளி. ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை - 600 032. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2344145; சர்க்குலேஷன் மானேஜர் : 2344190; விளம்பரம் - சந்தா : 2344157; டைரக்டர் : 2341543.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 36/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 140/-; விமானத் தபால் : ரூ. 360/-.
ஆறுமாதச் சந்தா - உள்நாடு : ரூ. 18/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 70/-; விமானத் தபால் : ரூ. 180/-



REGISTERED NO. TN MS (E) 281
Registered as Newspaper in Srilanka

